# ஏ.ஏ.ஹெச்.கே.கோரி சிறுகதைகள்

(பகுதி 3)

ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

# ஏ.ஏ.ஹெச்.கே.கோரி சிறுகதைகள்

(பகுதி 3)

ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

நிலா புக்ஸ்

முகவரி

Nilacharal Ltd
18 Collingwood Road
Crawley
RH10 7WG
UK
E-mail: team@nilacharal.com

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | ஏ.ஏ.ஹெச்.கே.கோரி சிறுகதைகள் (பகுதி 3) |
| ஆசிரியர் | : | ஏ.ஏ.ஹெச்.கே.கோரி |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பகம் | : | நிலாச்சாரல் லிமிடட் |
| காப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பாசிரியர் | : | நிலா |
| பதிப்பு எண் | : | 1.0W |
| காலம் | : | டிசம்பர் 2012 |
| Wrapper design | : | Fairy |


**"உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் சமுதாயத்திற்குத் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வாய்ப்பளிப்பதும், வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும், வருங்கால சந்ததிகளுக்குத் தமிழ் இலக்கியப் பொக்கிஷங்களை பாதுகாத்துத் தருவதுமே 'நிலா புக்ஸ்'-ன் இலட்சியம்"**


**Nilacharal Ltd**
**18 Collingwood Road**
**Crawley**
**RH10 7WG**
**UK**
**E-mail: team@nilacharal.com**

**TERMS OF USE:**

- You may not sell, exchange, distribute or otherwise transfer this book in any form what so ever.
- You may make one (1) printed copy of this book for your personal use. You may not sell, exchange, distribute or otherwise transfer this copy to any other person for any reason.
- You may make one (1) electronic copy each of this book for archival purposes. Except for the single (1) permitted print copy and the single (1) archival copy, you may not make any other copies of this book in whole or in part in any form.

*******

**உபயோக நிபந்தனைகள் :**

- நீங்கள் இந்த நூலை எந்த வடிவத்திலும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு எந்த விதத்தில் கைம்மாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்த நூலின் ஒரு (1) பிரதியை உங்கள் சொந்த உபயோகத்துக்கு அச்சிட்டுக் கொள்ளலாம். அந்த அச்சுப்பிரதியை எந்த ஒரு நபருக்கும் எக்காரணம் கொண்டும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு விதத்தில் கைமாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்நூலின் ஒரு (1) மின் பிரதியை ஆவணத்திற்காக உருவாக்கிக் கொள்ளலாம். ஒரே ஒரு (1) அனுமதிக்கப்பட்ட அச்சுப் பிரதியையும் ஒரே ஒரு (1) ஆவணப் பிரதியையும் தவிர இந்நூலின் முழுதையுமோ அல்லது பாகத்தையோ எவ்விதத்திலும் வேறு பிரதிகள் எதுவும் எடுக்கக்கூடாது.

*******

# உள்ளடக்கம்


அற்புதங்கள் அழகானவை ........ 1

இருவர் எழுதிய கவிதை ........ 6

உறவு வரும், ஒருநாள் பிரிவு வரும் ........ 12

கரிசல் காட்டுக் கதை சொல்லி ........ 20

குடிமக்கள் ........ 27

சின்னதாய் ஒரு பெருநாள் ........ 32

நேற்று இன்று நாளை ........ 37

மது ........ 41

மழலை எல்லாமே அழகு ........ 49

மறைமுகமாய் ஒரு நேர்முகம் ........ 53

மனிதர்கள் வசிக்கிற ஊர் ........ 56

ஹிந்துஸ்தான் ........ 65

மஹாத்மா காந்தி மார்க்கெட் ........ 68

தலாக் தலாக் தலாக் ........ 79

ஏற்றமிகு ஏத்தம்பழம் ........ 85

# அற்புதங்கள் அழகானவை

மஹாராஜ நகர் வீடு கையை விட்டுப் போய்விட்டது என்பதை இன்னுங்கூட நம்ப முடியவில்லை. ஆனால், ஆண்டவன் அருளால் ஓர் அற்புதம் நடக்கும். இன்னும் ஒன்றிரண்டு வருஷங்களில் அந்த வீட்டை மீட்டு விட முடியுமென்கிற நம்பிக்கை மட்டும் வலுவாய் இருக்கிறது. ஸொஸைட்டியில் லோன் போட்டு, சிமென்ட் மற்றும் வியர்வைக் கலவையைக் கொண்டு வாப்பா செங்கல் செங்கலாய்க் கட்டின வீடு.

மெட்ராஸ் ஸ்டேட் எலக்ட்ரிஸிட்டி போர்டில், பிற்பாடு தமிழ்நாடு மின் வாரியத்தில் அஸிஸ்ட்டன்ட் இஞ்ஜினியராயிருந்து, பிறகு டிவிஷனல் இஞ்ஜினியராய் உயர்ந்து, நிறைவாய் ஸூப்ரன்டண்டிங் இஞ்ஜனியராய் ரிட்டயரான வாப்பாவின் கைகள் மட்டும் கொஞ்சம் எக்ஸ்ட்ரா நீளமாய் இருந்திருந்தால், எழுபதுகளில் சென்னை அண்ணா நகரில் ஒரு லட்சத்துக்கு ரெண்டு ப்ளாட் என்று விற்ற பொற்காலத்தில் அநாயாசமாய் ஓர் அரை டஜன் ப்ளாட்டுகள் வாங்கிப் போட்டு, மத்திய சென்னையில் என்னையொரு குறுநில மன்னனாய்க் கிரீடம் சூட்டி விட்டுப் போயிருப்பார். பிற்காலத்தில், பிஸினஸ் நஷ்டத்தை சரிகட்ட நான் நம்ம மஹாராஜ நகர் வீட்டைக் காவு கொடுக்கவும் நேர்ந்திருக்காது.

எழுபதுகளில் திருநெல்வேலி & பாளையங்கோட்டையின் கிழக்கு எல்லை மஹாராஜ நகர்தான். போஸ்ட் ஆஃபீஸ் இருந்தது, ஸ்டேட் பாங்க் இருந்தது, கோலப் புள்ளிகளாய்ச் சில வீடுகள் இருந்தன. ஸ்டேட் பாங்க் ஆஃபீஸர்ஸ் காலனி இருந்தது. மற்றபடி எல்லாம் காலி மனைகள்தான்.

ஸ்டேட் பாங்க் ஆஃபீஸர்ஸ் காலனியை ரெண்டாய்ப் பிரிக்கிற பாதையில் புகுந்தால், தையல் நாயகித் தெரு. தையல் நாயகித்தெருவில் ஒரே வீடு நம்ம வீடுதான். பாளையங்கோட்டையில் வாப்பா அஸிஸ்ட்டன்ட் இஞ்ஜினியராயிருந்த போது பிள்ளைகளெல்லாம் இக்னேஷியஸ் கான்வென்ட்டில் படித்துக் கொண்டிருந்த அரும்புப் பருவம்.

தினமும் ராத்திரி படுக்கப் போகும் முன்னால் சிலுவை போட்டு, முட்டங்காலில் அன்றைய தினம் தெரிந்தோ தெரியாமலோ செய்த தப்புகளையெல்லாம் ஒப்பித்து, ஜீஸஸ் மன்னித்த பின்னால்தான் சகோதரிகள் தூங்குவார்கள்.

நூருன்னிஸா ஒரு ஸ்பெஷல் ஜீஸஸ் பைத்தியம். அதோடு, நூருன்னிஸாவும் நானும் ரேடியோப் பைத்தியங்கள். ரேடியோ உலகத்தில் இலங்கை வானொலியின் சர்வாதிகார ஆட்சி நடந்து கொண்டிருந்த விசேஷமான காலகட்டம் அது. மயில்வாகனனின் மணிக்குரலில் கோல்கேட் இசைக் களஞ்சியம் ஒலிபரப்பானது திங்கட்கிழமையா வெள்ளிக் கிழமையா என்பது இப்போது நினைவில்லை. ஆனால், நாலரை மணிக்கு இசைக் களஞ்சியம் கேட்பதற்குக் கோனார் ஒன்றை மாட்டு வண்டியில் நிலை கொள்ளாமல் வந்து சேர்ந்து, வீடு வந்ததும் கோஸ்

பெட்டியிலிருந்து குதித்து ஓடி வந்து ரேடியோ போட்டது நினைவிருக்கிறது. அது, தாய்வழிப் பாட்டனாரின் புராதன வீடு.

கொஞ்சம் பெரிய பிள்ளைகளான பிறகு, ஹிந்திப் பாடல்கள் மேல் ஒரு மொஹபத் ஏற்பட்டுப் போனபோது, நூரிக்கும் எனக்கும் புதன் கிழமை ராத்திரி எட்டு மணிக்கு அமீன் ஸயானியின் அமர்க்களத்தில் பினாக்கா கீத் மாலா கேட்டால்தான் ராத்திரி சாப்பாடு இறங்கும்.

டிவிஷனல் இஞ்ஜினியராய் வாப்பா ஊட்டியில் இருந்த போது, ஊட்டி அரசினர் கலைக் கல்லூரியில் நான் பி யூ ஸி. அக்கா பி எஸ் ஸி. நூரி, ஃபைரோஸ், குல்நார் எல்லா சிறுமிகளும் பெத்லஹேம் கான்வென்ட். குளிருக்காக, ஊட்டியில் வீட்டுக்குள்ளே செருப்புக் கால்களோடு தான் எல்லோருமே புளங்குவோம். வாப்பாவுக்கு விசேஷமாய் மரச் செருப்பு. இதிகாச கால காவித் துறவிகள் மாதிரி முரட்டு மரக்கட்டைச் செருப்பு.

வாப்பாவுடைய அறை மாடியில். மாடிக்குப் போக மரத்திலான படிக்கட்டு. படிக்கட்டின் அடிவாரத்தில் ரேடியோ. நூரியும் நானும் ரேடியோவோடு அந்நியோன்னியமாகி, பினாக்கா கீத்மாலாவோடு ஒன்றிப் போயிருப்போம். இசையின் ஓசை மேலெழும்பிப் போய் மாடியறையை எட்டிவிட முடியாதபடி ஒரு பாதுகாப்பான வால்யூமில் ரேடியோ பாடிக்கொண்டிருக்கும்.

எங்கள் கெட்ட நேரம், அப்போதான் வாப்பாவுக்குப் பசியெடுக்கும். டக் டக் கென்று படியிறங்கி வருவார். ஒவ்வொரு "டக்"குக்கும் ரேடியோவின் வால்யூம் குறைந்து கொண்டே வந்து, கடைசி "டக்"கும் ரேடியோ அணைக்கப்படுகிற "கடக்"கும் ஐக்கியமாகிவிட, வாப்பா ஹாலுக்குள்ளே பிரவேசிக்கிற போது நாங்கள் கள்ளங் கபடமற்ற பிள்ளைகளாய்ப் பாடப் புஸ்தகங்களின் மேல் கவிழ்ந்து கிடப்போம். வாப்பாவுக்கு முகம் மறைத்து அக்கா சிரித்துக் கொண்டிருப்பது உணரப்படும். அந்த ரேடியோவுக்கு வாயிருந்தால் அதுவும் கூடச் சேர்ந்து சிரித்திருக்கும். ஆமா, ரேடியோவுக்கு வாய் இல்லையா என்ன? மண்டு, ரேடியோவுக்கு வாய்த்திருப்பதே வாய் ஒண்ணுதானேடா!

சினிமா விஷயத்தில் வாப்பா கொஞ்சம் தாராளம். பாளையங்கோட்டையில் ஏ.இ.யாயிருந்தபோது தாத்தா வீட்டுக்கு முன்னால் தான் மின்சார இலாக்கா ஜீப் நிற்கும். நூரி என்னிடம் ஓட்டமாய் வந்து, "நாளக்கி க்லாஸ் டெஸ்ட் ஏதாவது இருக்கா" என்று கேட்பாள். இல்லையென்று இவன் சொல்ல வேண்டுமே என்கிற பதைப்பு குரலில் வெளிப்படும். அந்தப் பதைப்புக்கு அவசியமே இல்லை. என்னுடைய பதில் எப்போதுமே "இல்லை" என்பதாய்த்தானிருக்கும்.

திருநெல்வேலி டவுனை நோக்கி ஜீப் பறந்து போய் ரத்னா டாக்கீஸ், அல்லது ராயல் டாக்கீஸ் முன்னே போய் நிற்க, ராஜமரியாதையோடு நாங்கள் முதல் வகுப்பில் கடைசி வரிசையில் உட்கார்த்தி வைக்கப்பட, க்யூவில் நின்று டிக்கட் வாங்கிப் படம் பார்க்க வந்திருக்கிற அப்பாவி ஜனங்களெல்லாம் முகந்திருப்பிப் பார்த்துப் பொறாமை புரிவார்கள். பதவியை துஷ்ப்ரயோகம் செய்கிற தப்பான செயல் இது என்றால், தன்னுடைய பதவிக் காலத்தில் வாப்பா செய்த ஒரே தப்பான காரியம் இதுதான். இடைவேளையில், முறுக்கு, சிங்கம் மார்க் சோடா கலர் பானங்கள் & மானேஜர் உபயம். இந்தத் திரை விருந்தும் கூட, வாப்பா ஹஜ்ஜுக்குப் போய்வந்த பின்னால் நின்று போனது.

பாளையங்கோட்டையில் ஏ இ யாகப் பணியைத் துவங்கின வாப்பா, எஸ் இ யாகத் திரும்பவும் பாளையங்கோட்டைக்கே வந்து சேர்ந்து, ரிட்டயர் ஆனார். ரிட்டயர் ஆன பின்னால்தான் மஹாராஜ நகர் வீட்டை முடித்துக் குடி பெயர வாய்த்தது. பிள்ளைகளுக்கெல்லாம் கல்யாணமாகி, நான் சென்னையில் ஸெட்டில் ஆன போது, வீட்டை வாடகைக்கு விட்டு விட்டுப் பெற்றோர் சென்னைக்கு வந்து விட்டார்கள். பிஸினஸ் நொடித்துப் போய், பாங்க்கில் வைத்துக் கடன் வாங்கின வீட்டை மீட்க வசதியில்லாமல், அந்த பாங்குக்கே வீட்டைத் தாரை வார்த்துத் தர வேண்டிய நிர்ப்பந்தம் உருவானதை மெல்ல வாப்பாவின் காதில் போட்ட போது, வெகுண்டெழாமல் வாப்பா அதை ஸ்போர்ட்டிவ்வாய் எடுத்துக் கொண்டாலும் அவருடைய மனசு என்ன பாடு பட்டிருக்கும் என்பதை உணர முடிந்தது.

வாப்பா காலமாகி இப்போது ரெண்டு வருஷம் ஓடிப் போய்விட்டது. தான் வியர்வை சிந்திக் கட்டின வீட்டை இந்தப் பயல் இப்படி வியர்த்தம் பண்ணிவிட்டானே என்கிற வருத்தத்தோடு தன் பயணப்பட்டிருப்பார். அற்புதம் ஒன்று நிகழ்ந்தால்தான் வீட்டை விரையில் மீட்டு, வாப்பாவின் மண்ணறையில் போய் மனங்குளிர முடியும். அற்புதம் நிகழுமென்கிற நம்பிக்கை இருக்கிறது. அவன் அருள்புரிந்தால் அற்புதங்களுக்கா பஞ்சம்!

பாளையங்கோட்டைப் பக்கம் போய்ப் பலப்பல வருஷங்கள் ஆகிவிட்டன. மஹாராஜ நகரில் இப்போ காலி மனைகளே இல்லை என்று சொன்னார்கள். கிழக்கே, ரயில் தண்டவாளத்தைத் தாண்டி ஊர் கன்னா பின்னாவென்று விஸ்தாரமாகி விட்டதைச் சொன்னார்கள். பாங்க் காரர்கள் போட்டு வைத்திருக்கிற பூட்டுக்கள் நம்ம வீட்டிலும் கேட்டிலும் தொங்கிக் கொண்டிருப்பதையும் சொன்னார்கள். வீட்டை மீட்டுக் கொள்கிற நல்ல காலம் விடிகிற வரை அந்தப் பக்கமே போகக் கூடாது என்கிற வைராக்யத்திலிருக்கிறேன்.

இப்போது தையல் நாயகித் தெரு வளர்ந்து வயசுக்கு வந்திருக்கும். நம்ம வீட்டை ஒட்டியிருந்த காலி ப்ளாட்டில் குடிசை போட்டிருந்த சங்கரம்மா குடும்பம் புலம் பெயர்ந்திருக்கும். பஸ் ஸ்டாப்புக்குப் போகிற போதும் வருகிறபோதும் நாங்கள் கடந்து போகிற ஸ்டேட் பாங்க் ஆபீஸர்ஸ் காலனியின் முதல் வீட்டில், அந்த ஃபாரஸ்ட் ஆஃபீஸரின் நாலு அழகுப் பெண்களுக்கும் கல்யாணமாகிக் குடும்பங்கள் பெருகியிருக்கும்.

ஃபாரஸ்ட் ஆஃபீஸருக்குத் தூத்துக்குடியில் வேலை. ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் வந்து குடும்பத்தோடு இருந்து போகிறவர் என்பது தெரியும். மற்றபடி அந்தக் குடும்பத்தோடு பழக்கம் இல்லை.

அந்த வீட்டு கேட்டுக்குள்ளே அம்பாஸடர் கார் ஒன்று ஆடாமல் அலுங்காமல் நிற்கும்.

வாப்பாவுடைய ஸ்டாண்டர்டு 10 கார், அவர் ரிட்டயர் ஆனவுடன் கைமாறிப்போய், டவுன்பஸ்தான் ஒரே வாகனம் என்று ஆகிப்போனது.

கல்யாணமாகிப் போய்க் கைக்குழந்தையோடு அன்னை இல்லத்துக்கு வந்திருந்த நூருன்னிஸா, ஜங்ஷனுக்கு ஷாப்பிங் போக வேண்டுமென்று சொல்ல, என்னுடைய தலைமையில் எல்லோரும் கிளம்பினோம்.

*ஃபாரஸ்ட் ஆஃபீஸர் வீட்டைக் கடந்து கொண்டிருந்த போது வெராண்டாவில் அந்த நாலு பெண்களும் அம்மாவும் இருந்தது தெரிந்தது. பக்கவாட்டில் அம்பாஸடர் கார்.*

*"தூறல் போடுதுண்ணே" என்றாள் நூருன்னிஸா.*

*"சின்னத் தூறல்தான், மழை வராது" என்று சமாதானப்படுத்தினேன்.*

*"இந்த வீட்ல அந்தக் கார் சும்மாவே நிக்கிது. குடுத்தாங்கன்னா எவ்ளோ நல்லாயிருக்கும்! மெல்ல கேட்டுப் பாக்கறியா?"*

*"சீ, ஔராத. அவங்களுக்கும் நமக்கும் நல்லா பழக்கம் கூடக் கெடையாது. சட்டுன்னு போய்க் கார் கேட்டா என்ன நெனப்பாங்க! மூஞ்சியில அடிச்ச மாதிரி நோன்னு சொல்லிருவாங்க."*

*"அதெல்லாம் சொல்ல மாட்டாங்க. பார், அவங்க எல்லார் கண்ணும் நம்ம மேலதான் இருக்கு. நா போய்க் கேக்கறேன் பார்."*

*என்னையும் இழுத்துக் கொண்டு நூரி அந்த கேட்டின் முன்னே போய் நின்றாள்.*

*வெங்கட்ராமனோ வெங்கடகிருஷ்ணனோ என்று ஒரு பெயர்ப்பலகை உள்வாயிலில் தெரிந்தது.*

*"வந்து.... ஜங்ஷன்... தூறல்.... ஒங்கக் காரு...." என்று கிழக்குத் தொடர்ச்சி மலை மாதிரி நூரி இடைவெளிவிட்டு விட்டு வார்த்தைகளை விடவும் அந்தப் பெண்மணி பிலுபிலு வென்று பிடித்துக் கொண்டாள்.*

*"அதுக்கு ஏம்மா இவ்ளோ யோசன பண்றீங்க! இந்த வழியாத்தான் நீங்க போறீங்க வர்றீங்க, கார் வேணும்னு கேட்டா ஆஹா கொண்டு போங்களேன்னு சொல்லப் போறோம். அவங்களக் கூப்புடுங்களேண்டீன்னு இதுகள்ட்ட சொன்னா, கொரல் குடுக்க வெக்கப்பட்டுக்கிட்டு நிக்கிதுக. சும்மா நிக்கிற கார், நீங்க யூஸ் பண்ணினா தேஞ்சா போயிரப் போகுது? தம்பி, சாவி இந்தாங்க. ஒங்களுக்கு எப்ப வேணும்னாலும் உரிமையோட வந்து சாவியக் கேட்டு வாங்கிக்குங்க. அப்போதான் எங்களுக்கு சந்தோஷம். என்ன?"*

*தூறல் வலுத்து மழையாய்ப் பெருகியது. இப்படிப்பட்ட உன்னத மாந்தர்கள் கைக்கெட்டுகிற தொலைவில் ஜீவித்திருக்கும் போது மழைக்கென்ன மனக்குறை!*

*ராத்திரி சாப்பாட்டு வேளையில் வாப்பா ஒரு பட்டாசு கொளுத்திப் போட்டார்.*

*"இந்த ஃபாரஸ்ட் ஆஃபீஸர் வெங்கட் வூட்ல ஒரு கார் நின்னுச்சே, அது இப்ப இல்லியா?"*

பொசுக்கென்று எனக்குப் புரையேறி விட்டது. கார் கடன் வாங்கின கதை தெரிந்தால் வாப்பா கோபித்துக் கொள்வார் என்று தோணமலேயே போய்விட்டதே!

"கார் அங்கதானே வாப்பா நிக்கிது...." என்று நூருன்னிஸா முணுமுணுத்து வைத்தாள்.

"இருக்கா! சாயங்காலம் இல்லியே?"

"வந்து.... சாயங்காலம் அவங்க எங்கயாவது போயிருப்பாங்க."

"எங்க போனாங்க, எல்லா டிக்கட்டும் வூட்லதான இருந்துச்சு! சாயங்காலம் நா அந்த வூட்டுக்குப் போயிருந்தேனே!"

எனக்குத் திரும்பவும் புரையேறப் பார்த்தது....

"வாப்பா.... நீங்க.... அந்த வூட்டுக்கு...." என்று நூரி மென்று விழுங்கினாள்.

"போனேன். சும்மாப் போகல. அஃபிஷியலாப் போனேன். அந்த ஃபாரஸ்ட் ஆஃபீஸர் மேல எவனோ மொட்டப் பெட்டிஷன் போட்டிருக்கான். இன்கம் டாக்ஸ்லயிருந்து ரெய்டுக்கு வந்துட்டாங்க. சாட்சிக்கி என்ன வந்து கூப்ட்டாங்க. எனக்குத் தெரிஞ்ச வரக்யும் வெங்கட் நேர்மையான ஆஃபீஸர்தான். அத நா இவங்ககிட்ட சொல்ல முடியுமா? கம்ப்ளீட்டா ஸர்ச் பண்ணாங்க. ஆனா ஒண்ணுமே சிக்கல. ரெய்டு பார்ட்டில ஒரு ஆஃபீஸர் என்ட்ட ரகசியமாக் கேட்டார், வெங்கட் கார் வச்சிருக்காரான்னு. நா வெளிய பாத்தா, காரக் காணல. ஆமான்னு சொல்லவா இல்லன்னு சொல்லவான்னு எனக்குத் தெரியல. நிச்சயமாத் தெரியாம நா ஆமான்னு சொல்லப் போக, அது அந்த நல்ல மனுஷனுக்குப் பாதகமாப் போயிரக்கூடாதே! கார் இருக்கறதாத் தெரியலன்னுட்டேன். இப்பப் பாத்தா, கார் நிக்கிது. இருவத்தி நாலு மணி நேரமும் அங்கேயே நிக்கிற அந்தக் கார், அந்த மூணு மணி நேரம் எங்கேயோ போய்ட்டு வந்து அந்த அழகான குடும்பத்தைக் காப்பாத்தி விட்டிருக்கு பார், இதான் அல்லாவோட வேல!"

வாப்பா இப்போது இல்லை. அந்த வெங்கட் குடும்பம் இப்போது எங்கேயோ!

வருஷங்கள் பல கடந்தும் அன்றைய நிகழ்வுகளை இன்றைக்கு நினைத்துப் பார்க்கிறபோது திரும்பவும் ஒரு மனச்சிலிர்ப்பு.

அன்றைக்கு நடந்தது, நல்லவர்களை ஆண்டவன் என்றைக்கும் கைவிடமாட்டான் என்பதைக் காட்டுகிற ஓர் அற்புதம்தான். அவன் அருள் புரிந்தால் அற்புதங்களுக்கா பஞ்சம்!

(யுகமாயினி, டிசம்பர் 2008)

# இருவர் எழுதிய கவிதை

குழந்தைக்கு உடம்பு சரியில்லை.

காய்ச்சல்.

அஞ்சு நாளாய்க் காய்ச்சல்.

விட்டு விட்டுக் காய்ச்சல்.

அக்கம் பக்கத்தில் டாக்டர் யாரும் இருப்பதாய்த் தெரியவில்லை.

திண்டுக்கல் ரோடுக்குத்தான் குழந்தையைத் தூக்கிக் கொண்டு போக வேண்டு மென்றான்.

ஆனால் அவனுக்கு நேரமில்லை.

'இப்படியே அஞ்சு நாள் ஆயிருச்சு பார், சாயங்காலமா நீயே ஒரு ஆட்டோ புடிச்சிட்டுப் போய்ட்டு வந்துரேம்மா. புள்ள கஷ்டப்படறான் பார்' என்றான் அவன்.

'புள்ள மட்டுமா கஷ்டப்படறான்? நானுந்தான்' என்றாள் அவள்.

"மெட்ராஸ்ன்னா எந்த மூலையாயிருந்தாலும் நா தனியாப் போய்ட்டு வந்துருவேங்க. இங்க மதுரக்கி வந்து ஒரு மாசமாச்சு. ஒரு மாசமா நா வீட்டுக்குள்ளயே தான் அடஞ்சு கெடக்கிறேன். நீங்க எங்கயாவது வெளிய கூட்டிக்கிட்டுப் போனீங்களா? இப்ப திடீர்னு திண்டுக்கல் ரோடுக்குப் போடீன்னா எப்படிப் போறதாம்?"

"ஒன்ன நா போடீன்னா சொன்னேன்? அநாவசியமாத் தீரப்பழிய எம்மேல சொமத்தற பார். நீ தான் பாக்கறயில்ல, காலைல எட்டு மணிக்கி டெய்லி நீ கட்டிக்குடுக்கற உப்புமாவத் தூக்கிக்கிட்டு...."

"உப்புமா இல்ல, ரவாக்கேசரி."

"ஏதோ ஒண்ணு. போனா, ராத்திரி வீட்டுக்கு வர ஒம்போது ஆயிருது."

"புரியுது. எனக்கு சமையல் தெரியலன்னு குத்திக் காட்றிங்க. என்னங்க செய்யறது, நா எங்க வீட்ல செல்லமா வளந்த பொண்ணு. நீங்க எங்கண்ணுல படுவீங்கன்னு கண்டேனா, என்ன லவ் பண்வீங்கன்னு கண்டேனா, கட்ன பொடவையோட வீட்ட விட்டு வெளிய வான்னு நீங்க கூப்புடுவீங்கன்னு கண்டேனா!"

*“கட்ன பொடவையோட வான்னா நீ தான் ஒரு ஜம்போ ஸூட்கேஸையேத் தூக்கிட்டு வந்துட்டியே!”*

*“எல்லாப் பொடவையுமே நா கட்ன பொடவை தானேங்க! கையப்புடிச்சிக் கோயமுத்தூருக்குக் கூட்டிக்கிட்டுப் போனீங்க. அந்த ஊர் பழகறதுக்குள்ள மதுரக்கி வந்தாச்சு.”*

*“என்னம்மா செய்யச் சொல்ற, என்னோட வேல அப்படி. இந்தக் கம்ப்பெனி அப்படி. வருஷத்துக்கொரு ட்ரான்ஸ்ஃபர். ஒரு ஸண்டே கூட ரெஸ்ட் கெடையாது.”*

*“தெரியுதில்ல, அதுக்குள்ள அப்பா ஆகறதுக்கு என்ன அவசரம் ஒங்களுக்கு? ஒரு ரெண்டு வருஷம் ஃப்ரீயா இருந்துட்டு அப்பறமா கொழந்த பெத்துக்கிட்டிருக்கலாம்ல?”*

*“அடிப்பாவி, தாய்க்குலத்தையே களங்கம் பண்றியே. தாய்மையில தான் பெண்மை பூரணத்வம் பெறுதுன்னு ஒவ்வொரு பொண்ணும் அம்மாவாக அவசரப்படுவாளாம். நீ என்னடான்னா....”*

*“அந்த அவசரமெல்லாம் எனக்கில்ல. ப்ராக்டிக்கலாகவும் கொஞ்சம் யோசிக்ணுங்க. இப்பப் பாருங்க, ஒங்களுக்குக் கஷ்டம். எனக்குக் கஷ்டம், பாவம், இவனுக்கும் கஷ்டம்.”*

*“சரி, இப்ப இவன என்ன செய்யணுங்கற?”*

*“என்ன செய்யணுங்கறவா? நா பெத்த புள்ளயாச்சே, என் செல்லமாச்சே, அந்த திண்டுக்கல் ரோடு க்ளினிக் அட்ரஸ் குடுங்க, நீங்க ஆஃபீஸ்லயிருந்து ஃபோன் பண்ணி, சாயங்காலம் ஆறு மணிக்கி அப்பாய்ன்ட்மென்ட் ஃபிக்ஸ் பண்ணிருங்க. நா ஆட்டோ புடிச்சிப் போய்ட்டு வர்றேன். நீங்க பத்தரமா ஒம்போது மணிக்கி வீடு வந்து சேருங்க. ஆமா, இந்த மதுரயில குதிர வண்டியெல்லாம் இப்ப கெடையாதாமா?”*

*“குதிரயெல்லாம் கொள்ளு திங்கப் போயிருச்சாம். நீ ஆட்டோலயே போ.”*

*ஆட்டோ பிடித்துக் கொண்டு ஆறு மணிக்கு திண்டுக்கல் ரோடு க்ளினிக்குக்கு வந்து சேர்ந்தாள்.*

*குழந்தைக்கு வயசென்ன என்று கேட்ட நர்ஸிடம் ‘ஒண்ற வயசு’ என்றாள்.*

*அடுத்து, நர்ஸ் குழந்தையின் பெயரைக் கேட்டாள்.*

*இவள், பெயரைச் சொல்ல, நர்ஸ் ஆச்சர்யப்பட்டாள்.*

*“முஸ்லிம் பேராயிருக்கு?”*

“ஆமா. முஸ்லிம் பேர்தான்.”

“நீங்க பொட்டு வச்சிருக்கீங்க?”

“வச்சா என்ன?”

“இல்ல, முஸ்லிம்ஸ் பொட்டு வக்ய மாட்டாங்க....”

“ஆமா, வக்ய மாட்டாங்க.”

“அப்ப, நீங்க முஸ்லிம் இல்லியா?”

“இல்ல.”

இவளுக்கு எரிச்சலாயிருந்தது. எதுக்கு இந்த அநாவசியக் குறுக்குக் கேள்விகள்?

பொட்டு வைத்த முகமோ, கட்டி வைத்த குழலோ என்று அவன் இவளைக் கட்டிக் கொண்டு பாடின முதலிரவை யெல்லாம் இந்த நர்ஸிடம் சொல்லிக் கொண்டிருக்கவா முடியும் என்று இவள் கோபமடையப் பார்த்தபோது, ‘ஒங்களுக்கு எதுக்கு ஸிஸ்டர் இந்த வெட்டிக் கேள்வியெல்லாம். பேசாம வேலயப் பாருங்க’ என்று லேடி டாக்டரின் குரல், நர்ஸை அப்புறப்படுத்தியது.

குழந்தையைப் பரிசோதித்த லேடி டாக்டர், ‘யூரின் கலெக்ட் பண்ணிக் குடுங்க, டெஸ்ட் பண்ணிப் பார்க்கணும்’ என்றாள்.

‘பாத்ரூம் எங்கயிருக்கு’ என்று நர்ஸிடம் இவள் கேட்டதற்கு, ‘பாத்ரூம் பெரிய டாக்டர் ரூம்ல இருக்கும்மா’ என்று பதில் வந்தது.

“கொழந்தக்கி யூரின் கலெக்ட் பண்ணத்தானே? வெளிய போய், அப்படியே ரோடோரமா செய்யுங்க.”

“ஐயே, வெளியவா, போற வர்றவங்கல்லாம் பாக்கற மாதிரியா!”

“ஒங்கக் கொழந்த தானேம்மா?”

“ஆமா, அதுக்கு, ரோட்ல வச்சா இதெல்லாம் செய்ய முடியும்?”

“நா வேணா செய்யட்டுமா?”

“வேணாம், வேணாம், நானே செய்யறேன்.”

குழந்தையின் நிக்கரைக் கழட்டி, உள்ளேயிருந்த பாம்ப்பரைக் கழட்டி, முக்கால் நிர்வாணமாய்க் குழந்தையையும் பாட்டிலையும் தூக்கிக் கொண்டு வெளியே போனாள்.

ஆள் நடமாட்டம் குறையக் காத்திருந்தாள்.

நடமாட்டம் குறையக் காணோம்.

‘என்ன மேடம், இன்னும் முடியலியா?’ என்று வாசலில் நின்று குரல் கொடுத்த நர்ஸிடம், ‘இந்தா ஆயிருச்சு நர்ஸ்’ என்றவள், துணிந்தவளுக்கு வீதியே வெஸ்ட்டன் டாய்லட் என்று பாட்டிலின் முகப்பைக் குழந்தையின் அடிவாரத்தில் ஏந்தி, ‘ஷ்ஷ்ஷ்’ என்றாள்.

பாரிஸ் நகரத்தில் ஒரு பிரபலமான சிலை இருக்கிறதாம், ஒரு சின்னஞ் சிறுவன், ஒயிலாய் இடுப்பில் கை வைத்துக் கொண்டு ஸ்டைலாய் சிறுநீர் பெய்கிற மாதிரி.

அது பெரிய டூரிஸ்ட் அட்ராக்ஷன் என்றும், அந்தப் பக்கமாய்ப் போகிறவர்களெல்லாம், அந்தச் சிறுநீர்ச் செல்வனுக்குப் பக்கத்தில் நின்று ஃபோட்டோ எடுத்துக் கொள்வார்களென்றும் அவன் சொல்லியிருக்கிறான்.

அவனே தான் இன்னொன்றையும் சொன்னான்.

ஏர் இண்டியா மஹாராஜா, அந்த சிலைக்குக் கீழே குடை பிடித்துக் கொண்டு நிற்கிற மாதிரி விமான நிறுவனம் விளம்பரம் வெளியிட, இந்தியப் பண்பாடு களங்கப்பட்டுப் போனதாய் லோக்கலாய்க் கூக்குரல்கள் எழுந்து, ஏர் இண்டியா அந்த விளம்பரத்தை வாபஸ் வாங்கிக் கொண்டதாம்.

இந்தியப் பண்பாட்டோடு, தமிழ்ப்பண்பாடும் களங்கப்படுகிற மாதிரி மதுரை மாநகர வீதியிலே, அந்தப் பாரீஸ் சிலைச் சிறுவனைப்போல, ப்ளாட்ஃபாமில் நின்றிருந்தான் குழந்தை. அருகே, முழங்காலிட்டு இவள், கையில் பாட்டிலோடு, ஷ்ஷ்ஷ் ஷென்று அவனைத் துரிதப்படுத்திக் கொண்டு.

அம்மாவுடைய அவசரமும் சங்கடமும் புரிகிற வயசில்லை குழந்தைக்கு.

இவர்களைக் கடந்து நடந்து போனவர்களில் கிட்டத்தட்ட எல்லாருமே இந்தக் காட்சியைப் பார்த்துப் போனாலும், இவள் யாரையும் ஏறெடுத்துப் பார்க்கிற மனநிலை இல்லாமலிருந்தாள்.

‘பாப்பா, சீக்கிரம் ஆகட்டும் பாப்பா’ என்கிற குரல் கேட்டுத் தலையை நிமிர்த்திப் பார்த்தாள்.

ஒரு வயதான தம்பதி, ரெண்டு ஸெகண்ட் நின்று, குழந்தையையும் இவளையும் பார்த்து இதமாய்ப் புன்னகைத்து விட்டுப் போனார்கள். இவளும் மரியாதைக்குக் கொஞ்சமாய்ப் புன்னகைத்து வைத்தாள்.

இவளுடைய ஷ்ஷ்ஷ்க்கு பலன் கிடைத்தது.

பாட்டிலில் ஈரம் படர ஆரம்பித்த நேரத்தில், முஸல்மான்க்கா பச்சா ரே என்றொரு ஆண்குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தால், தொப்பியணிந்த ரெண்டு இளைஞர்கள், இந்தக் காட்சியை ரசித்துப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தார்கள்.

வயதான தம்பதிகளைக் குறித்து வராத வெட்கம் இவளுக்கு இப்போது வந்தது.

குழந்தைக்குக் கத்னா செய்ய வேண்டும் என்று அவன் சொன்னபோது இவள் வெறுமனே 'ம்' என்றதால், அவன் ஒரு விளக்கம் தர வேண்டியதாயிற்று.

"முஸ்லிம்ஸ் மட்டுமே இப்ப ஸர்க்கம்ஸிஷன் பண்றதில்லம்மா, ஜெனரல் ஹெல்த்க்காக எல்லாருமே இப்ப பண்ணிக்கிறாங்க. சில ஹாஸ்பிடல்ஸ்ல பொறக்கற எல்லாக் கொழந்தங்களுக்கும் டாக்டர்ஸ் பண்ணியே விட்டுர்றாங்க."

'நா வேண்டாம்னு சொல்லலியே' என்று இவள் சிரித்தாள்.

இப்போதும் சிரிப்பு வந்தது, வெட்கத்தையும் மீறி.

ஒரு வழியாய், வேலை முடிந்து விட்டது என்பதும் சிரிப்புக்கு ஒரு காரணம்.

பாட்டிலைப் பெற்றுக் கொண்ட நர்ஸ், 'எட்டர மணிக்கித்தான் ரிஸல்ட் கெடக்யும்' என்றாள்.

"எட்டர மணியாகுமா? அதுவரக்யும் இவனயும் வச்சுக்கிட்டு இங்க ஒக்காந்திருக்க முடியாதே, எங்க ஹஸ்பண்ட் ஆஃபீஸ்லயிருந்து வர்ற வழியில கலெக்ட் பண்ணிக்கச் சொல்றேன். இங்கயிருந்து ஃபோன் பண்ணலாமா?"

ஃபோனுக்கு இவள் அனுமதி கேட்டதற்கு நர்ஸ் மறுப்பாய்த் தலையசைத்தாள்.

"பேஷன்ட்ஸ் ஃபோன் பண்றதப் பெரிய டாக்டர் அலவ் பண்ணமாட்டார்ம்மா."

'நா பேஷன்ட் இல்ல நர்ஸ்' என்று சூடாய்த் திருப்பியடிக்க வாய் திறந்தவளையொரு தடாலடியடித்து வீழ்த்தினாள் நர்ஸ்.

"இந்தாங்க, என்னோட செல்ஃபோன்ல பேசுங்க."

சங்கோஜத்தோடு நர்ஸிடம் செல்ஃபோன் வாங்கிப் பேசிவிட்டு நன்றியோடு திருப்பித் தந்த போது, 'மேடமுக்கு இன்னும் எம்மேல கோபந்தான் போலயிருக்கு' என்று நர்ஸ் சிரித்ததற்கு, 'சீச்சீ, கோபமெல்லாம் இல்ல' என்று மறுத்தாள்.

கோபப்படக் காரணங்கள் காலாவதியாகிவிட்டன.

ஃபோன் கொடுத்த புண்ணியவதியாச்சே!

'அப்ப நா ஏன் ஒங்கள அப்படிக் கேட்டேன்னா' என்று ஆரம்பித்த நர்ஸ், இவளை நெருங்கி வந்து, குரலைத் தணித்து வாக்கியத்தைப் பூர்த்தி செய்தாள்.

"நானுங்கூட லவ் மாரேஜ்தான். அதாவது, ஒங்களையே மாதிரி, என் ஹஸ்பண்ட் வேற ரிலிஜன், நா வேற ரிலிஜன்."

*திடுதிப்பென்று இவளுக்கு அந்த ஸிஸ்டர் மேலே ஒரு சகோதரிப் பாசம் ஏற்பட்டுப் போச்சு.*

*தொடர்ந்து, அந்த ஸிஸ்டர் இன்னும் ஏதோ சொல்ல வருவது இவளுக்குப் புரிந்தது. ஸிஸ்டர் முகத்தை இவள் பார்த்தாள், மேற்கொண்டு வார்த்தைகளுக்காக. வார்த்தைகள் வருத்தமாய் வெளிவந்தன.*

*"ஆனா, கடவுள் எங்களுக்கு ஒரு கொழந்தயக் குடுங்கலம்மா. பத்து வருஷமாச்சு. அம்மாவாகிற பாக்கியம் எனக்கு இருக்கா இல்லியான்னு தெரியல. அதுக்கெல்லாம் குடுத்து வக்யணும். யூ ஆர் லக்கி! யூ ஆர் வெரி லக்கி!"*

*குழந்தையைத் தூக்கி ஒரு முத்தம் பதித்து ஸிஸ்டர், 'ஆல் த பெஸ்ட்' என்று இவளை வழியனுப்பி வைத்தாள்.*

*ஒன்பது மணி போல அவன் வீட்டுக்கு வந்தான்.*

*'ரிப்போர்ட் வாங்கிட்டு வந்தீங்களா' என்றதற்கு அவன் சொன்னான் :*

*"ரிப்போர்ட்ல ஒண்ணுமில்ல. யுரினரி இன்ஃபக்ஷன் இல்லியாம். அந்த லேடி டாக்டர் ஒரு ஸிரப் எழுதிக் குடுத்தாங்க. வாங்கிட்டு வந்திருக்கேன். நாளக்கி சரியாப் போகும்னு சொன்னாங்க. அங்கயிருந்த நர்ஸ் நம்மக் குட்டிப் பயலுக்குக் குடுக்கச் சொல்லி இவ்ளோ பெரிய காட்பரீஸ் ஒண்ணு குடுத்தா. அந்த நர்ஸ் ஒனக்கு ஃப்ரண்டாம்ல?"*

*'ஃப்ரண்டா? இல்லியே' என்றாள் இவள்.*

*"ஃப்ரண்ட் இல்ல. ஸிஸ்டர். எனக்கு அக்கா. இந்தக் குட்டிப்பயலுக்குப் பெரியம்மா. நா இவனுக்கு அம்மா. ஆஹா, அம்மா! நா குடுத்து வச்சவங்க! ஐ'ம் லக்கி! ஐ'ம் வெரி லக்கி! ஐ'ம் வெரி வெரி லக்கி! இல்லியாடா என் செல்லக் கண்ண்ண்ணுக்குட்டி!"*

*குழந்தையை வாரியெடுத்து முத்தமழை பொழிந்தாள்.*

*அந்த இளம் அன்னையை அவள் கணவன் ஆர்வத்தோடும் ஆச்சர்யத்தோடும் பார்த்துக் கெண்டிருந்தாள்.*

*தினமணி ஞாயிறுமணி (திருநெல்வேலி), 21.12.2008*

# உறவு வரும், ஒருநாள் பிரிவு வரும்

*நண்பர் சாந்தன், யாழ்ப்பாணத்தில் வசிக்கிற சாந்தன் சொல்லுவார், யாழ்ப்பாணத்து மக்கள் திருச்சி வானொலியையும் சென்னை வானொலியையும் குறிப்பிடுகிறபோது, 'திருச்சி ரேடியோ சிலோன், மெட்ராஸ் ரேடியோ சிலோன் எண்டு தான் சொல்லுவினம்' என்று.*

*டால்டா என்றால் வனஸ்பதி என்று இருப்பதைப் போல, டார்ட்டாய்ஸ் என்றால் கொசுவத்தி என்று இருந்ததைப் போல, இருபத்தஞ்சு வருஷத்துக்கு முன்னால் வானொலி என்றால் ரேடியோ சிலோன் தான்.*

*அதைப் போல, ஸ்கூட்டர் என்றால் லாம்ப்ரெட்டா தான்.*

*பிற்காலத்தில், லாம்ப்ரெட்டா சுருங்கிப் போய் லாம்பியாக ஆனபோது தான் ஸ்கூட்டர் ஓட்டுகிற பேறு எனக்குக் கிட்டியது.*

*கல்யாணமாகி ஒரு வருஷங் கழித்து, மாமனார் எனக்கொரு ஸ்கூட்டர் சாங்ஷன் செய்தார்.*

*எனக்கு என்றால் எனக்கே எனக்கு அல்ல. நான் டிரைவர்.*

*அவருடைய மகளைப் பின்னால் உட்கார்த்தி வைத்துக் கொண்டு திருநெல்வேலியையும் பாளையங்கோட்டையையும் சுற்றிச் சுற்றி வர விதிக்கப்பட்ட டிரைவர்.*

*அதிலே எனக்கொண்ணும் ஆட்சேபனையிருக்கவில்லை. ஆனால் தன்மானம் என்கிற வஸ்து கொஞ்சம் முரண்டு பிடித்தது.*

*தன்மானமா வறட்டுக் கௌரவமா என்கிறதில் சந்தேகம் உண்டு.*

*"ஒங்கப்பா நமக்கு ஒரு லாம்பி வாங்கிக் குடுக்கப் பிரியப்படறதப் பத்தி ரொம்ப சந்தோஷம்மா. ஒம்பதாயிரம் ரூபா. என்னோட சம்பாத்தியத்ல நிச்சயமா வாங்க முடியாது. டி .வி .எஸ்ல புதுசா ஒரு மோப்பட் இன்ட்ரடியூஸ் பண்றாங்க. டி .வி .எஸ் ஃபிஃப்ட்டின்னு பேரு. எங்க ஆஃபீஸ் பக்கத்துலதான் ஷோரூம். எஸ் ஜி ஜெயராஜ் நாடார் கம்பெனி. ஷோக்கேஸ்ல வச்சிருக்கான். வண்டி ரொம்ப அழகாயிருக்கு. ரெண்டாயிரத்திச் சொச்சந்தான். நாங்க மூணு ஃப்ரண்ஸ் ஆஃபீஸ்ல லோன் போட்டு வாங்கலாமான்னு யோசிக்கிறோம். நீ என்ன சொல்ற. ஒன்னோட சம்மதம் முக்கியம். ஏன்னா, நீ தான் பின்னாடி ஒக்காரப் போறவ. ஒங்கப்பா வாங்கிக் கொடுக்கற லாம்பி ஸ்கூட்டர்ல ஒன்ன ஒக்காத்திக் கூட்டிட்டுப் போறதவிட என்னோட சம்பாத்தியத்ல வாங்கற மோப்பட்ல ஒன்ன ஒக்காத்தி வச்சுக் கூட்டிட்டுப் போறது தான் எனக்கு சந்தோஷமா யிருக்கும். ஏன்னா...."*

*நான் நீட்டி முழக்கிக் கொண்டிருக்கும் போதே இடைமறித்து அவளொரு நெத்தியடி அடித்தாள்.*

*“மோப்பட்லயெல்லாம் நா ஒக்கார மாட்டேன்.”*

*போட்ட போட்டில் தலைக் குப்புற விழப்போனேன். இருந்தாலும் சுதாரித்துக் கொண்டு, இன்னொரு முறை முயன்று பார்க்கலாம் என்று வாயைத் திறந்தேன்.*

*“நா எதுக்குக் கேக்கறேன்னா, நம்ம சுய சம்பாத்தியத்ல....”*

*“ஒங்க சுய சம்பாத்தியத்த நீங்களே வச்சுக்குங்க. பெரிய ஜெனரல் மானேஜர் உத்யோகம் பாக்கறீங்க! கொழும்புல எங்க டாடிகிட்ட மூணு கார் இருக்கு. ஒண்ணுல்ல ரெண்டுல்ல. மூணு. என்னமோ அக்கா பையன், ஒறவு விட்டுப் போயிரக் கூகூடாதுன்னு ஒரு சமாதானஞ் சொல்லி, எங்க டாடி ஒங்கள எந்தலையில கட்டி வச்சுட்டாங்க. ஒங்களக் கட்டிக்கிட்டு இந்த ஊருக்கு வந்தப்புபறந்தான், எந் தலையெழுத்து நா டவுன் பஸ்ல போறேன். பெரிய மனசு பண்ணி டாடி ஸ்கூட்டர் வாங்கித் தந்தா மரியாதையா வாங்கிக்குவீங்களா, என்னமோ தன்மானச் சிங்கம் மாதிரி பினாத்தறீங்களே!”*

*எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும். வாஸ்தவந்தான்! உறவு விட்டுப் போய்விடக் கூடாது என்று என்னை இவள் தலையிலோ, இவளை என் தலையிலோ கட்டி வைத்து விட்டது வாஸ்தவந்தான்.*

*கொழும்பில், மாமா வீட்டில் மூணு கார் இருக்கிறதும் வாஸ்தவந்தான்.*

*மூணு ஸைஸில் மூணு கார்.*

*அப்பா கார், அம்மா கார், பாப்பா கார்.*

*அப்பா, அம்மா, பாப்பா மூணு பேருக்கும் டிரைவிங் தெரியுமாதலால், மூணு காருக்கும் சேர்த்து ஒப்புக்கு ஒரு டிரைவர். ஒரேயொரு டிரைவர்.*

*புது மருமகனாய் மாமியார் வீட்டுக்குப் போன எனக்கும் டிரைவிங் தெரியும். ஹ.!*

*புதுமணத் தம்பதிகள் ஊர் சுற்றிப்பார்க்க, பாப்பாக் கார் ஒதுக்கப்பட்டது. என்னைப் போன்ற சின்ன உருவத்துக்குச் சின்னக் கார்தான் தோது.*

*நிகாம்பு, பென்தொட்ட, கண்டி, சிலாபம் போன்ற பக்கத்து ஊர்களுக்குப் போய்வர ஏற்பாடானபோது, பெரிய வண்டிகளில் ஒன்று எங்கள் பாவனைக்குத் தரப்பட்டது.*

*காரோடு, கார்ச் சாரதியும்.*

*காரில் போகிற போது, டிரைவரின் பெயர் என்ன என்று இவளைக் கேட்டேன்.*

“தெரியாது”‘ என்றாள், சர்வ அலட்சியமாய்.

“என்னது? தெரியாதா?”

“அதுக்கு ஏன் இப்படி வாயப் பொளக்கறீங்க. தெரியாதுன்னா தெரியாது தான்.”

“இவர் எத்தன நாளா ஒங்ககிட்ட வேலக்கி இருக்கார்?”

“மூணு வருஷம் இருக்கும்.”

“மூணு வருஷமா வேல செய்யறவரோட பேர் தெரியாதுங்கற?”

“அதுக்கென்னங்க இப்ப? ஒங்களுக்குப் பேச வேற விஷயமே கெடயாதா? லுக், இவர் எங்க டிரைவர். நாங்க எல்லாரும் இவர டிரைவர்னுதான் கூப்புடுவோம். நீங்களும் அப்படியே கூப்புடலாம். புரிஞ்சிதா?”

டிரைவரை அவர் இவர் என்று இவள் மரியாதையாய்க் குறிப்பிடுவதே பெரிய விஷயம் என்று நான் சமாதானஞ் செய்து கொண்டேன்.

சின்னக்காரில் நாங்கள் ரெண்டு பேரும் ஊரைச் சுற்றி வருகையில், காரோட்டுவதற்கு எனக்கு சர்வ சுதந்திரம் அருளிவிட்டுப் பக்கத்து சீட்டில் உட்கார்ந்து கொள்வாள்.

கொழும்பு நகர வீதிகள் எனக்குத் தெரியாததால் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு இவள், லெஃப்ட் ரைட் சொல்லிக் கொண்டு வருவாள். ஆனால் அதோடு நிறுத்திக் கொள்ள அவளுடைய பொறுப்புணர்ச்சி இடந்தராது.

அவங்க அப்பா காரை, ஓட்டத் தெரியாமல் ஓட்டி நான் கெடுத்துவிடக் கூடாதில்லையா!

ஹாண் அடிங்க… பிரேக் புடிங்க…. இந்த எடத்துல ஓவர்ட்டேக் செய்யாதீங்க….. இவ்வளவு ஓரமாப் போகாதீங்க…. கியர்ச் சேய்ஞ்ஜ் பண்ணுங்க….

அனத்தல், பொறுமையை சோதிக்கிறதாயிருக்கும்.

இந்தக் கார்க்கதை யெல்லாம் இருபத்தியாறு வருஷப் பழசு. இனி இருபத்தியஞ்சு வருஷப் பழைய ஸ்கூட்டர் கதைக்கு வருவோம்.

வண்ணார்ப்பேட்டை ஏ ஆர் ஏ எஸ் டிப்போவில் என்னுடைய (?) லாம்பியை டெலிவரி எடுத்த தினம் தான் ஒரு பேருண்மை உறைத்தது. காரோட்டக் கற்றுக் கொண்டிருந்தவன் ஸ்கூட்டர் ஓட்ட முறைப்படிக் கற்றுக் கொள்ளவில்லை. இருந்தாலும், தியரி தெரியுமாதலால், மெக்கானிக் உதைத்துக் கொடுத்த ஸ்கூட்டரில் ஸ்ட்டாண்டை எடுத்துவிட்டு, கியரை மாற்றி, ஆக்ஸலரேட்டரைக் கமுக்கமாய் முறுக்கி வண்டியைக் கிளப்பிக் கொண்டு போனது ஒரு த்ரில்லாயிருந்தது.

சின்ன வயசில் சைக்கிள் ஓட்டப் பழகிய புதுசில் இருந்த மாதிரியான த்ரில்.

ரொம்ப சுலபமாய் லாம்பி எனக்கு வசப்பட்டது.

ஆனால், இவளை வசப்படுத்துவதுதான் பெரிய பிரயத்தன மாயிருந்தது. இந்த ஸ்கூட்டர் தன்னுடைய அப்பா வாங்கிக் கொடுத்தது, இதைத் துஷ்டர்களிடமிருந்து (நான் உட்பட) பாதுகாத்தருள வேண்டிய கடமையும் பொறுப்பும் தனக்கு இருப்பதாய் நம்பிக் கொண்டிருந்தாள்.

பேட்டை ஹிண்டு காலேஜில் பியூஸி படித்துக் கொண்டிருந்த சித்தி பையன் ஒரு ரவுண்ட் போய்ட்டு வருவதாய்க் கேட்டதற்கு, ரொம்ப தாராளமாய் சாவியை எடுத்துக் கொடுத்து நான் வழியனுப்பி வைத்த போது, இவள் உஷாராகி வாசலில் வந்து நின்று கொண்டாள். அவனுக்கு உருப்படியாய்¢ ஸ்கூட்டர் ஓட்டத் தெரியாது என்கிற விவரம் எனக்குத் தெரியாது. அந்தப்பாவி என்ன செய்தான், ஹாண்டில் பாரை நேராய் விறைப்பாய் வைத்து லாக் செய்து கொண்டு இக்னிஷனைப் போட்டு ஸ்டார்ட் செய்து ஏறி உட்கார்ந்து த்ராட்டிலைக் கொடுத்தான்.

லாக் செய்யப்பட்ட ஹாண்டில் பாரை இந்தப் பக்கம் அந்தப்பக்கம் திருப்ப முடியாத இக்கட்டில், பாலன்ஸ் செய்ய சுதந்திரமில்லாமல், பயல் முணே மூணு சென்ட்டி மீட்டர் தூரத்தில் தொப்புக்கட்டீர் என்று விழுந்தான்.

அவன் விழுந்தான் என்பதை விட, ஸ்கூட்டர் விழுந்தது என்பது முக்கியம். தங்கமான அந்தத் தருணத்துக்காகவே காத்திருந்த மாதிரி இவள் பட் படார் என்று வெடித்துத் தள்ளி விட்டாள்.

யார் ஸ்கூட்டர யெடுத்து யார்ட்ட குடுத்தீங்க நீங்க... ஒங்கக் காசு போட்டு வாங்கியிருந்தா இப்படிப் பொறுப்பில்லாம கேட்டவனுக்கெல்லாம் தூக்கிக் குடுப்பீங்களா... காசோட அரும தெரியுமா ஒங்களுக்கு... அனாமத்தா வந்தது தான, அது நல்லா இருந்தா என்ன நாசமாப் போனா என்னங்கற கெட்ட புத்திதான ஒங்களுக்கு... இத்யாதி இத்யாதி.

லாம்பி ஸ்கூட்டர் சேட்டைக்குப் பேர் போனது. நான் தனியாய் சவாரி செய்கிற போது சமத்தாயிருக்கும். இவள் பின்னால் ஏறிக் கொண்டு வருகிறபோது, அது தன்னுடைய வேலையைக் காட்டும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் மாட்னி ஷோவுக்குப் போகலாமென்று கிளம்புகிற போது, பாதி தூரத்தில் ஆஃப் ஆகிவிடும். வேகாத வெயிலில் ஸ்கூட்டரோடு நான் மல்லுக்கட்டிக் கொண்டி ருப்பேன். சைடு கதவைக் கழட்டி, பெட்ரோல் ஓட்டத்தைச் செக் செய்து, ஸ்பார்க் ப்ளக்கைக் கழட்டித் தேய்த்துத் தேய்த்துத் திரும்ப மாட்டி, உதையோ உதையென்று உதைத்து...

இத்தனைக்கும், ஓரமாய் மர நிழலில் நின்று கொண்டு இவள் அர்ச்சனைகளை அள்ளித் தெளித்துக் கொண்டிருப்பாள். என்னமோ நான்தான் இந்த ஸ்கூட்டருக்கு சொல்லிக் கொடுத்து, பாதி வழியில் மக்கர் செய்ய ஏற்பாடு செய்திருக்கிற மாதிரி.

ஸ்கூட்டரில் பின்னால் உட்கார்ந்து கொண்டு வருகிறபோது அடக்கமாயிருக்க மாட்டாள்.

*ஹாண் அடிக்க.... பிரேக் புடிங்க....*

*இந்த எடத்துல ஓவர்ட் டேக் செய்யாதீங்க..*

*இவ்வளவு ஓரமாப் போகாதீங்க...*

*கியரச் சேய்ஞ்ஜ் பண்ணுங்க..*

*"இப்ப நா எந்த கியர்ல போய்ட்டிருக்கேன்னு தெரியுமா?"*

*"ம்? தெரியாது."*

*"அப்ப எந்த கியர்லயிருந்து எந்த கியருக்குச் சேய்ஞ்ஜ் பண்ணச் சொல்ற?"*

*"..."*

*"இந்தா பார், ஒனக்குக் கார் ஓட்டத் தெரியும், அதனால பக்கத்துல ஒக்காந்துக்கிட்டுத் தொணதொணத்துக்கிட்டே வந்த, நா சகிச்சிக் கிட்டேன். ஸ்கூட்டர் ஓட்ட ஒனக்குத் தெரியாது. ஸோ, கம்னு வா."*

*பின் ஸீட்டில் நிசப்தம். வெற்றி. ஹ.! வெற்றி.*
*அட்லாஸ்ட்!*

*பிறகு, மெட்ராஸுக்கு மாற்றலாகி வந்தபோது நம்ம ஸ்கூட்டரும் எங்களோடு நெல்லை எக்ஸ்ப்ரஸ்ஸில் பயணமானது. விசாலமான மவுன்ட் ரோடிலும், குறுகலான பாரிஸ் கார்னர் கிளைச் சாலைகளிலும் நெரிசலான தி நகரிலும் என்னைச் சுமந்து கொண்டு ஓடியிருக்கிறது.*

*ஆனால் இவளையும் சுமந்து கொண்டு செல்கையில், என்னைக் காலைவாரி விடுவதில் கவனமாயிருந்தது.*

*இவளிடமிருந்து பல சந்தர்ப்பங்களில் விதவிதமான, வித்யாசமான, விசேஷமான வசவுகளைப் பெற்றுத் தந்த வாகனமாயிருந்த போதும், அந்த ஸ்கூட்டரோடு எனக்கொரு பாசப்பிணைப்பு ஏற்பட்டுப் போனது.*

*பிற்காலத்தில், வெளிநாட்டு ராட்சசக் கம்பெனிகளின் கூட்டுத் தயாரிப்பாய் அட்டகாசமான ட்டூ வீலர்கள் சென்னைச் சாலைகளை ஆக்கிரமிக்கப் புறப்பட்ட பின்னால், லாம்பி தயாரிப்பு நின்று போய், கம்ப்பெனி காணாமலே போய்விட்டது.*

*ஆர்ப்பாட்டமான புதிய வாகனங்களுக்கு இணையாய் சாலையில் ஓடுவதற்கு நம்ம லாம்பி சங்கோஜப்படுவது தெரிந்தது. தாழ்வு மனப்பான்மையில் சங்கடப்பட்டுக் கொண்டு அடிக்கடி நோய்வாய்ப்பட்டது.*

*அதோடு, எனக்கு ஆஃபீஸர் ப்ரமோஷன் கிடைத்து, ஆஃபீஸில் கார் லோன் போட்டு ஒரு மாருதி 800 வீட்டுக்கு வந்த பின்னால் லாம்பியின் சேவை அதிகமாய்த் தேவைப்படவில்லையாதலால் அதற்கு விஆர்எஸ் வழங்கப்பட்டுவிட்டது.*

இந்த ஸ்கூட்டரை விட வயதில் சிறியவனான என் மகன், இஞ்ஜினியரிங் முடித்து, அமெரிக்காவுக்குப் பறந்து விட்டான்.

"'இந்த சனியன் எதுக்குங்க வாசல அடச்சிக்கிட்டு நிக்கிது, வித்துத் தொலக்கிறது தான'" என்று இவள் ஆரம்பித்தாள்.

இவள் சொன்னது ஸ்கூட்டருக்குக் காதில் விழுந்திருக்க வேண்டும். ரொம்ப சோகமாய் இருந்தது. வாரத்துக்கொரு முறை தூசி தட்டி நான் குளுப்பாட்டி விடுகிற போது, என்னை நன்றிப் பெருக்கோடும் அதே சமயம் பாவமாயும் பார்க்கும்.

"'எதுக்குங்க இந்த வெட்டி வேல பாத்துட்டிருக்கீங்க? இத வித்துத் தல முழுகாம, சீவி முடிச்சி சிங்காரிச்சிட்டிருக்கீங்களே'" என்று இவள் கரித்துக் கொட்டுவாள்.

அதாவது, யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்று சொல்வதற்கு எதிர்மறையாய், நம்ம லாம்பி ஸ்கூட்டர் ஆரோக்யமாயிருந்த காலத்திலும் எனக்குத் திட்டு, நோய்வாய்ப்பட்டுப் போன காலத்திலும் எனக்குத் திட்டு.

நன்றாயிருந்த காலத்தில், இளமை முறுக்கில் கொஞ்சம் திமிர்த்தனமாய் நடந்து கொண்டு எனக்கு வசவு வாங்கிக் கொடுத்ததற்கு இப்போது இது விசனப்படுவது புரிந்தது.

சரி! அதற்கு இதனால் இப்போது என்ன செய்ய இயலும், பரிதாபமாய் என்னைப் பார்ப்பதைத் தவிர!

அதன் உணர்ச்சிகள் எனக்குப் புரியத்தலைப்பட்டன.

மாமா வாங்கிக் கொடுத்தது தானே என்கிற மனக்குறை யெல்லாம் மறந்துபோய் ரொம்ப நாளாச்சு.

அதை சுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறபோது, பரிவாய்த் தட்டிக் கொடுப்பேன். லேசாய் அணைத்துக் கொள்ளுவேன்.

டாடி மம்மியைப் பார்க்கிற ஆசை வந்து, இவள் கொழும்புக்குக் கிளம்பினாள்.

புறப்படுகிறபோது எச்சரித்துவிட்டுப் போனாள்.

"நா திருப்பி வர்றப்ப இந்த சனியன் இங்க இருக்கக் கூடாது. என்ன சரியா? சும்மா தலையாட்டி வக்யாதீங்க. பி ஸீரியஸ்."

நான் ஸீரியஸ்ஸோ இல்லையோ என்னுடைய லாம்பியின் நிலைமைதான் ரொம்ப ஸீரியஸ்ஸாய் ஆகிவிட்டிருந்தது.

அதைக் கருணைக் கொலை செய்தே ஆகவேண்டிய நிர்பந்தம். அவள் திரும்பி வருவதற்குள் இதைக் காலி பண்ணவில்லை யானால், அறம் பாடியே என்னைச் சின்னாபின்னப் படுத்தி விடுவாள்.

ரெண்டு மெக்கானிக்குகளிடம் விசாரித்துப் பார்த்தேன். பேரீச்சம்பழத்துக்குப் போடலாம் என்று ரெண்டு பேருமே அபிப்ராயப்பட்டார்கள்.

இவள்கூட ஊரில் இல்லாத சமயத்தில் அத்தனை பேரீச்சம் பழங்களோடு நான் தனியாளாய் எப்படி போரடிப்பது என்று திகைத்துக் கொண்டிருந்த சமயத்தில், விசாலமான காரியர் வைத்த சைக்கிளொன்றில் வந்தவன், "'சார்! இந்த ஸ்கூட்டர ஒரு ரேட் போட்டு எடுத்துக்கலாமா சார்"' என்று வந்தான்.

ஆயிரம் ரூபாய் என்று அவனே விலையையும் நிர்ணயம் செய்தான்.

"ஒண்ணும் யூஸ் ஆகாது சார். எல்லாத்தயும் பார்ட் பார்ட்டாப் பிரிச்சு விக்யணும். நமக்கு ஒரு நூறு ரூவா நிக்யும். ஐயாவுக்குத் திர்நவேலின்னு சொன்னாக. நமக்கும் திர்நவேலிப் பக்கந் தாங்கய்யா. கொங்கராயக்குறிச்சி."

மீன்பாடி வண்டியொன்று அமர்த்திக் கொண்டு வந்தான்.

வண்டிக்காரனும் அவனுமாய் ஸ்கூட்டரைத் தூக்கி வண்டியி லேற்ற ப்ரயத்தனப்பட்டபோது, நானும் கை கொடுத்தேன்.

கனத்துக்கிடந்தன. ஸ்கூட்டரும், மனசும்.

ஆசையாய் வளர்த்த கால்நடைச் செல்வத்தை அதனுடைய சேவைக் காலம் முடிந்ததும் அடிமாட்டுக்குக் கொடுப்பதைப் போல ஒரு சோகமும் குற்றவுணர்ச்சியும் மனசுக்குள் வியாபித்தன.

என்னுடைய குட் ஓல்ட் லாம்பி ஸ்கூட்டரின் உடம்பை வாஞ்சையோடு வருடிக் கொடுத்து வழியனுப்பி வைத்தேன். கண்கள் பனித்தன. பார்வையிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டே நின்றேன்.

ஒரு வருஷம் ஓடிப்போய் விட்டது.

நேற்று, நேரம் போகாமல், போன வருஷத்து டைரியை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்த போது என் லாம்பியை அடிமாட்டுக்குக் கொடுத்த துயரநாள் நாளைய தேதிதான் என்பது தெரிய வந்தது.

லாம்பி என்னிடமிருந்து பிரிந்து போன தருணத்தை நினைவுபடுத்திப் பார்த்துக் கெகொண்டிருக்கையில் இவள் வந்தாள்.

"நீங்க என்ன யோசிக்கிறீங்கன்னு எனக்குத் தெரியும். சொல்லவா?"

"ம்."

*“நாளக்கி நமக்கு வெட்டிங் அனிவர்ஸரி. அதத்தான நெனச்சிட்டிருக்கீங்க? இருவத்தி மூணு வருஷம் ஆச்சிங்க! ஆமா, போன வருஷம் அனிவர்ஸரிக்கி நா கொழும்புல இருந்தேன். நீங்க தனியா என்ன செஞ்சீங்க?”*

*அன்றைக்குத்தான் நான் தனியாய் ஆனேன் என்று சொன்னால், இவள் புரிந்து கொள்ளவா போகிறாள்?*

*(நன்றி : ஆனந்தவிடன், 10.03.2008 “தனியே, தன்னந்தனியே” )*

# கரிசல் காட்டுக் கதை சொல்லி

*“எத்தன மணிக்கிங்க வண்டி வரும்” என்று அவள் கேட்டதற்கு “ஷ்ஷ்.... எக்ஸஸ்ஸைஸ்... பண்ணும் போது.... பேச்சு... குடுத்தா... போச்சு” என்று மூச்சிரைத்தான் அவன்.*

*“எழுத்தாளர் சார் எக்ஸஸ்ஸைஸ் பண்ணும்போது கூட எதுகை மோனைலதான் பேசுவீங்களாக்கும்” என்று அவன் கன்னத்தைச் செல்லமாய் நிமிண்டினாள் அவள்.*

*“என்ன இன்னிக்கி எழுத்தாளருக்கு இப்படி மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்குது? எக்ஸஸ்ஸைஸ் ஓவர் டோஸாப் போச்சா என்ன?”*

*“ஆமாம்மா, கொஞ்சம் அதிகமாத்தான் பண்ணிட்டேன். இன்னிக்கி விழாவுல ஐயாதானே ஹீரோ! மேடையில நிக்கிறபோது நெஞ்ச நிமித்திக்கிட்டு கெம்பீரமா நிக்க வேண்டாமா!”*

*“நீங்க ஹீரோன்னா, நாந்தானே ஹீரோயின்! நானும் மேடையில கெம்பீரமா இருக்க வேண்டாமா! இருங்க நானும் க்விக்கா ஒரு வாக் போயிட்டு வந்துர்றேன்.”*

*“சிச்சீ, மேடம் வாக் போறாங்களாம்ல! வாக்கிங்கெல்லாம் வயசாளிங்களுக்கானது. ஒனக்கும் எனக்கும் எதுக்கும்மா அது? இங்க வா ஸிம்ப்பிளா ரெண்டு எக்ஸஸ்ஸைஸ் சொல்லித் தர்றேன். டெய்லி அதச் செய். என்னயே மாதிரி ட்ரிம்மா ஆயிருவ.”*

*“ஐயேக் கைய விடுங்க. ஒங்க மொரட்டு எக்ஸஸ்ஸைஸெல்லாம் என்னோட நாசூக்கான ஒடம்புக்கு ஒத்துக்காது. நா ஓடிப்போய் ஒரு வாக் போய்ட்டு வந்துர்றேன். எத்தன மணிக்கி வண்டி வரும்னு மட்டும் சொல்லுங்க.”*

*“மெட்ராஸ்ல சாயங்காலம் ஆறு மணிக்கி ஃபங்ஷன். இங்கப் பாண்டிச்சேரியிலயிருந்து நாம மூணு மணிக்கிப் பொறப்படணும். ரண்டரைக் கெல்லாம் கார் வந்துரும்னு சொன்னங்க!”*

*கார் வந்தது. விழா அமைப்பாளர்களின் பிரதிநிதியொருவர் டிரைவரோடு முன் ஸீட்டிலிருக்க, இவர்கள் இரண்டு பேரும் பின்னால் அமர்ந்தார்கள்.*

*ஈஸ்ட் கோஸ்ட் ரோடின் ரம்மியத்தை ரசித்தவாறே பயணப் பட்டுக் கொண்டிருந்தபோது ரகசியமாய்க் கணவனின் காதைக் கடித்தாள். “ஒங்களப் பாக்கப் பாக்க எனக்குப் பொறாமையா இருக்குங்க. என்ன ஸ்மார்ட்டா இருக்கீங்க! என் ராஜா, நெஜம்மாவே நீங்க ஹீரோதான்!”*

“எனக்கு ஒன்னப் பாத்தா பொறாமையாயிருக்கு தெரியுமா! ஒன்னோட மொகமும் ஒடம்பும் எனக்கு நம்ம ஃபஸ்ட் நைட்ல பாத்த மாதிரியே இருக்கு. இந்த வாக்கிங் போயும் வெரதம் இருந்துமே நீ ஒடம்ப இப்படிச் சிக்குன்னு வச்சிருக்கியே, நா சொன்ன மாதிரி ஸிம்ப்பிள் எக்ஸஸ்ஸைஸூம் பண்ணினேன்னா…”

“அட ஒங்க எக்ஸஸ்ஸைஸ மூட்ட கட்டி வைய்ங்க. என்னப் பாத்து நீங்க பொறாமப்படறீங்க, ஒங்களப் பாத்து நா பொறாமப் படறேன். நம்ம ரண்டு பேரையும் பாத்து எத்தன பேர் பொறாமப் படறாங்க தெரியுமா!”

“அதுக்குப் பேர் பொறாமையா, வயித்தெரிச்சலா? எப்படியும் இருந்துட்டுப் போகட்டும். இங்க பாரும்மா, இன்னிக்கிப் பொறந்த நாள் விழாவ ரொம்ப அமர்க்களமா ஏற்பாடு பண்ணியிருக்காப்பல தெரியுது. விழாவுக்கு எழுத்தாளர்கள் வருவாங்க, அரசியல்வாதிங்க வருவாங்க. சினிமாக்காரங்க வருவாங்க, வாசகர்கள் வருவாங்க. எல்லாக் கண்ணும் ஒரே மாதிரி இருக்காது. கண்ணு பட்டா நல்லதில்ல. ஊருக்குத் திரும்பி வந்ததும் ஞாபகமாத் திருஷ்டி சுத்திப்போடு.”

“ஒங்களுக்கு நா சுத்திப் போடுவேன். எனக்கு?”

“நா சுத்திப் போடறேன். நாந்தானேம்மா ஒனக்கு எல்லாம்.”

முன் ஸீட்டுக்கு எட்டிவிடாதபடி எச்சரிக்கையான தணிந்த குரலில் உரையாடல் நடந்து கொண்டிருந்தது, அந்நியோன்னியமாய். இவன் அவளுடைய கையைப் பிரியத்தோடு பற்றி அழுத்தினான். அவள் இன்னுங்கொஞ்சம் நெருங்கியமர்ந்து, இடைவெளியை இல்லாமலாக்கினாள்.

மவுன்ட் ரோடிலுள்ள அந்த ஏஸி அரங்கம் நிரம்பி வழிந்தது. பாதையெங்கும் போஸ்டர்கள், இந்த எழுத்தாளனின் படத்தோடு. பிரபலமான அரசியல் புள்ளியொருவர் விழாவுக்கு வருகிறதையொட்டி, கட்சிக் கொடிகள் அமர்க்களமாய்ப் பறந்து கொண்டிருந்தன. கட்சித் தலைவர் படத்தோடு, “வாழ்த்த வயதில்லை, வணங்குகிறோம்” போஸ்டர்கள் வேறே. போஸ்டர் போட்டவர்களெல்லாம் பாவம், பால் குடிக்கிற பாப்பாக்களாயிருக்கும்.

தலைவருக்கு சமமாய் நம்ம விழா நாயகனுக்கும் மேடையில் ஸ்பெஷல் நாற்காலி போட்டிருந்தார்கள். வரவேற்புரை நிகழ்த்திய விழா அமைப்பாளர், தலைவரையும் மற்றெல்லோரையும் முறையாய் வரவேற்ற பின்னால் இந்த விழாவின் மகத்துவத்தை விவரித்தார்.

“….. இந்த விழாவின் நாயகர், கரிசல் காட்டு எழுத்தாளர் திலகம் அவர்களை வாழ்த்தத்தான் நாம் எல்லோரும் பெருந்திரளாய் இங்கே கூடியிருக்கிறோம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இவர் எண்பத்தைந்தாவது வயதை எட்டுகிற இந்தத் திருநாளில் தான் இவரை வாழ்த்தக் கூடியிருக்கிறோம் என்பதை என்னால் இன்னும் நம்ப முடியவில்லை. இந்த இளைஞருக்கு எண்பத்தைந்து வயதாகிவிட்டது என்பதை நீங்கள் நம்புகிறீர்களா?”

அவையோர் ஆரவாரம். “இல்லை, இல்லை!”

வரவேற்புரையையடுத்து, இந்த விழாவுக்கான செலவை ஏற்றுக் கொண்டிருந்த சினிமா டைரக்டர் மைக்குக்கு வந்தார். மைக்குக்கு வருவதற்கு முன்னால் எழுத்தாளத் தம்பதிகளின் கால்களில் சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கி, அவர்களின் ஆசீர்வாதத்தையும், கூட்டத்தின் ஆரவாரத்தையும் பெற்றார். "இந்த ரெண்டு பேரும் எனக்கு அப்பா அம்மா மாதிரி" என்று மைக்குக்கு முன்னால் நெகிழ்ந்து போனார் டைரக்டர்.

அடுத்து வாழ்த்துரை வழங்க வந்தார் புத்தம் புதுக் கவிஞர்.

"..... எனக்கு முன் பேசிய இயக்குநருக்கு அடுத்தத் தலை முறையைச் சேர்ந்தவன் நான். இந்த இருவரும் இயக்குநருக்கு அப்பா அம்மா என்றால், எனக்குத் தாத்தா பாட்டி ஆக வேண்டும். நிஜம்மாகவே எனக்கு எண்பத்தைந்து வயதில் ஒரு தாத்தாவும் எழுபத்தைந்து வயதில் ஒரு பாட்டியும் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள்...."

தொடர்ந்து, பேச வந்த அனைவருமே எண்பத்தைந்து வயசு எழுத்தாளரைக் குறித்து அநியாயத்துக்கு ஆச்சர்யப்பட்டார்கள்.

"..... என்னுடைய தாத்தா எழுபத்தஞ்சு வயசிலேயே போய்ச் சேர்ந்து விட்டார். ஆனால் இந்த மேடையில் கம்பீரமாய் அமர்ந்திருக்கிற இந்த விழா நாயகன் இந்த எண்பத்தஞ்சு வயதிலும் கம்பீரமாயிருக்கிறார் என்றால் அது அவருடைய படைப்புகள் அவருக்குத் தருகிற பலம் என்றுதான் சொல்வேன். அவருடைய எழுத்தாற்றல் தருகிற மனோபலத்தில் அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார், இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து கொண்டிருப்பார்....

.... பாண்டிச்சேரியில் இளைஞர்களே தள்ளாடுவார்கள். ஆனால் இந்தத் தள்ளாத வயதிலும் இவர் தள்ளாடாமலிருக்கிறார் என்றால், காரணம் இவர் பாண்டிச்சேரியில் வாழ்ந்தும் கூட மதுப்பழக்கம் இல்லாத ஒழுக்க சீலர் என்பது தான்....

..... தமிழ் நாட்டின் தலைசிறந்த படைப்பாளி ஒருவருக்கு இன்றைக்கு நாம் விழா எடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்றைய விழா நாயகனுக்கு இன்றைக்கு எண்பத்தைந்து வயதாகிறது. அவருடைய துணைவியாருக்கு எழுபத்தைந்து வயது. இந்த முதிய வயதிலும் இந்த இருவருக்குமிடையே நிலவுகிற அந்நியோன்னியத்தை அறிந்து கொள்கிற பேறு இன்றைக்கு எனக்குக் கிட்டியது. நான்தான் பாண்டிச்சேரியிலிருந்து சென்னைக்கு அவர்களைக் காரில் அழைத்து வந்தேன். முன் ஸீட்டில் நானும் டிரைவரும், பின் ஸீட்டில் இந்த அன்புத் தம்பதி. இந்த முதிர்ந்த வயதிலும் அவர்களுக்கிடையே இருக்கிற நெருக்கம் ஜாடை மாடையாய் என்னுடைய கண்களில் இடறிய போது, ஒருபுறம் மகிழ்ச்சியும் மறுபுறம் நெகிழ்ச்சியும் கொண்டேன்....

.....நம்முடைய கரிசல் காட்டுக் கதாநாயகன் அவர்கள் இந்தியாவின் முதன்மையான இலக்கிய விருதான ஞானபீட விருது பெறுவதற்கு எல்லாத் தகுதியும் உடையவர். வழக்கமாக வயது முதிர்ந்த எழுத்தாளர்களுக்குத்தான் ஞானபீட விருது வழங்கப் படுகிறது. அப்படிப் பார்த்தால், அந்தத் தகுதியை இவர் பல ஆண்டுகளுக்கு முன்பே பெற்று விட்டார். இந்திய அரசு இதைக் கவனத்தில் கொண்டு, மேலும் காலம் தாழ்த்தாமல் இவருக்கு ஞானபீட விருதினை வழங்கிட

வேண்டுமென்றும், அந்த கவுரவத்தை இவர் உயிரோடிருக்கிற காலத்திலேயே வழங்கி இவரைப் பெருமைப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்....

இப்படியாய்ப் பற்பல முத்துக்கள் உதிர்க்கப்பட்ட பின்னால், அரசியல் தலைவர் பேச எழுந்தார். கரிசல் காட்டில், எழுத்தாளரின் வீட்டில், பல வருஷங்களுக்கு முன்பு அவரை சந்தித்ததை மனநிறைவோடு நினைவு கூர்ந்தார்.

கரிசல் காட்டரசரின் சிறுகதையொன்றைத் தன்னுடைய பாணியில் எடுத்து விட்டு அனைவரயும் அசத்தினார்.

"…. எண்பத்தைந்தாவது பிறந்த நாள் சென்னையில் இன்றைக்குக் கொண்டாடப்படுவது போலவே, இன்னும் பதினைந்து வருடங்கழித்து இந்தப் படைப்புலகப் பெரியவருடைய நூறாவது பிறந்த நாள், இவர் பிறந்து வாழ்ந்த கரிசல் மண்ணில் கொண்டாடப்பட வேண்டும். நூறு வயது வரை இந்தப் படைப்பாளி இருப்பாரா என்றால், நிச்சயம் இருப்பார். இவருடைய உடல் ஆரோக்யமும், நல்லொழுக்கமும் கட்டுப்பாடான வாழ்க்கையும் இனிமையான இல்லறமும் இவர் நிச்சயம் நூற்றாண்டு காண்பார் என்பதைப் பறைசாற்றுகின்றன. ஆனால் இப்போதே அறுபத்தைந்தைத் தாண்டி விட்ட நான், இன்னும் பதினைந்து வருடங்கள் வாழ்வேனா என்பது தான் கேள்விக்குறி. நான் உயிரோடிருக்கும் பட்சத்தில், அந்த நூற்றாண்டு விழாவை நானே தலைமையேற்று நடத்துவேன் என்று இந்த சபைக்கு உறுதி கூறுகிறேன்...."

ஆரவாரத்தில் அரங்கம் அதிர்ந்தது.

ஏற்புரைக்கு எழுத்தாளரை அழைத்தபோது, அவர் மிகுந்த சிரமத்துடன் ஆசனத்தை விட்டு எழுந்தார்.

சரி, நம்ம கதாநாயகனுடைய உண்மையான வயது இப்போது வாசகர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு விட்டதால், இதுவரை அவன் இவன் என்று குறிப்பிடப்பட்ட கதாநாயகனை, கதாநாயகரை, அவருடைய முதிர்ந்த வயதுக்கு மரியாதை தந்து அவர் இவர் என்று குறிப்பிடுவதுதான் நாகரீகம் என்பதால், இனி நாம் மரியாதை காப்போம்.

எங்கே விட்டோம்?

ஏற்புரைக்கு எழுத்தாளரை அழைத்த போது, அவர் மிகுந்த சிரமத்துடன் ஆசனத்தை விட்டு எழுந்தார்.

தான் ஒரு எண்பத்தஞ்சு வயது முதியவன், இந்த மன்றத்திலிருக்கிற எல்லாரையும் விட வயதில் மூத்தவன். இங்கிருக்கிற அனைவரையும் உள்ளடக்கி, ஸீனியாரிட்டி லிஸ்ட் ஒன்று தயாரித்தால் அதில் முதல் பெயர் தன்னுடையதாயிருக்கும், அதாவது இந்த எல்லாரையும் விட தனக்குத்தான் மரணத்துக்கு முன்னுரிமை என்பது தெள்ளத் தெளிவாய்த் தனக்கு உணர்த்தப் பட்டிருக்கிறது என்பதை உணர்ந்த போது இவருடைய எக்ஸஸ்ஸைஸ் பாடி வலுவிழந்து போனது போலிருந்தது.

*எண்பத்தி நாலு வருஷங்கள் 364 நாட்கள் இல்லாத சோர்வு இன்றைக்கு மனசை ஆக்கிரமித்துக் கொண்டது. அவரால் மைக்கில் பேச முடியவில்லை.*

*"இந்த விழாவை ஏற்பாடு செய்தவர்களுக்கு நன்றி. என்னை வாழ்த்திப் பேசிய அத்தனை இளைஞர்களுக்கும் மனமார்ந்த நன்றி" என்கிற ரண்டே வாக்கியங்களில் தன்னுடைய ஏற்புரையை முடித்துக் கொண்டார்.*

*இரவு உணவுக்கு விழா அமைப்பாளர்கள் அழைத்த போது, பசியில்லை என்ற மறுத்து விட்டார். இரவு, சென்னையில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது அவருக்கு சொல்லப்பட்ட போது, அதை மறுத்து, இரவோடு இரவாய்ப் பாண்டிச்சேரி போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்றும், அதற்கு ஏற்பாடு செய்யும்படியும் கோரிக்கை வைத்தார்.*

*கார் ஒன்று ஏற்பாடாகி, எம்பத்தஞ்சி வயசு எழுத்தாளரும் அவருடைய எழுபத்தஞ்சி வயசுத் துணைவியாரும் நள்ளிரவில் மெட்ராஸ் ட்டு பாண்டிச்சேரி பயணமானார்கள்.*

*நிலா வெளிச்சத்தில் கிழக்குக் கடற்கரைச் சாலையின் ரம்மியம் இப்போது அவர்களுக்கு அந்நியமாயிருந்தது. பிரயாணம் முழுக்க ஓர் அசாதாரணமான அமைதி வியாபித்திருந்தது.*

*வீட்டையடைந்த பின்னால் துணைவியார் மெல்லக் கேட்டார்கள். "திருஷ்டி சுத்திப் போடணும்னீங்களே...."*

*மனைவியைப் பார்த்து விரக்தியாய்ச் சிரித்தார் கரிசல் காட்டுக் கதை சொல்லி. "என்னத்துக்கும்மா திருஷ்டி சுத்திப் போடணும், யார் கண்ணுமே நம்ம மேலப் படல. நாக்குதான் பட்டிருக்கு. ஆளாளுக்கு நாக்கால போட்டு விளாசிட்டாங்க. எனக்கு எம்பத்தஞ்சு வயசு ஆயிருச்சு தெரியுமோ? இன்னிக்கித்தான் சொன்னாக! ரொம்ப டயர்டா இருக்கும்மா எனக்கு. எம்பத்தஞ்சு வயசுக்காரனுக்கு நியாயமா இருக்க வேண்டிய சோர்வு இப்பத்தான் மெல்லத் தல காட்டுது."*

*கணவனை இழுத்துத் துணைவியார் தன்னுடைய மார்பில் சாத்திக் கொண்டார்கள். "அப்படியெல்லாம் பேசாதீக. அங்க மேடையில பேசின வசனங்கள யெல்லாம் மறந்துருங்க. நாம மெட்ராஸ்க்குப் போய்ட்டு வந்ததையே மறந்துருங்க. நீங்க சொல்ற இந்த சோர்வு ஒரு மனப் பிரமைதான். அந்த விழாவுல பேசினவங்க எல்லாம் சேந்து இந்த சோர்வை வலிய ஒங்க மேல திணிக்க ட்ரை பண்ணியிருக்காங்க. அவங்கெல்லாம் தோத்துத்தான் போவாங்க. ஒங்க ஒடம்பு எப்படி! நீங்க ஒரு ஸ்டீல் மேன்! எந்தக் கொம்பனும் ஒங்கள எதுவும் செஞ்சிருக்கிற முடியாது. என் ராஜா, நெஜம்மாவே நீங்க ஹீரோதான்."*

*அடுத்த நாள் காலையில் துயிலெழுந்தவர், எழுந்து காலைக் கடன்களை முடித்து விட்டு உடற்பயிற்சி செய்யலாமா வேண்டாமா என்கிற யோசனையிலிருந்த போது, அறைக்குள் பிரவேசித்த மனைவி,*

*"இனிமே நா வாக் போகப் போறதில்லீங்க" என்றார்கள்.*

“அட, எனக்கு புத்திமதி சொல்லி எங்கரேஜ் பண்ணிட்டு, நீ சோர்ந்து போய்ட்டியா” என்று சிரித்தார் எழுத்தாளர்.

“அதில்லீங்க, நீங்க எனக்கு ஸிம்ப்பிள் எக்ஸஸ்ஸைஸ் சொல்லித் தர்றேன்னீங்களே, அத சொல்லித்தாங்க. இனி நானும் ஒங்க கூட சேந்து எக்ஸஸ்ஸைஸ் செய்யப் போறேன். எந்திரிங்க.”

எழுத்தாளர் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்து, “அடி என் ராணீ” யென்று மனைவியைக் கட்டிட்டிக் கொண்டார். அந்த அதிகாலையில் அவர் இளைஞனாகவும் அவள் ஒரு இளம் பெண்ணாகவும் பிறவியெடுத்தார்கள், திரும்பவும்.

*******

கதையை எழுதி முடித்து விட்டு, பஸ் பிடித்துப் பாண்டிச்சேரிக்குப் பயணமானேன். கரிசல் காட்டு எழுத்தாளர் வீட்டையடைந்து கதவைத் தட்டினேன். கதவைத் திறந்த எழுத்தாளர், சிக்கனமான உடையில் வேர்க்க விறுவிறுக்க நின்றிருந்தார்.

“வணக்கம் ஐயா, நான் ஒரு எழுத்தாளன். ஒங்களப் போலவே கரிசல் காட்டுக்காரன்” என்று என்னை அறிமுகப்படுத்திக் கொண்டவுடன், “அடடே, அப்படியா? வாங்க வாங்க” என்று உள்ளே அழைத்து நாற்காலியில் அமரச் செய்தார்.

அம்மையாரும் வேர்வை துளிர்த்த முகத்தோடு இருந்தார்கள். ரெண்டு பேரும் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்திருக்கும் போது, நான் குறுக்கே புகுந்து விட்டதையுணர்ந்து, அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டேன்.

“பரவாயில்ல தம்பி, கிட்டத்தட்ட முடிஞ்சு போச்சு” என்றார் பெருந்தன்மையோடு.

“தம்பியோட மொகம் சமீபத்ல பாத்த மொகம் மாதிரியிருக்கே?”

“பாத்த மொகம் தாங்கய்யா, ஞாயித்துக்கெழம நீங்க மெட்ராஸ்க்குப் போனபோதும், திரும்பி வந்த போதும் நாந்தான் ஒங்கக் கார் டிரைவராயிருந்தேன்.”

“டிரைவர் கம் எழுத்தாளர்!”

“ஆமாங்கய்யா, அந்த விழா முழுக்க நா அங்க தான் இருந்தேன். எல்லார் பேசினதையும் கேட்டேன். நீங்க சங்கடப்பட்டதயும் கவனிச்சேன். ஒங்கள ஸ்டடி பண்ணினேன். இத ஒரு கதையா எழுதணும்னு எனக்குத் தோணிச்சு. எழுதிட்டு வந்திருக்கேன். ஐயா வாசிச்சிப் பாக்கணும். ஐயா ஓக்கே பண்ணீங்கன்னா பத்திரிகைக்கு அனுப்பலாம்னு இருக்கேன். கத ஐயாவுக்குப் புடிக்கும்னு நம்பிக்கையிருக்கு. பாதி நெஜம், பாதி கற்பனை.”

*வாசித்துப் பார்த்துவிட்டு, “கற்பனையே இல்ல தம்பி, முழுக்க முழுக்க நெஜம்” என்று என்னுடைய கைகளைப் பற்றிக் கொண்டார்.*

*பக்கத்திலிருந்த மனைவியிடம் கதையை வாசிக்கக் கொடுத்து விட்டு, “கத, படிக்க சொகம்மாயிருக்கு தம்பி” என்றார்.*

*“ஆனா, ஒண்ணே ஒண்ணு. ஆரம்பத்ல கதாநாயகனோட வயசு தெரியாம ஸஸ்பென்ஸ்ல இருக்கும்போது அவன் இவன்னு எழுதியிருக்கீங்க. அவனுக்கு எம்பத்தஞ்சு வயசுங்கறது தெரிய வர்றப்ப அவர் இவர்ன்னு வயசுக்குரிய மரியாதை குடுக்க ஆரம்பிக்கிறீங்க. அதான் கொஞ்சம் சங்கடப்படுத்துது. இந்தக் கதாநாயகன் என்னிக்குமே இளைஞன்தான். எல்லாத்தயும் அவன் இவன்னே மாத்திருங்க” என்று உற்சாகமானார் அந்தக் கரிசல் காட்டு இளவரசர்... அல்ல.. கரிசல் நாட்டு இளவரசன்.*

*(சமநிலைச் சமுதாயம், ஜூலை 2008)*

# குடிமக்கள்

*சேப்பாக்கம் ஸ்டேடியம் என்பது க்ரிக்கெட் கொண்டாடுகிற இடம் என்பது தெரியும். ஸ்டேடியமுக்குள்ளே போய் அறியாதவனானாலும், க்ரிக்கெட் பண்டிகை இல்லாத காலங்களில் அந்த வழியாய் மாநகரப் பேருந்தில் போனதுண்டு. அந்த விசாலமான மைதானத்தின் கிழக்கு, வடக்கு எல்லைகளில் அஞ்சு நட்சத்திர க்ளப்கள் ரெண்டு இயங்கி வருவது, அதில் ஒன்றுக்குள் பிரவேசிக்க எனக்கு வாய்ப்புக் கிட்டிய சாயங்காலம் வரை எனக்குத் தெரியவே தெரியாது.*

*ஒரு க்ளப் தமிழ்நாடு க்ரிக்கெட் குழுமத்துக்கும், மற்றது மெட்ராஸ் க்ரிக்கெட் சங்கத்துக்கும் சொந்தமானதாம். ரெண்டுமே மேட்டுக்குடி சமாச்சாரங்கள் தான். இவை பற்றி முன்னமேயே எனக்குத் தெரியாமற் போனது பெரிய அறியாமை ஒன்றுமில்லை. க்ரிக்கெட் கோட்டி பிடித்து அலைகிற சென்னை வாசிகளிலேயே 99 சதவீதம் பேருக்குத் தெரிந்திராத இந்த விஷயம் க்ரிக்கெட்டில் நாட்டமே இல்லாத இந்தத் திருநெல்வேலிக்கார எழுத்தாளனுக்குத் தெரியமற் போனது தான் நியாயம்.*

*க்ளார்க் வேலை பார்த்துக் கொண்டு, ஓய்ந்த நேரத்தில் தாமிர பரணிக் கரையில் உட்கார்ந்து கதையெழுதிக் கொண்டி ருந்தவன், கூவம் நதிக்கதையில் வந்து செட்டில் ஆகி வருஷம் பதினஞ்சு ஓடிப்போய்விட்டது. நானும் பிஸினஸ் செய்யப் போகிறேன் என்று மெட்ராஸ்க்கு வந்து சூடு போட்டுக் கொண்ட பிறகு தான் வாழ்க்கை நாறிப் போனது, கூவம் மாதிரி. பேனா பிடிக்கிறவனுக்குத் தராசு பிடிக்க மயிரா தெரியும்!*

*பிஸினஸை மூடி விட்டு முழு நேர எழுத்தாளனாகியாச்சு. கஷ்ட ஜீவனம். அதனால் தான் தன்னுடைய பிறந்த நாள் விருந்து என்று இந்தத் தொழிலதிபர் அழைத்த போது நாக்கில் நீர் சொட்ட இந்த சேப்பாக்கம் க்ளப்பைக் கண்டு பிடித்து ஆஜராகிவிட்டேனா என்கிற நினைப்பு வருகிறது.*

*எப்படியும் இவருடைய அழைப்பை நிராகரித்திருக்க முடியாதுதான். கொஞ்சம் இலக்கிய ஆர்வமிருக்கிற பணக்காரர். நம்மோட பரம வாசகர் வேறே. வந்தவர்களெல்லாம் பெரும்பாலும் ஆளுக்கொரு மலர்க் கொத்து வைத்திருந்தார்கள். சிலர் பரிசுகள் கொண்டு வந்திருந்தார்கள், ஜிகினாப் பேப்பரில் சுற்றி.*

*நானும் ஒண்ணும், ஹ, வெறுங்கையோடு போகவில்லை. உதயக்கண்ணன் பதிப்பித்த என்னோட லேட்டஸ்ட் சிறுகதைத் தொகுதியின் ஒரு பிரதியோடு போனேன். வாழ்த்துரைகள், முகஸ்துதிகள் எல்லாம் முடிந்த பின்னால், ஆண்களெல்லாம் கைகளில் கிண்ணங்களை ஏந்திக் கொண்டார்கள்.*

*"என்ன வேடிக்க பார்த்துட்டு நிக்கிறீங்க? வாங்க, ரெண்டு ரவுண்டு போடுங்க. போடுவீங்கல்ல?" என்று அழைத்தார், தொழிலதிபர்.*

*“இல்ல சார் பழக்கமில்ல” என்று புன்னகைத்தேன்.*

*“ஓ, சரி, அப்ப டின்னர் சாப்ட்ருங்க. நா ஒரு நாலு பெக் போட்டுட்டுத் தான் வருவேன், ஸாரி. நீங்க ஆரம்பிங்க.”*

*நடப்பன, பறப்பன, நீந்துவன எல்லாவற்றையும் ஒரு பிடி பிடித்துவிட்டு வாச்சைப் பார்த்தபோது பகீரென்றது. மணி ஒம்பதே முக்கால். வங்காள விரிகுடாவுக்கு அருகாமையிலிருக்கிற இந்த ஏரியாவிலிருந்து அண்ணா நகருக்குப் போவதற்கு இந்த ராத்திரிக்குமேல் பஸ் கிடைக்குமா!*

*ரெண்டு மூணு கோப்பைகளைக் காலி செய்துவிட்டுச் செல்லக் கிறக்கத்திலிருந்த தொழிலதிபரிடம் சொல்லி விட்டுக் கிளம்பி, வாலாஜா ரோடு பஸ் ஸ்டாப்பில் வந்து நின்ற அரைமணி நேரத்துக்கு அண்ணா நகர் பஸ் எதுவும் வரவேயில்லை.*

*பரவாயில்லை, அந்தத் திசையில் போகிற எந்த பஸ் வந்தாலும் ஏறி, முடிந்த வரை அண்ணா நகரை சமீபித்து விடுவது என்று அயனாவரம் போகிற பஸ்ஸில் ஏறினேன். புரசைவாக்கத்தில் இறங்கி, ஸெவன் ஸிரிஸ் பஸ்களில் ஒன்றைப் பிடிக்க வேண்டும்.*

*ரெட்டை டிக்கட் வாங்கிப் புரசைவாக்கத்தில் இறங்கி, புரசை வாக்கம் டாங்க் சாலையில் ஏழு வரிசை பஸ் ஸ்டாப்பில் காத்திருந்த போது, அந்த க்ளப்பில் விருந்துக்கு வந்திருந்த கும்பலில், பஸ்ஸுக்குக் காத்திருக்கிற பரிதாப ஜீவன் நான் ஒருவனாய்த்தானிருப்பேன் என்கிற நினைப்பு வந்து மனசு லேசாய்க் கனத்தது. என்னைத் தவிர எல்லோருமே அங்கே லட்சாதிபதிகளாகவோ கோடீஸ்வரன்களாகவோ தான் இருப்பார்கள்.*

*பெல்ஸ் ரோடு கையேந்திபவன்களில் இட்லியும் மீன்குழம்பும் தின்று விட்டு, பீடி புகைத்தபடி கார்களுக்கருகில் காத்திருப்பார்கள் டிரைவர்கள், தங்கள் எஜமானர்களை பத்திரமாய் வீடு போய்ச் சேர்க்க. எஜமானர்களெல்லாம் மத மதப்பிலிருப்பார்கள். மது மிதப்பில்!*

*எனக்கு ஞாபகமிருக்கிறது. 1971இல் திருச்சியில் நான் படித்துக் கொண்டிருந்த காலத்தில் தான் தமிழ்நாட்டில் மதுவிலக்கு விலக்கிக் கொள்ளப்பட்டது. சந்தனப் பொட்டுகள் வைக்கப்பட்டு, பூச்சோடனை செய்யப் பட்ட மண்பானைகள், அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டிகளில் அட்டகாசமாய் அடுக்கப்பட்டுப் பக்கத்துக் கிராமங்களிலிருந்து திருச்சி நகரத்துக்குள்ளே பிரவேசித்ததை மனக்கொதிப்போடு பார்த்து நின்றது ஞாபகமிருக்கிறது.*

*பானைகளுக்குள்ளே கள், சாராயம். குடியென்றால் என்னவென்று தெரியாமல் வளர்ந்திருந்த ஒரு தலைமுறை அன்று முதல்தான் பாழ்படுத்தப்பட்டது.*

*சில வருஷங்கள் கழித்து ஒரு குறுகிய காலத்துக்கு மீண்டும் மதுவிலக்கு அமுலுக்கு வந்த போது, மது விலக்குக்கு முந்தின ராத்திரி எல்லா கள், சாராயக் கடைகளிலும் ஒரே சினிமாப் பாட்டு திரும்பத் திரும்ப இசைத்துக் கொண்டிருந்ததும் நினைவில் பசுமையாயிருக்கிறது.*

*நாளை முதல் குடிக்க மாட்டேன் சத்தியமடி தங்கம்*
*இன்னிக்கி ராத்திரிக்கித் தூங்க வேணும்*
*ஊத்திக்கிறேங் கொஞ்சம்.*

அரசாங்க வருமானம் குறைத்து போனதைக் காரணங்காட்டி, மது விலக்கு மறுபடியும் தளர்த்தப்பட்டபோது, குடிப்பதற்குப் பர்மிட் என்றொரு கண்ணாமூச்சி விளையாட்டு அரங்கேற்றப்பட்டது.

திருநெல்வேலியில், நம்ம ஆஃபீஸில், சப் ஸ்டாஃப் முதல் மானேஜர் வரை எல்லாருமே மது அருந்துகிறவர்களாகவே இருந்தார்கள். எல்லாருமே பர்மிட் வைத்திருந்தார்கள். அஸிட்டன்ட் மானேஜராயிருந்த சண்முகம், திருநெல்வேலி ஆல் இண்டியா ரேடியோவில், தென்கச்சி சுவாமிநாதன், பைம்பொழில் நாகூர்மீரான் உள்ளிட்ட நண்பர்களைக் கொண்டிருந்தவர். என்னுடைய சிறுகதை ஒன்றை ரேடியோ நாடகமாய் வடிவமைத்த சண்முகம், அதன் ஒலிப்பதிவுக்கு என்னையும் கூட்டிக் கொண்டு போனார்.

மாடியில் ஒலிப்பதிவு ஸ்டூடியோ, மாடிப்படிகளுக்குக் கீழே பாட்டில். பத்து நிமிஷத்துக்குக் கொருதரம் சண்முகம் கீழே இறங்கி வருவார். அரை கிளாஸ் உள்ளே இறங்கும்.

எனக்கும் அவர் கொஞ்சம் ஊற்றிக் கொடுத்ததை விளையாட்டுப் போல வாயில் ஊற்றிக் கொண்டேன். ராத்திரி ஸ்கூட்டரில் வீட்டுக்குப் போனபோது, மேகங்களின் மேலாய் மிதந்து போகிறது மாதிரி இருந்தது.

அப்பாதான் வந்து கதவைத் திறந்தார். மகனை சந்தேகமே படாத அருமையான அப்பா. வாயைத் திறக்கவே திறக்காமல் படியேறி மாடியறைக்குப் போய் நல்ல பிள்ளையாய்ப் படுத்துக் கொண்டேன்.

ஆகையினாலே, நம்ம வாசகத் தொழிலதிபரிடம், பழக்கமில்லையென்று நான் சொன்னது ஒரு சமயோசிதப் பொய்.

இங்கே மெட்ராஸில் கடை வைத்திருந்த காலத்தில் பெரிய கம்பெனிகள் சில, நட்சத்திர ஹோட்டேல்களில், ப்ராடக்ட் லாஞ்ச் என்று விழா வைப்பார்கள். அழைப்பு வரும். விழாவிலே மது பரிமாறப்படும். ஓஸியில் குடிப்பதற்கென்றே வியாபாரிகள் வருகை தருவார்கள். விருந்தளிப்பவர்களின் வற்புறுத்தலுக்காக நானும் ஒரு கிளாஸைக் கையில் வைத்துக் கொள்வேன். மதுவை உறிஞ்சுவது போலப் பாவ்லா பண்ணிவிட்டு, அப்படியே வைத்துவிட்டு சாப்பாட்டுக்கு நகர்ந்து விடுவேன்.

அந்த அற்ப உறிஞ்சலுக்கே அடுத்தடுத்து ஆல்கஹால் ஏப்பங்கள் வந்து அருவறுப்பூட்டும். ஒரு பார்ட்டியில், என்னுடைய இந்த ஏமாற்று வேலையை அவதானித்துக் கொண்டிருந்து கேலி செய்த சிலருக்கு சவால் விடுகிற மாதிரி மூக்கைப் பிடித்துக் கொண்டு மூணு ரவுண்டு முழுங்கி விட்டேன்.

பித்தம் தலைக்கேறிய பிறகுதான் பின் விளைவுகள் புலப்பட ஆரம்பித்தன. பாத்ரூமுக்குப் போக எழுந்தால், கால்கள் பின்னிக் கொண்டு, நடக்கவே இயலவில்லை. சாப்பாட்டுக்குப் போக முடியவில்லை. ஸோஃபா ஒன்றில் சரிந்ததை உணர்ந்தேன்.

*கண் விழித்துப் பார்த்தபோது, அறையில் எவருமே இல்லை, ஒரேயொரு வெய்ட்டரைத் தவிர. ரொம்ப வெட்கமாய்ப் போனது. மிடாக்குடியர்களெல்லாம் நான் படுத்துக் கிடக்கிறதைப் பார்த்து ஏளனமாய் நகைத்து விட்டுப் போயிருப்பார்கள். ரொம்ப அற்பமாய் உணர்ந்தேன்.*

*அந்த அசிங்க ராத்திரிக்குப் பிறகுதான் ஆல்கஹாலை இனி அண்டவே விடுவதில்லையென்கிற சபதமெடுத்தேன். பத்து வருஷத்துக்கு மேலாச்சு.*

*சரி, இப்போது முக்கால் மணி நேரத்துக்கு மேலாச்சு, ஏழு வகையறா பஸ் எதுவுமே எட்டிப் பார்க்கவில்லை. ரிக்ஷாக்காரன் ஒருவன், போகிற போக்கில் ஒரு பரோபகாரம் பண்ணி விட்டுப் போனான். "இந்த ஸ்டாப்பண்ட பஸ் ஏதும் இப்ப வராது சார். அப்பால எட்டிப் போய் அந்த ஸ்டாப்ல நில்லு. கோயம்பேடு பஸ் வரும்."*

*ரொம்ப நன்றியப்பா என்று எட்டிப்போய் நின்று, கோயம்பேடு போகிற பஸ்ஸில் ஏறிக் கொண்டேன். மறுபடியும் டபுள் டிக்கட்.*

*அமிஞ்சிக்கரை, அரும்பாக்கம் எல்லாம் தாண்டி, கோயம்பேடு ரவுண்டானாவில் இறங்கி வாச்சைப் பார்த்தபோது மணி பனிரெண்டேகால்.*

*பூந்தமல்லி நெடுஞ்சாலையில் மேற்கு நோக்கி நடக்க வேண்டும். ரோகிணி த்யேட்டரைத் தாண்டி ஒரு ஃபர்லாங் நடந்து, வலது பக்கம் எடை மேடையையொட்டி இறங்கினால் பாடிக்குப்பம் ரோடு வந்து விடும்.*

*அண்ணாநகரின் மேற்கு எல்லை.*

*தன்னந்தனியாய் நடந்து கொண்டிருந்தவனுக்கு வழித்துணையாய் வந்து சேர்ந்தது, சுவாரஸ்யமானதொரு மலரும் நினைவு. நம்ம கடையில் வாட்ச்மேனாயிருந்த கஜேந்திரன். ராத்திரி ராத்திரி குடித்துவிட்டுப் படுத்திருப்பான்.*

*"திரும்பத் திரும்ப எதுக்குய்யா குடிக்கப் போற? அங்க தான் எழுதி வச்சிருக்கான்ல குடி குடியைக் கெடுக்கும்னு?" என்று நான் கேட்டதற்கு கஜேந்திரன் சொல்லுவான்,*

*"அத மட்டுமா சார் எழுதி வச்சிருக்கான்? வேற ஒண்ணும் எழுதி வச்சிருக்கானே சார்?"*

*"வேற என்னய்யா எழுதி வச்சிருக்கான்?"*

*"நன்றி மீண்டும் வருக."*

*ரோடில் ஈ காக்கா இல்லை. எடைமேடையை அடையுமுன்னால் ஒரேயொரு மனித முகத்தைப் பார்த்துவிட வேண்டுமென்று ஆசையாயிருந்தது. என்னைப்போன்ற பாவப்பட்ட எவனாவதொருவன் எதிர்ப்படாமலா போவான்!*

*எதிர்ப்பட்டான்.*

*எதிர்த்திசையிலிருந்து, புள்ளியாய்த் தோன்றி நிழலாய் வடிவமெடுத்து ஒருவன் வந்து கொண்டிருந்தான். ஆஹா, என்னைப் போல் ஒருவன்!*

*ஐயோப்பாவம், நெற்குன்றத்திலிருந்து நடந்து வருகிறவனாயிருக்கும். என்னுடைய அசதியையும் மீறி அவன்மேல் ஒரு பரிவு ஏற்பட்டது. அருகில் அவன் நெருங்கியதும் என்னுடைய பரிவை வார்த்தைகளில் வெளிப்படுத்த வேண்டுமென்கிற பதைப்பு இருந்தது.*

*அவன் நெருங்கி வந்ததும் சிநேக பூர்வமாய்ப் புன்னகைத்தேன்.*

*"எங்க, நெற்குன்றம் பக்கமிருந்தா வாறீங்க?"*

*"ம்? மதுரவாயில்."*

*அடப்பாவி, நெற்குன்றத்தையும் தாண்டி மதுரவாயிலிலிருந்து வருகிறான். எப்படியும் மூணு மூணரைக் கிலோ மீட்டர் நடந்திருப்பான்.*

*நான் பரவாயில்லை சாமி!*

*"சார் நீங்க எங்கயிருந்து வர்றீங்க?" என்று என்னை நோக்கி ஒரு கேள்வியை வைத்தான்.*

*"கோயம்பேடு டர்ணிங்ல பஸ்ல எறங்கி நடந்து வர்றேங்க. நீங்க எங்க, கோயம்பேட்டுக்கா போறீங்க?" என்று நான் கேட்டதற்கு,*

*"நா இப்ப எங்க போறேன்னு எனக்கே தெரியாது" என்று ஒரு புதிரை பதிலாய்த் தந்தான்.*

*தொடர்ந்து, அவனுடைய அடுத்த கேள்வி வந்தது:*

*"சார், நீங்க வர்ற வழியில ஒயின் ஷாப் ஏதாவது தொறந்திருந்ததுங்களா?"*

*(வடக்கு வாசல் இலக்கியமலர், செப்டம்பர் 2008)*

# சின்னதாய் ஒரு பெருநாள்

*அண்ணாநகர் மேற்கு டிப்போவில் பஸ்ஸிலிருந்து இறங்கித் தங்கச்சி வீட்டுக்கு நடக்கிற வழியில், ஒரு மீடியம் சைஸ் மிட்டாய்க் கடையில் அரைக்கிலோ ஸ்வீட்ஸ் வாங்கிக் கொண்டேன்.*

*ஐம்பது ரூபாய் அவுட்.*

*நம்ம தரித்திரத்துக்கு இது ஆடம்பரச் செலவுதான். சரி அதற்கென்ன செய்ய, சின்னப் பிள்ளைகள் மூணு பேர் இருக்கிற வீட்டுக்குக் கையை வீசிக் கொண்டு போய் நிற்க முடியுமா!*

*என்னைப் பார்த்ததும் 'மாமா வந்துட்டாங்க, மாமா வந்துட்டாங்க' என்று குழந்தைகள் குதூகலமடைந்தன.கடைக்குட்டியின் கையில் மிட்டாய்ப் பெட்டியைக் கொடுத்தது, அதுகளப் பெரிசாய் சந்தோஷப் படுத்திவிடவில்லை.*

*'மாமா, பெருநாக்காசு, பெருநாக்காசு' என்று பிடுங்கியெடுத்த பிள்ளைகளிடமிருந்து தங்கச்சி வந்து என்னைத் தடுத்தாட்கொண்டாள்.*
*'புள்ளைங்களா, வந்தவொடனேயே மாமாவத் தொந்தரவு பண்ணப்படாது. பெருநாக்காசெல்லாம் மாமா தருவாக. கிச்சன்ல போய் பிரியாணி ஆயிருச்சான்னு பாருங்க. மாமா பசியோடயிருப்பாக' என்று பிள்ளைகளைத் திசைதிருப்பிய தங்கச்சி என்னை வரவேற்றாள்.*

*"வாங்கண்ணே, காலைல நாஷ்டாவுக்கே வந்துருவீங்கன்னு பாத்தேன்."*

*'நாஷ்டாவா? அதயெல்லாம் நா மறந்து போய் ரொம்ப நாள் ஆச்சும்மா' என்று சிரித்தேன்.*

*"ஒரு நாளக்கி நாஷ்டா பண்ணா, அப்பறம் சொல்லி வச்ச மாதிரி காலைல காலைல பசிச்சிரும். நமக்குக் கட்டுபடியாகாது."*

*'அப்படியெல்லாம் பேசாதீகண்ணே, நீங்க என்ன இப்படியேவா இருந்துரப் போறீக. எல்லாம் சரியாப் போயிரும். எல்லாம் ஒரு சோதன தானே, ஒங்கள இப்படியேயிருக்க வுட்றுவானாக்கும் அல்லா?' என்று தங்கச்சி எனக்கு நல்ல வார்த்தைகள் சொல்லிக் கொண்டிருந்தபோது, பெட்ரூமுக்குள்ளிருந்து வெளியே வந்தார் மச்சான்.*

*"ஈத் முபாரக் மொதலாளி! வாங்க, இப்பத்தான் வந்தியளாக்கும்?"*

*"மொதலாளி என்ன மச்சான் மொதலாளி! கிண்டல் தான இது!"*

*“அல்லா, கிண்டலெல்லாம் கெடையாது மொதலாளி, என்னக்கிருந்தாலும் நீங்க எங்களுக்கெல்லாம் மொதலாளி தான். இப்ப ரெஸ்ட்ல இருக்கீக. திரும்பவும் மொதலாளி ஆகாமலா போயிரப் போறீக? திரும்பவும் நீங்க யாவாரம் தொடங்கி ஓஹோன்னு வரணும்னுட்டுத்தானே நாங்க நெதம் அஞ்சு நேரம் தொழுகையில அல்லாட்ட துஆக் கேட்டுட்டிருக்கோம் மொதலாளி.”*

*“ஆமீன். ஒங்க துஆ பலிக்கட்டும் மச்சான்—.”*

*“பலிக்காம வுட்றுவோமா! சரி, பெருநாத் தொழுகக்கி இங்ஙன அண்ணாநகர்க்கு வந்துருவீகண்டு பாத்தேன். தொழுக்கி எங்க போனீக?”*

*“வூட்டுக்குப் பக்கத்துல பள்ளி இருக்குல்லா, அங்ஙனயே தொழுதுக்கிட்டேன். பிரியாணி வாசம் ஆளத் தூக்குதே மச்சான்! பயங்கரப் பசி. சாப்ட்டுட்டே பேசுவோமே.”*

*“அதுவும் சரிதான், நீங்க நாஷ்டா பண்ணாத ஆசாமி. சீக்கிரம் சாப்பாடு வக்யச் சொல்லுவோம்.”*

*டைனிங் டேபிளைச் சுற்றி மச்சான், தங்கச்சி, பிள்ளைகள், நான் எல்லோரும் உட்கார்ந்து மட்டன் பிரியாணியையும் சிக்கன் ஃப்ரையையும், ஒரு கை பார்த்துக் கொண்டிருக்கும்போது, ‘மாமா, நீங்க பெருநாளக்கி புது டிரஸ் எடுக்கலியா? எங்களுக்கெல்லாம் வாப்பா ரெண்டு ரெண்டு ஸெட் எடுத்துக் குடுத்தாங்க’ என்று ஒரு வாண்டு சொன்னதற்கு, ‘ஒங்களுக் கெல்லாம் வாப்பா இருக்காக. எனக்கு டிரஸ் எடுத்துக் குடுக்க யார் இருக்கா கண்ணு?’ என்றேன், சோகமாய் முகத்தைச் சுளித்து.*

*‘நா ஒங்கட்ட சொல்லணும்னு நெனச்சிட்டிருந்தேன். மறந்தே போச்சுங்க. அண்ணனுக்கு ஒரு பான்ட் ஷர்ட் எடுத்திருக்கலாம்’ என்று தங்கச்சி வருத்தப்பட்டதற்கு, ‘நீ ஒண்ணும்மா, நா என்ன சின்னப் புள்ளையா?’ என்று நியாயம் பேசினேன் நான்.*

*‘அப்ப நாங்க மட்டும் என்ன சின்னப் புள்ளைங்களா?’ என்று மறுப்பு வெளியிட்டார் மச்சான்.*

*“ஒங்க ஸிஸ்டரும் சொல்லல. எனக்கும் தோணல பாருங்க மொதலாளி.”*

*புது டிரஸ்!*

*தோள்பட்டையில் ஃப்ளாப் வைத்து, நானே டிஸைன் செய்த கலர்க் கலரான, வித்யாசமான சட்டைகளை இன் செய்து கொண்டு, மாட்ச்சிங்காய் டை கட்டிக் கொண்டு கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு வளைய வருவேன், என்னுடைய பிரம்மாண்டமான கடைக்குள்ளே, நிஜம்மாகவே, நான் முதலாளியாயிருந்த வசந்த காலத்தில்.*

*ரகம் ரகமான, டைகள் மட்டும் ஒரு மூணு டஜன் ஸ்டாக் வைத்திருந்தேன். என்னுடைய அசத்தலான ஆடையலங்காரம், ஆகாய விமானப் பைலட் மாதிரியிருக்கிறது என்று கண் திருஷ்டி போட்டவர்கள் நிறைய. இப்போது,*

*பிஸினஸ் போச்சு. கடையை மூடியாச்சு. டை கட்டி அசத்தின காலமெல்லாம் காலாவதியாகிப் போச்சு.*

*'என்ன மொதலாளி, என்ன யோசனையா இருக்கீக' என்று என்னை உசுப்பி விட்ட மச்சானை, 'பிரியாணி ரொம்பட் டாப் மச்சான், ரசிச்சி ரசிச்சித் தின்னுட்டிருக்கேன்' என்று சமாளித்தேன்.*

*'பிரியாணியப் போட்டு வயித்த நெரப்பிராதீங்கண்ணே, டெஸர்ட்டுக்குக் காரமல் புட்டிங் இருக்கு மறந்துராதீங்க' என்று சிரித்தாள் தங்கச்சி.*

*'இன்னொண்ணையும் மறந்துராதீங்க மாமா' என்று நினைவு படுத்தியது ஒரு சின்னக் குரல்.*

*"பெருநாக் காசு!"*

*'ஷ்ஷ்'ஷென்று உதடுகளின் குறுக்கே விரலை வைத்து அந்தக் குரலை அடக்கினாள் தங்கச்சி.*

*"சாப்புடும்போது யாரும் பேசப்படாது."*

*"அப்ப நீங்க பேசறீங்க?"*

*"நாங்க பெரியவங்க பேசலாம். சின்னப் புள்ளைங்க பேசப் படாது."*

*பெருநாள் காசு!*

*நாங்கள் சின்னப் பிள்ளைகளாயிருந்த காலத்தில் பெருநாக்காசு என்று ஐம்பது பைசா கிடைத்தால் அபூர்வம். வீட்டுக்கு விருந்தாளிகள் நிறைய பேர் வந்தால், ஒரு ரூபாய் வரை தேறும்.*

*ஸ்ரீவைகுண்டத்திலிருந்த போது, வாப்பாவுக்குத் தெரிந்த ஒரு ஹாஜியார் ஈத் அன்று வீட்டுக்கு வந்தவர், புத்தம்புது ரெண்டு ரூபாய்த் தாள் ஒன்றைக் கொடுத்துப் புளகாங்கிதப் படுத்தி விட்டார் என்னை.*

*அதில் ஒரு ரூபாய்க்கு வாடகை சைக்கிள், நாள் வாடகைக்கு எடுத்து, பின்சக்கரத்தில் பலூன் கட்டிக் கொண்டு, மோட்டார் சைக்கிள் மாதிரி டபடப என்று ஒலியெழுப்பியபடி பள்ளி வாசலையும் கோவிலையும் சுற்றிச் சுற்றி வந்தது நினைவிருக்கிறது.*

*ரெண்டு ரூபாயைப் பார்த்தது ஸ்ரீவைகுண்டத்திலென்றால், அஞ்சு ரூபாய் நோட்டை முதன் முதலாய் முழுசாய்ப் பார்த்தது, பாளையங்கோட்டையில், சித்தி கல்யாணத்தில்.*

*சித்தியின் சகோதரர்களெல்லாம் சித்தியை விட மூத்தவர்களானதால், அக்கா மகனான எனக்கு அடித்தது. மாப்பிள்ளைக்குக் கால் நனைத்து விடுகிற அதிர்ஷ்டம். அப்போது தான் ஐந்து ரூபாய்த் தாள் ஒன்று கை மாறி என்னைத் திக்கு முக்காட்டி விட்டது.*

அந்த அஞ்சு ரூபாயைச் சில்லறை மாற்றி, அதில் பாதியை அக்காவுக்குத் தந்தது போக, மீதி ரெண்டரை ரூபாயில் அசோக் டாக்கிஸுக்குப் பக்கத்திலிருந்த வாப்பாக் கடையில் அரையணா ஆம வடையாய் வாங்கிக் கிட்டத்தட்ட ஒரு மாசத்துக்கு தினந்தினம் கான்வென்ட் விட்டு வந்ததும் தின்று தீர்த்தது ஒரு மலரும் நினைவு.

வாப்பாக்கடையை நடத்திக் கொண்டிருந்த சகோதரர்கள் அந்தக் காலத்துத் திராவிட இயக்கத்தின் ரசிகர்கள். கடைக்குள்ளே அண்ணா, நெடுஞ்செழியன், கருணாநிதி, என்விஎன், சத்தியவாணி முத்து, அன்பழகன், மதியழகன் என்று வரிசையாய் இளந் திராவிடத் தலைவர்களின் படங்கள் மாட்டியிருக்கும். அதோடு, திராவிட நடிகர் கே ஆர் ராமசாமியின் சொர்க்க வாசல் ஸ்டில்லும் ஃப்ரேம் போட்டுத் தொங்கும். வாப்பாக் கடை மட்டன் சுக்காவின் நறுமணத்தை இப்போது நினைத்துப் பார்த்தாலும் நாக்கில் நீர் ஊறுகிறது.

அசோக் டாக்கீஸெல்லாம் இப்ப மூடியாச்சு என்று சொன்னார்கள். வாப்பாக் கடை கூட இப்போது இருக்கிறதோ இல்லையோ.

பாளையங்கோட்டைப் பக்கம் போயே பத்து வருஷத்துக்கும் மேலாச்சு.

சரி, அம்பது பைசா ஒரு ரூபாய், ரெண்டு ரூபாய் பெருநாக்காசு பெரிசாய்த் தெரிந்ததெல்லாம் நம்ம பள்ளிப் பருவத்தில்.

இப்போது, இந்தக் குழந்தைகளுக்குப் பெருநாக்காசு தர வேண்டுமென்றால், தலா அம்பது ரூபாயாவது தர வேண்டும். மூணு இன்ட்டு அம்பது, நூத்தியம்பது.

அல்லா, செத்தேன்.

பாக்கெட்டில் நாப்பது நாப்பத்தஞ்சு ரூபாய் இருந்தால் அதிகம். அஞ்சு வருஷத்துக்கு முந்தி வரை ஓர் அஞ்சு நட்சத்திர டிபார்ட்மென்ட் ஸ்டோர் நடத்திக் கொண்டிருந்த இந்த 'மொதலாளி' ஒரு ஐம்பது ரூபாய் பெருநாக்காசு கொடுக்க வக்கத்துப் போனேனே என்று உணர்ந்தபோது நெஞ்சில் நோவெடுத்தது.

நம்ம கடை ஓஹோவென்றிருந்த காலத்தில், இந்தக் கடைக்குட்டி மட்டும் பிறந்திருக்கவில்லை. பெரிய ரெண்டு பிள்ளைகளும் சர்வ சுதத்திரத்துடன் கடைக்குள்ளே புகுந்து, விளையாட்டுச் சாமான்கள் என்ன, காமிக்ஸ் என்ன, சாக்லெட் பார்கள் என்ன என்று மாமாக் கடையிலிருந்து அள்ளிக் கொண்டு போனதுண்டு.

இப்போது நான் அதாலபாதாளத்தில் விழுந்து கிடப்பது இந்தப் பிஞ்சுகளுக்குப் புரிந்திருக்க நியாயமில்லை.

புரியாமலேயிருப்பதே நல்லது.

ஆனால் இன்னொரு தரம், 'மாமா, பெருநாக்காசு' என்று இதுகள் வாயைத் திறந்தால் நான் ரொம்ப அசிங்கப்பட்டுப் போவேன்.

உண்ட மயக்கத்தில் இதுகள் உறங்கப் போய்விடாதா?

*போகவில்லை.*

*சினிமாவில் 70எம்எம் இருக்கிற மாதிரி டெலிவிஷனிலும் 70 எம்எம் இருக்கிறதோ என்று ஆச்சர்யப்படுகிற மாதிரி, அகன்ற எல் ஸி டி திரையில் என்னமோ ஒரு மிஸ்டர் பீன் காமெடி ஓடிக் கொண்டிருந்தது.*

*உட்கார்ந்திருக்கவும் இருப்புக் கொள்ளாமல், கிளம்பவும் தைரியமில்லாமல் நான் தவிப்புடன் இருந்தேன். எப்படியும் கிளம்பத்தான் வேண்டும்.*

*குழந்தைகளின் விழிகள் டெலிவிஷன் திரையில் பதிந்திருக்க, 'நா கௌம்பறேம்மா' என்று செய்கையால் உணர்த்தினேன் தங்கச்சிக்கு.*

*ஸோஃபாவிலிருந்து எழுந்து கொண்ட அவள், 'அண்ணே, இப்படிக் கொஞ்சம் வாங்களேன்' என்று என்னைக் கிச்சனுக்கு வழி நடத்திப் போனாள்.*

*போனவள், 'அண்ணே, ஒண்ணும் தப்பா நெனச்சிக்கிராதீகண்ணே' என்று, நூறு ரூபாய்த் தாள்கள் மூன்றை என்னுடைய கைகளில் திணித்தாள்.*

*"பெருநாக்காசுன்னு சொல்லி அதுக மூணுங்க கையிலயும் ஆளுக்கொரு நோட்ட, நீங்க குடுத்த மாதிரிக் குடுத்துட்டுப் போயிருங்கண்ணே."*

*கல்கி, 23.11.2008*
*(பெருநாள் காசு)*

# நேற்று இன்று நாளை

விஸ்வநாதனுடைய அப்பா இறந்து போன தகவல் கிடைத்ததும், அண்ணா நகரிலிருந்து பொடி நடையாய் வில்லிவாக்கத்துக்குப் புறப்பட்டேன். பொடி நடைக்கு நாற்பது நிமிஷம். எட்டி நடந்தால் அரைமணி நேரம். ஏ.ஸி. காரில் பந்தாவாய்ச் சென்னையைச் சுற்றி வந்த காலமொன்று இருந்தது. பிஸினஸ் டௌனான பிறகு, இப்போதெல்லாம் பஸ் அல்லது பொடி நடைதான்.

பள்ளிக்கூடத்தில் பாடியை வைத்திருந்தார்கள். விஸ்வநாதனுடைய தாத்தா கட்டின பள்ளிக்கூடம். வாரிசு முறைப்படி தாத்தாவுக்குப் பிறகு அப்பா, அப்பாவுக்குப் பிறகு விஸ்வநாதன் இப்போது கரஸ்பாண்டன்ட்.

நான் செழிப்பாயிருந்த காலத்தில் ஏற்பட்ட நட்பு, நொடித்துப் போன பின்னாலும் தொடர்ந்து கொண்டிருப்பது பெரிய விஷயம்.

அப்பாக்களைப் பற்றிய பேச்சு வருகிறபோது ‘எங்கப்பா 93 நட் அவுட்’ என்று விஸ்வநாதன் சிரிப்பான். இப்போது, 94ல் அவுட் ஆனவருடைய உடலைச் சுற்றிக் குறைந்த பட்ச சோகந்தான் நிலவியது என்பது, துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளப்போன எனக்கு ஆறுதலாயும் அனுகூலமாயும் இருந்தது. விஸ்வநாதன் என் கையைப்பற்றிக் கூடத்துக்குக் கூட்டிப்போய் அப்பாவின் கால்மாட்டில் நிறுத்தினான். சம்பரதாயமான, குளிரூட்டப்பட்ட கண்ணாடிப் பேழைக்குள்ளே உடல் படுத்திருந்தது.

உயிர் எங்கேயோ.

உயிர் என்று சொல்லுவதா, ஆத்மா என்று சொல்லுவதா?

உயிரோ, ஆத்மாவோ, அது இந்த உடலோடு ஒன்றியிருந்த போது இந்த மனிதரைப் பார்க்க வாய்க்கவேயில்லையே என்கிற வருத்தம், அவருக்காக ப்ரார்த்தித்த போது உறுத்தியது.

வெராண்டாவில் போடப்பட்டிருந்த நாற்காலிகள் காலியாயிருந்தன. என்னை உட்கார்த்தி வைத்து, விஸ்வநாதனும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். மற்ற நண்பர்கள் யாரும் இன்னும் வந்து சேரவில்¬லை. கார்களில் வருகிறவர்கள் சவுகரியமாய்த்தான் வருவார்கள்.

கார்கள் வருமுன் கிளம்பிவிட வேண்டும் என்று நான் யோசித்துக் கொண்டிருந்தபோது, ‘எப்படி வந்த?’ என்று அவசியமில்லாத கேள்வியொன்றை முன்வைத்து விஸ்வநாதன், அவசியமில்லாத பொய்யொன்றை என்னிடமிருந்து வர வழைத்தான்.

“ம்? ஆட்டோ.”

முந்தைய கேள்வியே உத்தமம் என்கிற மாதிரி அவனுடைய அடுத்த கேள்வி வந்து விழுந்தது.

"ஆட்டோவுக்கு எவ்ளோ கேட்டான்?"

அடுத்த பொய்க்கு உருவம் கொடுப்பதற்குத் தடுமாறிப் போனேன்.

என்னதான் சோகம் தரை தட்டிக் கிடந்தாலும், அடேய் விஸ்வநாதா, சாவு வீட்டில் வைத்து இப்படியெல்லாமா அவுட் ஆஃப் போர்ஷன் கேள்விகள் கேட்பாய்!

'ஒங்க வாப்பா எப்படியிருக்கார்?' என்றான் அடுத்தபடியாய். இது நியாயமான கேள்வி.

ஆனாலும் அநியாயமாய் வாப்பாவைப் பற்றிய விசனத்தை எனக்குள் உசுப்பி விட்டு விட்டது. வாப்பாவின் உடல்நிலை ரொம்ப ரொம்ப கவலைக்கிடமாய்த்தானிருக்கிறது என்கிற கவலையை அவனோடு பகிர்ந்து கொண்டேன்.

ரெண்டு மாசமாய்ப் படுத்த படுக்கையாய்க் கிடக்கிற வாப்பாவுக்கு சாப்பாடு செல்லவில்லை. அவ்வப்போது நினைவு தப்பி விடுகிறது. எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து ஐந்து வேளைத் தொழுகையைப் பிடிவாதமாய்க் கடைப்பிடித்து வருகிற ஆன்மீகத் தீவிரவாதியான வாப்பா, தொழுகையை¢மறந்து ரெண்டு மாசமாச்சு. வெள்ளிக்கிழமைத் தொழுகைக்கு மசூதிக்குப் போய் மூணுமாசமாச்சு.

இதுபோன்ற வெளிப்படையான விசனங்களன்றி, விஸ்வ நாதனோடு பகிர்ந்துகொள்ள முடியாத ப்ரத்யேகப் பிரச்சனை யொன்றும் பாறாங்கல்லாய்த் தலைமேல் இறங்கத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.

வாப்பா சாமான்யர் அல்ல. பனிரெண்டாயிரம் பென்ஷன் வாங்குகிறவர்! என்னுடைய இன்றைய தரித்திரத்தில், இந்தப் பனிரெண்டாயிரம் பனிரெண்டு கோடி மாதிரி!

நான் திவாலாய்ப் போன ரெண்டு வருஷத்தில் வாப்பாவின் பென்ஷனில்தான் வண்டி ஓடுகிறது என்பது ஒரு பரிதாபமான உண்மை.

வாப்பாவின் உயிர் இன்னும் எத்தனை வாரம், அல்லது எத்தனை நாள் தங்கும் என்று சொல்லவியலாத இறுக்கமான சூழ்நிலை.

வாப்பாவின் உடல்நிலையும் மனநிலையும் மோசமாகுமென்று ஊகித்து, ஆறு மாசத்துக்கு முந்தியே ஒரு செக் புஸ்தகம் முழுக்க வாப்பாவிடம் கையெழுத்தை வாங்கி வைத்துக் கொண்டேன், அதிபுத்திசாலித்தனமாய்.

வாப்பா ப்ரக்ஞையின்றிப் படுத்துக் கிடந்தாலும் ஒண்ணாந் தேதி ஒண்ணாந் தேதி பாங்க்குக்குச் செக் போய்விடும், பனிரெண்டாயிரம் கைக்கு வந்து விடும். இன்றைக்கு தேதி இருபத்தாறு. மாசம் முடிய இன்னும் அஞ்சு நாட்கள்.

*முப்பத்தியொண்ணாந் தேதி வரைக்கும் வாப்பா தாக்குப் பிடித்து விட்டாரென்றால், ஒண்ணாந் தேதி செக்கைப் போட்டு முழுசாய்ப் பனிரெண்டாயிரத்தையும் எடுத்து விடலாம். அதற்கு முன்னால் வாப்பாவுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், அவருடைய வங்கிக் கணக்கு முடக்கப்பட்டு விடும். நம்ம செயல்பாடுகளும் முடங்கிவிடும். அல்லா, என்ன கேவலமான மனப்போக்கு இது! இந்த மாதிரி இழிவான சிந்தனையைத்தான் ஜெயகாந்தன் சொல்லுவார் நபும்சகத்தனம் என்று.*

*விஸ்நாதனின் பள்ளிக்கூட ஆசிரியர்கள் மறைவாய்ட் டீ குடித்துக் கொண்டிருந்தார்கள். உறவினர்கள் வந்து சேர ஆரம்பித்திருந்தார்கள். நண்பர்கள் யாரும் இன்னும் வரவில்லை. கார்கள் வருமுன்பு இடத்தைக் காலி பண்ணி விட வேண்டுமென்று நான் எழும்ப முனைந்த போது, திரும்பவும் விஸ்வநாதன் பேச்சில் பிடித்துக் கொண்டான். 'அப்பாவோட கடேசி ஆசைய நிறைவேத்தி வச்சுட்டேம்ப்பா' என்றான்.*

*"அவரோட பாடிய இந்த ஸ்கூல்ல கொண்டு வந்து வக்யணும்னு ஆசப்பட்டார். அதே மாதிரி கொண்டுவந்து வச்சாச்சு. எலக்ட்ரிக் க்ரிமேஷன் பண்ணனும்னு சொன்னார். அதுக்கும் எற்பாடு பண்ணியாச்சு."*

*"ம்."*

*"நீங்க முஸ்லிம்ஸ் எரிக்கமாட்டீங்க, பொதச்சிருவீங்க இல்ல?"*

*"ஆமா."*

*இவனுக்கு ஆறுதல் சொல்லக் கடமைப்பட்ட நான், இவனுடைய நீள வாக்கியங்களுக்கு ஓரெழுத்து ஈரெழுத்தில் பதில் சொல்லிக் கொண்டிருக்கிற முரண்பாடு என்னை உறுத்திக் கொண்டிருந்த போது, திரும்பவும் விஸ்வநாதன் தொடர்ந்தான்.*

*"காலம் எவ்ளோ வேகமாப் போகுது பாத்தியா! நாம சின்னப் பசங்களாயிருந்தப்ப நம்ம தாத்தா பாட்டி போய்ச் சேந்துட்டாங்க. நாம பெரியவங்களாகிக் கல்யாணமாகிக் கொழந்த குட்டி, குடும்பம்னு ஆனப்புறம் நம்ம அப்பா அம்மா ஒவ்வொருத்தராப் போக ஆரம்பிச்சுட்டாங்க. நம்ம புள்ளைங்களப் படிக்க வச்சிக் கல்யாணம் பண்ணிக்குடுத்து அவங்க ஸெட்டில் ஆயிருவாங்க. நீயும் நானும் பிறகு பேரன் பேத்திகளப் பாப்போம். அதுக்கப்புறம் நமக்கும் டைம் வந்துரும். நாட்கள் விர்ர்ர்னு ஓடிரும். நாம ரெடியாயிருக்கணும். நா ரெடி, நீ ரெடியா?"*

*அப்பட்டமாய் ஓர் உண்மையை எடுத்து வைத்த விஸ்வநாதனின் வார்த்தைகளில் கொஞ்சம் அதிர்ந்தேன். இன்னும் சில வருஷங்களில் இதேபோலவொரு கண்ணாடிப் பெட்டிக்குள் இந்த விஸ்வநாதன் இதே பள்ளிக்கூட அறையில் படுத்திருக்க, அவனைப் பார்க்க நான் வருவேன்.*

*அல்லது, சலனங்களிழந்து நான் படுத்திருக்க, என்னைப் பார்க்க விஸ்வநாதன் வருவானா!*

*‘என்ன, சத்தத்தையே காணல, பயந்துட்டியா?’ என்று இடித்தான்.*

*‘பயந்தா முடியுமா? ரெடியாயிர வேண்டியதுதான்’ என்றேன் நான்.*

*“அம்மாவ அனுப்பி வச்சாச்சு, வாப்பாவயும் அனுப்பி வச்சிட்டு ரெடியாயிர வேண்டியது தான்.”*

*வாப்பாவை அனுப்பி வைப்பது பற்றிய நினைப்பு வந்தபோது, விரைவில் நேரவிருந்த அந்த இழப்பின் பலமுனைத் தாக்குதல்கள் என்னைக் காயப்படுத்தவும் கலவரப்படுத்தவும் முனைந்தன.*

*சரி, இதற்குமேல் இந்த இடத்தில் தரித்திருக்க இயலாது என்று நான் உணரத்தலைப்பட்டபோது ரெண்டு கார்களில் விஸ்வநாதனுடையவும் என்னுடையவும் சிநேகிதர்கள் வந்து இறங்குவது தெரிந்தது. ‘கொஞ்சம் இரு, வர்றேன்’ என்று எழுந்து விஸ்வநாதன் கார்களை நோக்கி நடந்தான். நானும் எழுந்து கொண்டேன்.*

*சாவு வீட்டிலிருந்து கிளம்புகிற போது சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுவிட வேண்டுமென்று இஸ்லாத்தில் இல்லை யென்றாலும், அது தான் முறை என்று ஹிந்து நண்பர்கள் சொல்லி அறிந்திருக்கிறேன். இன்றைக்கு அந்த நடைமுறையைக் கடைப்பிடிக்கலாம். நண்பர்களின் கண்களில் பட்டுவிடுவதற்கு முன்னால் விச்சுவிடம் சொல்லிக் கொள்ளாமலேயே கழண்டு கொள்ள வேண்டும்.*

*போகிற போக்கில், உள் அறையில் இருந்த கண்ணாடிப் பேழையில் பார்வை பதிந்தது. உள்ளே சில பெண்கள் மட்டும், தங்களுக்குள் பேசிக் கொண்டு, சடலத்தின் மேல் கவனமில்லாமல் இருந்தார்கள்.*

*இன்னொருமுறை இறந்தவர் முகத்தைப் பார்த்துக் கொள்வோம் என்று உள்ளே எட்டெடுத்து வைத்த போது, இங்கே கிடத்தப்பட்டிருக்கிற இந்த உடலுக்கும், வீட்டிலே படுத்திருக்கிற வாப்பாவுக்கும் அப்படியொன்றும் பெரிய வித்யாசமில்லை என்று உணர்ந்தேன். இந்த உடலில் உயிர் சுத்தமாய் இல்லை. வாப்பாவின் உடலில் உயிர் கொஞ்சம் மிச்சமிருக்கிறது.*

*பாக்கெட் டைரியையும் பேனாவையும் வெளியே எடுத்தேன். யாரும் பார்க்கவில்லையென்று உறுதி செய்து கொண்டு, ஃப்ரீஸர் பாக்ஸின் மேலே எழுதியிருந்த அந்த அமரர் சேவை நிறுவனத்தின் ஃபோன் நம்பரைக் குறித்துக் கொண்டு அங்கிருந்து அகன்றேன்.*

*(ஆனந்த விகடன், 27.02.2008)*
*(இன்று அவர்கள்; நாளை நாம்)*

# மது

இந்திய ரயில்களுக்கு ஒரு விசேஷமான குணாதிசயம் உண்டு. யாரையவாது ரிஸீவ் பண்ணுவதற்கு நாம் அரைமணி நேரம் முன்னதாய் வந்து காத்துக்கிடக்கிற போது இந்த ரயில், சாவகாசமாய் அறுபது நிமிஷம் தாமதமாய் வந்து சேரும். நாம் ஒரு அஞ்சு நிமிஷம் தாமதமாய் வந்தால், ரெயில் பத்து நிமிஷம் முன்னதாக வந்து அசத்தும்.

இன்றைக்கு அப்படித்தான் ஆகிவிட்டது. அயனாவரத்திலிருந்து காலத்தைக் கணக்குப் பண்ணித்தான் அறையைவிட்டுக் கிளம்பினான் இவன். பூந்தமல்லி ஹைரோடைக் கடக்கிறபோது, ஸ்கூட்டரில் பெட்ரோல் காலி. அரைக் கிலோமீட்டர் உருட்டிக் கொண்டு வந்து எக்மோர் ஸ்டேஷனை அடைந்த போது நாலாவது ப்ளாட்ஃபாமில் வைகை எக்ஸ்ப்ரஸ் வந்து சேர்ந்து பழசாகிவிட்டிருந்தது.

பெரியப்பாவைக் காணவில்லை. இவனைக் காணவில்லையென்று கடுப்பாகிக் கிளம்பி விட்டாரா? கென்னத் லேனில் ஏதாவது ஒரு லாட்ஜில் தஞ்சமடைந்திருப்பார். அல்லது கென்னத் லேன் மலபார் மஜூதிக்குப் போயிருப்பார்.

அவ்வப்போது படியளக்கிற பெரியப்பா. அவரை அதிருப்திப் படுத்துவது கட்டுப்படியாகாது. இன்றைக்கு பெரியப்பாவை சந்தித்தே ஆக வேண்டும். ஸ்கூட்டரில் பெட்ரோல் டாங்க்கை நிரப்பவும், இவனுடைய வயிற்றை நிரப்பவும்.

மணி ஒண்ணே முக்கால். காலையில் டிஃபனும் சாப்பிடாததால் வயிற்றுக்குள்ளே விசேஷ அவஸ்தை.

கடவுளே, எப்படியாவது பெரியப்பாவின் கண்ணில் பட்டாக வேண்டுமே.

‘ஹாய் ஹசீன்!’ என்றொரு குரல் கேட்டது.

பெரியப்பா இல்லை. அவர் ஹாய் போட்டுக் கூப்பிடமாட்டார். தவிரவும், இது பெண் குரல்.

பின்னால் திரும்பிப் பார்த்தான்.

கண்கள் பிரகாசமடைந்தன.

மதுபாலா!

“மது, என்ன திடீர்னு!”

“திடீர்னு இல்லியே. பேப்பர்ல போட்ருந்துச்சே, பாக்கலியா?”

“தமிழ் பேப்பர்ல போட்டிருப்பான். நா இங்கிலீஷ் பேப்பர் தான் படிக்கிறது.”

“ஐயே, ஜோக் அடிக்கறியாக்கும்?”

“ஏன், நீ மட்டுந்தான் ஜோக் அடிப்பியாக்கும்?”

“நா சொன்னது ஜோக் இல்ல ஹசீன். சரி அதப்பத்தி அப்புறமா வெலாவாரியாப் பேசுவோம். நா இன்னிக்கி வைகைல வர்றேன்னு சித்தப்பாக்கு எஸ்ஸெம்மஸ் பண்ணினேன். அவர் பாக்கலன்னு நெனக்கிறேன்.”

மது சித்தப்பாவைச் சொன்னதும், இவனுக்கு ரெண்டு நிமிஷம் மறந்து போயிருந்த பெரியப்பா திரும்பவும் நினைவுக்கு வந்தார்.

கடவுளே, எப்படியாவது பெரியப்பாவின் கண்ணில் படாமல் தப்பிக்க வேண்டுமே!

பெரியப்பாக் கவலையிலிருந்த இவனை அதை விடப் பெரிய கவலையொன்றில் ஆழ்த்தினாள் மதுபாலா.

“ஹசீன், பசி. அகோரப் பசி. கன்னாபின்னான்னு பசி. எமர்ஜன்ஸி. ஒரு ஆம்புலன்ஸ் அரேய்ஞ்ஜ் பண்ணி ஒடனடியா ஒரு ரெஸ்ட்டாரன்ட்டுக்கு என்ன ஷிஃப்ட் பண்ணேன்.”

மதுபாலாவின் பசி ரசிக்கிற மாதிரியிருந்தாலும் இவனால் செயற்கையாய்த்தான் சிரிக்க முடிந்தது.

‘பெட்டியக்குடு மது, நா கொண்டு வர்றேன்’ என்று அவளிடமிருந்து பெட்டியைப் பெற்றுக் கொண்டு மெல்ல நடந்தான். மது புரிந்து கொண்டாள்.

‘ஏய், என்ன திடீர்னு அப்ஸெட் ஆய்ட்ட’ என்றாள்.

“கவலையேப் படாத ஹசீன், எங்கப்பாவோட கருப்புப் பணத்துல ஒரு அஞ்சாயிரம் ரூபா இந்த ஸூட்க்கேஸ்ல இருக்கு. நாம ரெண்டு பேரும் அத ஷேர் பண்ணிக்கலாம்.”

மது சொன்னது இவனுக்கு சந்தோஷத்தைத் தந்ததா அல்லது இவனுடைய காலிப் பர்ஸைக் குறித்து விசனத்தை அதிகப்படுத்தியதா என்று தெரியவில்லை.

‘ஐ’ம் ஸாரி மது என்றான், அவள் பக்கம் திரும்பாமலேயே.

“ஒன்ட்ட சொல்றதுக்கென்ன மது, இன்னிக்கி லஞ்ச்க்கு எங்கப் பெரியப்பவத்தான் நம்பியிருந்தேன். அவர ரிஸீவ் பண்றதுக்குத்தான் வந்தேன். ஸ்கூட்டர்ல பெட்ரோல் காலி. பெட்ரோலுக்குக் காசில்ல. உருட்டிட்டு வந்தேன். அதான் லேட். பெரியப்பா காணாமப் போய்ட்டார்.”

“பெரியப்பாவ மீட் பண்ணியிருந்தா, என்ன மிஸ் பண்ணி யிருப்ப. அவர மிஸ் பண்ணிட்டு என்ன மீட் பண்ணினது ஒனக்கு சந்தோஷம் இல்லியா ஹசீன்?”

“ஐயோ, இப்படி அப்படி சந்தோஷமா மது, ஒன்னப் பாப்பேன்னு நெனக்யவே இல்லியே மது.”

“அப்ப, சந்தோஷத்த மொகத்ல காட்டு, கொரல்ல காட்டு. ச்சீயர் அப் ஐ ஸே. பணத்த ஷேர் பண்ணிக்கலாம்னு நா சொல்றேன்ல்ல, சும்மா சொல்றேன்னு நெனக்கிறியா? ஐ மீன் இட் ஹசீன். வா, மொதல்ல சாப்புடுவோம். அப்புறம் ஒன்னோட ஸ்கூட்டருக்கு சாப்பாடு போடுவோம்.”

கல்லூரியில் ஃபேர்வல் டே அன்றைக்கு, ‘பசுமை நிறைந்த நினைவுகளே பாடித்திரிந்த பறவைகளே பறந்து செல்கின்றோம்’ என்று நெஞ்சங்கள் கனக்க, பிரிவுப்பாட்டு பாடிவிட்டுக் கலைந்து போன பின்னால் தன்னுடைய அபிமான சிநேகிதி மதுபாலாவை இத்தனை விரைவில் சந்திக்க வாய்க்கும் என்று இவன் கற்பனைகூடப் பண்ணியிருக்கவில்லை. பணப் பிரச்சனையைப் புறந்தள்ளிவிட்டு, இனிமையான இந்த கணங்களை முழுமையாய் வாழ்ந்து விடுவது என்று முடிவெடுத்தான்.

பெரியப்பா மறந்து போனார்.

பெட்ரோல் ஆவியாகிப் போனது.

பசி கூட கொஞ்ச நேரத்துக்குப் பம்மிக் கொண்டது.

ரெஸ்ட்டாரன்டில் ரெண்டு பேரும் எதிரெதிரே அமர்ந்தார்கள். கல்லூரி நாட்களில் கூட இவளை இத்தனை க்ளோஸ் அப்பில் பார்க்கவோ வேறே மாணவ மாணவிகளுடைய ஊடுருவில் இல்லாமல் தனிமையில் இருக்கவோ சந்தர்ப்பம் கிட்டிய தில்லை என்கிற நினைப்பு இவன் முகத்தில் ஒரு மலர்ச்சியைக் கொடுத்தது.

‘என்ன சிரிப்பு?’ என்றாள் மதுபாலா, முழங்கைகளை மேஜையில் ஊன்றி, முகத்தைக் கைகளில் ஏந்தியபடி.

“திடீர்னு சோகமாயிர்ற, திடீர்னு சிரிக்கிற?”

“நீ தான மது சொன்ன, சந்தோஷத்த மொகத்ல காட்டு, கொரல்ல காட்டுன்னு.”

“அதான் மொகத்துல காட்றியாக்கும்? சரி, இப்ப கொரல்ல காட்டு?”

“மது, ஒனக்கு மதுபாலாங்கற பேர விட ரம்பாங்கற பேர் பொருத்தமாயிருக்கும் தெரியுமா?”

“என் கட்டழக வச்சுச் சொல்றியா?”

“நீ ரம்பம் போடறத வச்சுச் சொல்றேன்.”

*மது சிரித்தாள். கண்களில் நீர் முட்டச் சிரித்தாள்.*

*“இப்படி நா ஒம் முன்னால ஒக்காந்து சிரிச்சிட்ருப்பேன்னு முந்தா நாள் வரக்யும் நெனக்யவேயில்ல ஹசீன். நா எவ்வளவு பெரிய கண்டத்துலயிருந்து தப்பிச்சி வந்திருக்கேன் தெரியுமா?”*

*“கண்டமா?”*

*“ஆமா. சொன்னேன்ல. பேப்பர்ல ந்யூஸ் வந்ததுன்னு. நீ பேப்பர்ல்லாம் பாக்கறதில்லயா? ஒடனே அறுக்காத, நா இங்லீஷ் பேப்பர்தான் படிப்பேன்னு.”*

*“எங்க மது, காசு குடுத்துப் பேப்பர் வாங்க மனசில்ல; ஓசிப் பேப்பருக்கும் வழியில்ல. எங்கதைய வுடு. ஒங்கதை என்ன, என்ன பேப்பர், என்ன ந்யூஸ்?”*

*“சொல்றேன் கேளு. நா எக்ஸாம் எழுதிட்டு எங்க சித்தப்பா ஃபேமிலியோட டில்லி, ஆக்ரா, ஜெய்ப்பூர் எல்லாம் சுத்திட்டு ரிஸல்ட் வந்தப்புறம் ஊருக்குப் போனேனா? ஊருக்குப் போனா, அங்க ஒரு பயங்கர ஷாக். எங்கப்பா எனக்கு ஒரு மாப்ள பாத்து வச்சிருக்கார். எல்லாம் எங்க அண்ணனோட தூண்டுதல். சட்டுபுட்டுன்னு என்னத் தள்ளி விட்டாத்தானே அவனுக்கு லைன் க்ளீயர் ஆகும்! மாப்ள எப்டீங்கற? அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுல மாடு புடிக்கிறவன் மாதிரி ஒரு அம்சமான ஆசாமி. மொதல்ல மொரண்டு புடிச்சேன். அப்புறம் எங்கம்மாவோட ஒப்பாரி ஒத்துக்காம, துணிஞ்சவளுக்குத் தூக்கு மேடை பஞ்சு மெத்தைன்னு சரின்னுட்டேன். அப்புறம் வந்தது அடுத்த ஷாக், வரதட்சணை ரூபத்துல. ஒரு கார், ஒரு பைக். ஒரு பெரிய ஃப்ரிட்ஜ், ஒரு குட்டி ஃப்ரிட்ஜ். ஒரு ஹோம் த்யேட்டர், ஒரு கலர் டிவி. ஒரு மூணு பெட்ரூம் வீடு, ஒரு ரெண்டு பெட்ரூம் ஃப்ளாட்& எல்லாமே கல்யாணமான கையோட ஒரு சின்னவீடும் செட்அப் பண்ற அளவுக்குத் தேவையான ஐட்டங்கள். பத்தாததுக்குக் கரன்ஸி வேற. அது கருப்புப் பணமோ, கள்ள நோட்டோ, காசு குடுத்து வெலக்கி வாங்கின ஒரு விலை மகனுக்குக் கழுத்த நீட்டணும்னு எனக்குத் தலையெழுத்தா என்ன? இதெல்லாம் இந்த ஆண் ஜென்மங்களுக்கு, எங்கப்பாவுக்கும் எங்க அண்ணனுக்கும் ஒறக்யவேயில்ல. என்னக் கரையேத்தி விட்டுட்டுக் கைகழுவுறதிலேயே குறியா இருக்காங்க. நா பாத்தேன். முகூர்த்தத்தண்ணிக்கிக் காலங்காத்தால போலீஸ் ஸ்டேஷனுக்கு சின்னதா ஒரு ஃபோன். புது மாப்ளய மாமியார் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போய்ட்டாங்க. போலீஸ் முன்னால அப்பாவும் அண்ணனும் கப்சிப்னு இருந்தாங்க. அப்புறம் குதிக்க ஆரம்பிச்சாங்க. நீ என்னடி பெரிய புரட்சித் தலைவின்னு நெனப்பா அது இதுன்னு கத்தினாங்க. கத்திக்கிட்டே கெடங்கன்னு எல்லோருக்கும் டூ விட்டுட்டு நா மெட்ராஸ்க்கு ரயிலேறிட்டேன்.”*

*“வெல்டன் மது. ஸுப்பர்ப். ஊருக்கு ரெண்டு பொண்ணுங்க ஒன்னப் போல புரட்சி செஞ்சா வரதட்சணை இந்த நாட்ட விட்டுப் புறமுதுகு காட்டி ஓடியே போயிரும்.”*

*சாப்பாடு வந்தது. ரெண்டு பேருக்கும் செமப் பசியானதால் அதிகம் பேசிக் கொள்ளாமல் சாப்பிட்டு முடித்தார்கள். அடுத்து என்ன செய்வது என்று பேச்சு வந்த போது ஒரு சின்ன தயக்கத்தோடு இவன் கேட்டான், தன்னுடைய*

அறைக்குப் போய் இருட்டுகிறவரை பேசிக் கொண்டிருக்கலாமா என்று. கொஞ்சங்கூட சங்கடமோ சங்கோஜமோ இல்லாமல் ‘ஓ’ என்றாள் மதுபாலா.

பொழுது சாய்ந்ததும் இவன் மதுவைக் கொண்டு போய் மைலாப்பூரில் அவளுடைய சித்தப்பா வீட்டில் விட்டு விடுவது என்று முடிவாயிற்று.

பெட்ரோல் நிரப்பிக் கொண்டு ஸ்கூட்டரில் போய்க் கொண்டிருந்தபோது, அவனுடைய முகத்தை எதிர்கொள்ள வேண்டிய சங்கடத்தைத் தவிர்க்கிற சௌகரியத்தில் மதுபாலா கேட்டாள், ‘ஹசீன், நா ஒரு விஷயம் கேட்டா சங்கடப்பட மாட்டியே?’

அவள் என்ன கேட்கப் போகிறாள் என்று கிட்டதட்ட ஊகித்துவிட்ட இவன், ‘நீ என்ன கேட்டாலும் நா சங்கடமே பட மாட்டேன் கேளு’ என்றான்.

“நா கேள்விப்பட்டது நெஜந்தானா ஹசீன்?”

“என்ன கேள்விப்பட்ட?”

“நம்ம க்லாஸ்லயே நீ ஒருத்தன்தானே ஃபெயிலாம்?”

“கும்பலோட கோவிந்தா போடாம என்னோட தனித்தன்மைய நிலை நாட்டிட்டேன் பாத்தியா!”

“ஸீரியஸ்னஸ்ஸே இல்லாமப் பேசறியே ஹசீன். நீ ஆம்பள. ஒன்னோட எதிர்காலத்த நீ ப்ளான் பண்ண வேண்டாமா? அத்து மீறி அட்வைஸ் பண்றேன்னு நெனக்யாதே. ஒம்மேல அக்கறயிருக்கறதனால தான் சொல்றேன்.”

“நெஜம்மாவா சொல்ற மது? எம்மேல ஒனக்கு அக்கறயிருக்கா?”

“இருக்காதா பின்ன? க்லாஸ்லயே நீ சாந்தமான பையன். யார் வம்புக்கும் போகமாட்ட. சிகரெட் குடிக்கமாட்ட. தண்ணி கிண்ணி அடிக்கமாட்ட. பொண்ணுங்களப் பாத்து ஜொள்ஸ் விடமாட்ட.”

‘பூலோகப் பெண்களைப் பார்த்து ஜொள்ஸ் விட்டதில்லையென்பது வாஸ்தவந்தான். ஆனால் ஒரேயொரு தேவதையிடத்தில் நான் மயக்கமாயிருந்ததையோ, அந்த மது மயக்கமே நான் ஃபெயிலாய்ப் போனதற்கு ஒரு காரணமாயிருக்கலாமென்பதையோ நீ அறிய மாட்டாயே மதுபாலா’ என்று இவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

இவனுடைய வாயிலிருந்து வார்த்தைகளேதும் வராமற்போகவே, மதுபாலாவே திரும்பவும் வாயைத் திறந்தாள்.

“மெட்ராஸ்ல நீ இப்ப என்னதான் பண்ணிட்டிருக்க ஹசீன்?”

“இந்த லௌகீக டிகிரிகளுக்கு மரியாதையில்லாத ஒரு ஒலகத்துல சவுக்யமா இருக்கேன்.”

“கொழப்பாத.”

“ரூமுக்கு வா, வெவரமா சொல்றேன்.”

ரூம் வந்தது.

பல குடித்தனங்கள் ஒண்டிக் கொண்டிருக்கிற நெருக்கடியான இடமாகையால் இந்த ஜோடியைப் பார்த்துப் பல ஜோடிக் கண்கள் அகலமாய்த் திறந்தன.

சில வாய்களும்.

“பையன் சினிமாவுல இருகானாம்ல, அதான் எவளோ ஒரு நடிகையத் தள்ளிட்டு வந்திருக்கான்.”

“குடித்தனங்க இருக்கற எடம். இதெல்லாம் நல்லவா இருக்கு?”

“ரெண்டு நாளக்கி முந்தி இந்த நடிகையோட படம் பேப்பர்ல வந்தது, நா பாத்தேன்.”

இந்த வசனங்கள் இவனுடைய காதில் விழுந்தபோது, இதையெல்லாம் யோசிக்காமல் மதுவைக் கூட்டிக் கொண்டு வந்து அவளை அசிங்கப்படுத்தி விட்டோமே என்று சங்கடமாயிருந்தது.

ஆனால் மதுபாலாவோ முதல் கூற்றின் முற்பகுதியைத் தவிர வேறு எதையுமே உள் வாங்கிக் கொள்டதாய்த் தெரியவில்லை.

இவனைத் தொடர்ந்து அறைக்குள் பிரவேசித்ததுமே, ‘என்ன ஹசீன், நீ சினிமால இருக்கியா, சொல்லவேயில்ல? நடிக்கிறியா? என்ன படம் பண்ற?’ என்று குதூகலித்தாள்.

துர்விமர்சனங்களை அவள் நிராகரித்து விட்டது இவனுக்குப் பெரிய ஆறுதலாயிருந்தது. அவளுடைய குதூகலத்தில் பங்கு கொண்டு சிரித்தான்.

“நடிக்கவெல்லாம் இல்ல மது. ஒரு மீடியம் சைஸ் டைரக்டரப் போய்ப் பாத்தேன். அவர் அஸிஸ்ட்டன்ட் டைரக்டரா சேத்துக்கிட்டார். அப்சர்வ் பண்றேன், வேலைய அக்கறயாக் கத்துக்கறேன். எனக்குப் புடிச்சிருக்கு.”

“வெரிகுட் ஹசீன். சீக்கிரத்ல நீ பெரிய டைரக்டரா வந்துருவ!”

“மூணு வருஷத்துல. மூணே வருஷத்துல மது. எனக்கு நம்பிக்கையிருக்கு மது. மவுன்ட் ரோட்ல ஸெவன்ட்டி எம்எம் ஹோர்டிங் மது. அட்டகாசமா, அசத்தலா. அதுல டைரக்ஷன்னு எம்ப்பேர் போட்டிருக்கும் மது.”

“ஒண்டர்ஃபுல் ஹசீன். நீ நம்பிக்கையோட பேசறதக் கேக்க எவ்வளவு சந்தோஷமாயிருக்கு தெரியுமா!”

“தாங்க் யூ மது, நீ வேணா பார், நடக்கத்தான் போகுது இது, என் படத்துக்குக் கதை இப்பவே ரெடி, மது!”

“அதுக்குள்ளேயா, கிரேட், ஒங்க முஸ்லிம் கதையா?”

“நோ. ஒன்னோட கதை, மது. ஒன்னோட புரட்சிக் கதை, மது. ஒன்னோட கதை தான் என்னோட முதல் படம், மது.”

“வாவ்! மூலக்கதைன்னு எம்பேர் ஹோர்டிங்கல இருக்கும்ல? இல்லாட்டி ஒம் மேல கேஸ் போட்ருவேன்.”

உற்சாகம் அங்கே கரையை உடைத்துக் கொண்டு பெருக்கெடுத்தது.

பெரிசாய்ச் சிரித்தபடி இவன் ‘போட்ரலாம் போட்ரலாம்’ என்றதற்கு, ‘என்ன போட்ரலாம்? கேஸ் போட்ரலாம்ங்கறியா’ என்றாள் மது இவனுக்குச் சளைக்காமல் சிரித்தபடி.

சிரிப்புகள் தணிந்ததும் கண்களில் கனவும் கண்ணீரும் மின்ன இவன் பேசினான்.

“யெஸ், மது. அந்த ஹோர்டிங்ல ஒம்பேரும் இருக்கும் எம்பேரும் இருக்கும். மவுன்ட் ரோட்ல ஹோர்டிங், மெட்ராஸ் பூரா ஹோர்டிங், தமிழ்நாடு பூரா ஹோர்டிங் மது! ஒம்பேர் மேல மது. ஒம் பேருக்கு கீழே எம்பேர் மது. ஒ, கற்பனையே எவ்வளவு பரவசமா இருக்கு மது!”

அவனுடைய பரவச நிலையைப் பார்த்து மதுபாலா புளகாங்கிதமடைந்திருக்க, இவன் திடீரென்று பூமிக்கு இறங்கி வந்தான்.

வந்து, மதுவை ஆழமாயும் ஆர்வமாயும் பார்த்தான்.

“மது?”

“சொல்லு ஹசீன்.”

“மது?”

“ம். சொல்லு.”

“ஒரு மூணு வருஷம், மது.”

“ஒரு மூணு வருஷம்?”

“எனக்கு வெற்றி கெடக்கிற வரக்யும், மது.”

“ஒனக்கு வெற்றி கெடக்கிற வரக்யும்?”

*“நா பெரிய டைரக்டராகிற வரக்யும், மது.”*

*“நீ பெரிய டைரக்டராகிற வரக்யும்?”*

*“நா ஒரு மனுஷனாகிற வரக்யும், மது.”*

*“நீ மனுஷனாகிற வரக்யும்?”*

*“எனக்காக, மது.”*

*“ஒனக்காக?”*

*“நீ, மது.”*

*“நான்?”*

*“கல்யாணம் பண்ணிக்காம இருப்பியா மது?”*

*(வடக்கு வாசல், ஏப்ரல் 2008)*

# மழலை எல்லாமே அழகு

*வில்லிவாக்கத்திலிருக்கிற விசேஷமான அந்தப் பள்ளிக் கூடத்தைப் பற்றி இவளுடைய மாதர் சங்கத்தில் ஒரு மாது சொல்லக் கேட்டு, அங்கே போயே ஆக வேண்டுமென்று என்னை இழுத்துக் கொண்டு போனாள்.*

*பள்ளியில் குழந்தைகளெல்லாம் ரெண்டு வயசிலிருந்து நாலு வயசுக்குள்ளேதான். அத்தனையும் விசேஷமான குழந்தைகள். காது கேளாத, வாய் பேச இயலாத பரிதாபத்துக்குரிய அரும்புகள். அம்மா என்கிற ஆரம்ப வார்த்தையைக் கூட உச்சரிக்க வலுவில்லாத உதடுகள். அன்னையின் ஆசை முத்தத்தின் சத்தத்தைக் கூட உள்வாங்கிக் கொள்கிற சக்தியில்லாத செவிப்பறைகள்.*

*காலையிலிருந்து மதியம் வரை ஒவ்வொரு குழந்தையோடும் அதனுடைய அன்புத்தாய் அமர்ந்திருக்கிறாள், குழந்தைக்கு ஆசிரியை தருகிற பேச்சுப் பயிற்சியை ஆழமாய் உள்வாங்கிக் கொண்டு. குழந்தைகளுக்கு ஹோம் ஒர்க் இல்லை. அம்மாக்களுக்குத்தான்!*

*கண்களில் ஈரத்தோடும் நெஞ்சங்களில் உரத்தோடும் தங்களுடைய அன்புச் செல்வங்களின் எதிர்காலத்துக்காக தங்களுடைய உணர்ச்சிகளையும் உடைமைகளனைத்தையும் அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற அம்மாக்கள்.*

*"எனக்கு பயம்மா இருக்குங்க" என்று கிசுகிசுத்தாள் இவள்.*

*"ஒனக்கெதுக்கு பயம்?"*

*"ஒலகத்துல கொழந்தைங்க இப்படியெல்லாம் பொறக்குதேங்க! நமக்குப் பொறக்கப் போறதும் இந்த மாதிரி ஒரு கொழந்தையாப் பொறந்து, நானும் இந்த மாதிரி ஒரு ஸ்கூல்ல வந்து கொழந்தையோடயும் வேதனையோடயும் ஒக்காந்திருக்கிற மாதிரி நெலமை வராதுன்னு என்னங்க நிச்சயம், நெனச்சுப் பாக்கவே பயங்கரமா இருக்கு."*

*"சீ, அப்படியெல்லாம் ஒண்ணும் நடந்துராது. இதெல்லாம் லட்சத்துல ஒரு கேஸ். விபரீதமாவெல்லாம் நீ கற்பன பண்ணாதே. ராத்திரி தூங்கறதுக்கு முன்னால நாம ரெண்டு பேரும் ஸின்ஸியரா ஆண்டவன வேண்டிப்போம். கடவுள் கைவிட மாட்டார்."*

*"கடவுள வேண்டிக்கிறது சரிதான், அது நம்மளோட சுயநலத்துக்காக. இந்த பாவப்பட்ட கொழந்தைங்களுக்கு நாம ஏதாவது செஞ்சாக வேணுமேங்க. மாசா மாசம் அஞ்சாயிரமோ, பத்தாயிரமோ இந்த ஸ்கூலுக்குக் குடுப்போம். அதுக்கு முன்னால, ஒரு அம்பதாயிரம் ரூபா நாளக்கி வந்து குடுத்துட்டுப் போவோம், என்ன? இந்தக் கரஸ்பாண்டன்ட்ட சொல்லுங்க."*

*கரஸ்பாண்டன்ட்டிடம் சொன்னபோது ரொம்ப நெகிழ்ந்து போனார். இந்தப் பள்ளியில் மழலைக் கல்வியில் பயிற்சி பெறுகிற குறையுள்ள குழந்தைகள், அபாரமாய்த் தேர்ச்சி பெற்று, நாலு வயசுக்கு மேல் மற்ற நார்மல் குழந்தைகளோடு சேர்ந்து படிக்க ரெகுலர் ஸ்கூல்களுக்குப் போய் விடுவதைப் பூரிப்போடு சொன்னார்.*

*இந்தப் பள்ளியில் பயிற்சியைப் பூர்த்தி செய்த அஞ்சு வயசுப் பெண் குழந்தையொன்று அண்ணா நகரில் ஒரு பிரபலமான பள்ளிக்கூடத்தில் யூகேஜி யிலிருப்பதைச் சொன்னார்.*

*“நாளக்கி அந்த ஸ்கூல் டே. எல்லாக் கொழந்தைங்க கூட சேந்து நம்ம கொழந்தையும் டான்ஸ் ஆடுது. நார்மல் கொழந்தைங்க எது, நம்ம கொழந்தை எதுன்னு நீங்க கண்டு பிடிக்கவே முடியாது. நீங்க ரெண்டு பேரும் அவசியம் வந்து பாருங்க.”*

*அடுத்த நாள் அந்த ஆண்டு விழாவுக்குப் போனோம், நானும் இவளும். மேடையில், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவராயிருந்த கரஸ்பாண்டன்ட், எங்களை அவதானித்துப் புன்னகைத்துக் கையசைத்தார்.*

*ரெண்டு மூணு ஆரம்ப நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, யூ கே ஜி குழந்தைகளின் கோரஸ் நடனம் வந்தபோது, ‘இப்போது கவனியுங்கள்’ என்று எஸ்.எம்.எஸ். கொடுத்தார். நடனத்தில் நாங்கள் லயித்திருந்த போது, ‘நம்ம குழந்தை எது என்று பிரித்தறிய முடிகிறதா?’ என்று இன்னொரு எஸ் எம் எஸ்.*

*ம்ஹூம். என்னாலும் முடியவில்லை. இவளாலும் முடியவில்லை. அடுத்த எஸ் எம் எஸ் இப்படி வந்தது :*

*“அடுத்து, நம்ம குழந்தையுடைய ஸோலோ டான்ஸ் வருகிறது, பாருங்கள்.”*

*பார்த்தோம், ரசித்தோம், பிரமித்தோம்.*

*முந்தைய கோரஸ் நடனத்தில் எல்லாக் குழந்தைகளுக்கும் இணையாய் ஆடி அசத்திய அழகுக் குழந்தை இதுதானா என்று ஆச்சர்யமாயிருந்தது. ஸோலோ டான்ஸ் முடிந்ததும் நானும் இவளும் கண்கள் பனிக்கக் கரகோஷித்தோம். அரங்கத்தில் கரவொலி அடங்க நேடுநேரமாயிற்று. அடங்கியதும், பக்கத்து ஆசனத்தில் ஒரு பெண் குரல் அபஸ்வரமாய் ஒலித்தது.*

*“என்னங்க இப்படி சொதப்பிருச்சு இது? ஐயே, நல்லாவே ஆடல.”*

*திடுக்கென்றது எனக்கு. வெடுக்கென்று முகத்தைத் திருப்பி நம்ம ஆள் அந்தப் பெண்ணின் மேல் ஒரு ஆக்ரோஷப் பார்வையை ப்ரயோகித்தாள். அதைப் பற்றிக் கொஞ்சமும் அக்கறை கொள்ளாமல் அந்தப் பெண் தன் பக்கத்திலிருந்த புருஷனிடம் குறைப்பட்டுக் கொண்டிருந்தாள்.*

*“ஸ்டெப்ஸ்ல எப்படி ஓட்ட விட்டுருச்சு பாருங்க. ரொம்ப மோசம்.” அவள் சொன்னதை ஆமோதித்து அந்த ஆளும் தலையாட்டிக் கொண்டிருந்தான்.*

*என்னவளுக்குப் பற்றிக் கொண்டு வந்ததை எங்களுடைய நெருக்கம் உணர்த்தியது. "ஷ், இப்ப ஒண்ணும் வாயத் தொறந்து நீ ரசாபாசம் பண்ணாத. ப்ரோகிராம் முடியட்டும்" என்று அவளுடைய கையைப் பற்றி அழுத்தினேன்.*

*நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றதுதான் தாமதம், என்னுடைய கையைப் பற்றி இழுத்துக் கொண்டு ஹாலுக்கு வெளியே வந்து, வாசலையொட்டி நின்று கொண்டாள். அந்த வில்லங்க ஜோடி வெளியே வரவும், 'எக்ஸ்க்யூஸ் மி' என்று அவர்களைப் பிடித்துக் கொண்டாள்.*

*"அந்தக் கொழந்தையோட டான்ஸப்பத்தி மட்ட ரகமா கமென்ட் அடிச்சீங்களே, அந்தக் கொழந்தை எப்படிப்பட்டதுன்னு ஒங்களுக்குத் தெரியுமா மேடம்?"*

*அரண்டு போன அந்தப் பெண், 'ம்?' என்று விழித்தாள்.*

*"எவ்வளவு அற்புதமா ஆடுச்சு அந்தக் கொழந்த. அதப்போய் சொதப்பல்னு வாய் கூசாம சொல்றீங்களேம்மா, ஒங்களுக்கு மனசாட்சியே கெடையாதா?"*

*அந்தப் பெண் வாயடைத்து நிற்க, அந்தக் கணவன் அவளுடைய உதவிக்கு வந்தான்.*

*"அதில்லிங்க மேடம், நேத்து இதே ஹால்ல ஒத்திகை நடந்துச்சு. நாங்க ரெண்டு பேரும் பாத்தோம். ஒத்திகைல செஞ்சதுல பாதிகூட இன்னிக்கி செய்யல. அதான்…"*

*"இருக்கட்டும் சார், அது ஒரு முழுக் கொழந்தையில்ல, பாதிக் கொழந்தன்னு ஒங்களுக்கு தெரியுமா? ஸ்டேஜ்ல கேக்கற ம்யூஸிக் அதோட காதுல அரகொறயாத்தான் விழும்னு ஒங்களுக்குத் தெரியுமா? ஒங்க லிப் மூவ்மென்ட்ஸ வச்சித்தான் நீங்க பேசறத அது கிரகிக்க முடியும்னு ஒங்களுக்குத் தெரியுமா?"*

*இவளுடைய கண்களில் கனல், குரலில் அனல்.*

*"அது எல்லாமே அவங்களுக்குத் தெரியும் மேடம், ப்ளீஸ் காம் டௌன்" என்றொரு அந்நியக் குரல் அருகாமையில் ஒலித்தது. கரஸ்பாண்டன்ட்.*

*ஏவுகணையை நம் ஆள் அவர் பக்கம் திருப்பினாள். "இல்ல சார், இவங்களுக்குத் தெரியாது. தெரிஞ்சா, அந்த அபூர்வமான கொழந்தையை இப்படி அசிங்கமா விமர்சனம் பண்ணியிருக்க மாட்டாங்க. அந்தக் கொழந்தையப் பெத்தவங்க இங்க இருந்திருந்தா எவ்ளோ வேதனப்படுவாங்க! அந்தக் கொழந்தையப் பெத்த புண்ணியாத்மாக்கள் இங்க இருக்காங்களா பாருங்க சார், அவங்ககிட்ட இந்த ரெண்டு பேரும் மன்னிப்புக் கேட்டாத்தான் இவங்களுக்கு ப்ராயச்சித்தம் கெடைக்கும்."*

*"அந்தப் புண்ணியாத்மாக்கள் இங்கதான் இருக்காங்க மேடம்" என்றார் கரஸ்பாண்டன்ட்.*

*“ஆனா, யார், யார்ட்ட மன்னிப்புக் கேக்கறதுங்கறதுதான் இப்ப கேள்வி.”*

*நானும் இவளும் கரஸ்பாண்டன்ட்டைப் புதிராய்ப் பார்க்க, அவர் அந்த இருவரின் பக்கத்தில் கைகாட்டினார்.*

*“இவங்க ரெண்டு பேரும்தான் மேடம் நம்ம கொழந்தையப் பெத்த உத்தம ஆத்மாக்கள், யார்ட்ட இவங்கள மன்னிப்புக் கேக்கச் சொல்லப் போறீங்க?”*

*ஒரு விநாடி ஸ்தம்பித்துப் போன நம்ம ஆள், அடுத்த விநாடி கண்களில் கண்ணீர் பொங்க, ‘ஐ’ம் ஸாரி, ஐ ‘ம் ஸாரி, ஐ ‘ம் ஸாரி’ என்று நாத் தழுதழுக்க அந்தப் பெண்ணை இறுகக் கட்டிக் கொண்டாள்.*

*கண்கள் பனிக்க, அருகே நின்றிருந்த அந்தத் தகப்பனின் கரங்களை என் பங்குக்கு நான் ஆறுதலாய்ப் பற்றிக் கொண்டேன்.*

*(நன்றி : பாக்யா, ஃபிப்ரவரி 29 — மார்ச் 06, 2008)*

# மறைமுகமாய் ஒரு நேர்முகம்

*ப்ரபு :*

*அந்த ஜோஸ்யர் சொல்லுவது அப்படியே பலிக்கும். முன்னே ரெண்டுமுறை எனக்குப் பலித்திருக்கிறது.*

*இன்ட்டர்வ்யூவுக்கு முதல்நாள் ஜோஸ்யரைப் பார்க்கப் போனது ரொம்ப சரி. ஆனால் இந்தப் பயல் ராஜாவையும் கூட்டிக் கொண்டு போனதுதான் ரொம்பத் தப்பு.*

*ஒங்க ரெண்டு பேர்ல ஒருத்தருக்குக் கட்டாயம் இந்த வேல கெடக்யும் என்று சர்வ நிச்சயமாய்ச் சொன்னார். நான் தனியாய்ப் போயிருந்தால் எனக்கே எனக்கு இந்த வேலை கிடைக்குமென்று சொல்லியிருப்பார். மனசுக்கு ரொம்பத் தெம்பா யிருந்திருக்கும். பரவாயில்லை. ராஜாவோடு ஒரு ஃப்ரண்ட்லி ஃபைட் போட்டுப் பார்த்து விடலாமென்று இவனையும் கூட்டிக் கொண்டு இன்ட்டர்வ்யூக்குக் கிளம்பினேன்.*

*அபசகுனமாய் நாய் குறுக்கே வந்தது. அபசகுனம் அவனுக்குத்தான், எனக்கில்லை.*

*ப்ரபு, நேத்து ராத்திரி வாங்கின பரோட்டா மிச்சமிருக்கே இந்த நாய்க்குப் போட்டுட்டு வந்துர்றேன் கொஞ்சம் வெய்ட் பண்றியாடா என்றான்.*

*தெரு நாய்க்குப் பரோட்டா போடுவதா முக்கியம்? பங்ச்சுவாலிட்டி முக்கியமில்லையா?*

*பதினொண்ணுக்கு இன்ட்டர்வ்யூ என்றால் பத்து அம்பதுக்கு ஸ்பாட்டில் இருக்க வேண்டாமா?*

*உன் செல்ல நாய்க்கு நாஷ்டா குடுத்துட்டு நீ ஒன்னோட பைக்க எடுத்க்கிட்டு சாவகாசமா வந்து சேரு, நா கௌம்பறேன் என்று அவனைக் கழட்டி விட்டுவிட்டு பைக்கில் பறந்து விட்டேன்.*

*எஸ்பிஸிஏவில் ஊழியம் செய்யப் போக வேண்டியவ னெல்லாம் எதற்கு எம்.ஸி.ஏ. படித்தான்?*

*இவன் ரூமைத் திறந்து பரோட்டாவை எடுத்து நாய்க்கு ஊட்டி விட்டுவிட்டு பிறகு இவனுடைய ஓட்டை பைக்கை ஸ்டார்ட் பண்ணி, வழியில் பெட்ரோல் போட்டுக் கொண்டு அண்ணாநகரிலிருந்து அடையார் வந்து சேர்வதற்குள் இன்ட்டர்வ்யூ முடிந்துவிடும். அப்புறம், நானே ராஜா, நானே மந்திரி. ஜோஸ்யர் சொன்னது பலிக்கப் போகிறது!*

*ராஜா :*

*மீந்து போன பரோட்டாக்களைக் காலி செய்துவிட்டு அந்த நாய், வாலை ஆட்டிக் கொண்டு ஓடினதைப் பார்க்க ரொம்ப சந்தோஷமாயிருந்தது. நாளைக்கு ஒரு டாக் பெல்ட் வாங்கி இதன் கழுத்தில் கட்டிவிட்டு இதற்கொரு அங்கீகாரம் வழங்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டே பைக்கை ஸ்டார்ட் செய்தேன்.*

*ட்ராஃபிக் நெரிசலின் இண்டு இடுக்குகளுக்குள்ளே புகுந்து புறப்பட்டு அடையாரை நோக்கிப் பறந்து கொண்டிருந்தபோது நெல்சன் மாணிக்கம் சாலையின் நெருக்கடியில் அந்தப் பரிதாபக் காட்சி கண்ணில் பட்டது.*

*மக்கர் பண்ணி ஆஃப் ஆகிப்போன கார் ஒன்றை டிப்டாப்பாய் உடையணிந்த நடுத்தர வயது நபர் ஒருவர் தன்னந்தனியாய்த் தள்ளப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தார், ஸ்டீரியங்கை ஒரு கையாலும், முன் கதவை ஒரு கையாலும் பற்றியபடி.*

*ஓர் அனிச்சைச் செயலாய், பைக்கை ப்ளாட்ஃபாம் மேலே ஏற்றி நிறுத்திவிட்டு அந்தக் காரை நோக்கி ஓடினேன். மே ஐ ஹெல்ப் யூ சார் என்று கேட்டு, அவருடைய ஒப்புதலுக்குக் காத்திராமல் பின்னாலிருந்து காரைத் தள்ளினேன்.*

*ஒரு கால் கிலோ மீட்டர் தள்ளி விட்ட பின்னால்தான் காருக்கு ஒதுக்குப்புறமாய் ஓர் ஓரம் கிட்டியது.*

*ரொம்பத் தாங்ஸ் என்று என்னை நோக்கித் திரும்பினார். இன்னிக்கிப் பாத்து டிரைவர் வரல. நீங்க் ஹெல்ப் பண்ணாட்டித் திக்குமுக்காடிப் போயிருப்பேன் என்றார். தளர்த்தி விட்டிருந்த ட்டையின் பிண்ணனியில் அவருடைய சட்டை தொப்பலாய் நனைந்திருந்தது. அவருடைய சட்டை மட்டுமல்ல என்னுடையதும்தான். வியர்வை வாசம். இக்கோலத்தில் இன்ட்டர்வ்யூவுக்கு எங்கே போவது!*

*இத்தன வெஹிக்கிள்ஸ் பாஸ் பண்ணிப் போகுது, யாருக்கும் எனக்கு ஒரு கை குடுக்கணும்னு தோணல, ஒங்களுக்குத் தோணியிருக்கு பாருங்க தம்பி, நீங்க ஒரு வித்யாசமான, விசேஷமான ஆள். ரொம்ப நன்றி தம்பி, என்று நெகிழ்ந்து போனார். மெக்கானிக்குக்கு ஃபோன் பண்ணியிருக்கேன் தம்பி, நீங்க கெளம்புங்க என்றார்.*

*தொடர்ந்து கேட்டார், நான் எங்கே வேலை செய்கிறேன் என்று. சொன்னேன், எட்டாவது தடவையாய் இன்ட்டர்வ்யூவுக்குப் போகவிருந்ததை. கம்பெனியின் பேரைக் கேட்டார். சொன்னேன். இந்த வேலை எனக்குக் கட்டாயம் கிடைக்குமென்று ஆருடம் சொன்னார். இந்நேரம் இன்ட்டர்வ்யூ அடையார்ல நடந்துட்டிருக்கும் சார். நா இங்க நிக்கிறேனே! என்று சிரித்தேன்.*

*இன்ட்டர்வ்யூக்குப் போகவே இல்லை. அப்புறம் எங்கிந்து வேலை கிடைக்க! இதெல்லாம் நம்ம கையில இல்ல தம்பி, மேலேயிருந்து ஒருத்தன்தான் எல்லாருக்கும் வேல போட்டுத் தர்றான். நா சொல்றேன் பாருங்க, இந்த வேல ஒங்களுக்குத்தான் என்று ஆணித்தரமாய்ச் சொன்னார்.*

*உதவி செய்தவனுக்கு நல்லதாய் நாலு வார்த்தைச் சொல்ல வேண்டுமென்று சொல்லுகிறார். எனிவே, அவருடைய நல்ல மனசுக்கு நன்றி சொல்லிவிட்டு, ஒரு நல்ல காரியம் பண்ணியிருக்கிற பெருமிதத்தோடு ரூமைப் பார்க்க வண்டியைத் திருப்பினேன். இந்நேரம் ப்ரபு இன்ட்டர்வ்யூவில் விளாசிக் கொண்டிருப்பான். இந்த வேலை அவனுக்கு நிச்சயம் கிடைக்கும்.*

*அவனுக்கு கிடைத்தாலென்ன எனக்குக் கிடைத்தாலென்ன.*

## *ப்ரபு :*

*ரூமுக்குத் திரும்பியபோது ராஜா ரூமுக்குள்ளேயே இருப்பது தெரிந்தது. இந்தப் பயல் அடையாறுக்குக் கிளம்பவே இல்லை போல. அந்த ஓட்டை பைக் ஸ்டார்ட் ஆகியே இருக்காது!*

*என்னைப் பார்த்ததும் கங்ராட்ஸ் ப்ரபு என்று கை கொடுத்தான். எதுக்கு என்று கேட்டதற்கு, உன் ஜோஸ்யர் சொன்ன மாதிரி உனக்கே உனக்கு இந்த வேலை கிடைத்திருக்கும். அதுக்குத்தான் என்றான். அவனிடம் சொன்னேன். இன்ட்டர்வ்யூவுக்குத் தலைமை தாங்க வேண்டிய எம்.டி. கார் வழியில் ஸ்ட்ரக் ஆகிவிட்டது என்று ஆஃபீஸ்க்கு வந்து சேரவேயில்லை, இன்ட்டர்வ்யூ கான்ஸல் ஆகிவிட்டது என்று.*

*சரி, அதற்கு இந்தப் பயல் ஏன் இப்படி வாயைப் பிளக்கிறான்!*

*(ஆனந்தவிகடன், 29.08.2007)*

# மனிதர்கள் வசிக்கிற ஊர்

*மருந்துக்குக் கூட ஒரு மெடிக்கல் ஷாப் இல்லை இந்த ஊரிலே.*

*பக்கத்து ஊரில் ஒரு கடை இருக்கிறதென்று சொன்னார்கள்.*

*செம்மண் சாலையில் ஒண்ணரைக் கிலோமீட்டர் சைக்கிளை மிதித்துக் கொண்டு மெய்ன் ரோடு வந்தேன்.*

*கல்லூரிக் காலத்தில் சைக்கிளில் ஜாலிரைடு போனதுண்டு. முன்புறமும் பின்புறமும் தோழர் களை உட்கார்த்தி வைத்துக்கொண்டு.*

*சில சமயம் தோழிகளையும்.*

*டச் விட்டுப்போய்க் கனகாலமாச்சு.*

*அதுவும், நாஷனல் பர்மிட் லாரிகளும், பைப்பாஸ் ரைடர்களும் விஷ் விஷ்ஷென்று விரைகிற இந்த ட்ரங்க் சாலையில் பாதுகாப்பாய் சைக்கிளோட்டுவது ஒரு சர்க்கஸ் மாதிரி.*

*ரெண்டு கிலோமீட்டர் கடந்த பின்னால் அடுத்த ஊர் வந்தது.*

*நல்லவேளை, சாலையோரமாகவே இருந்தது மருந்துக்கடை. ஆனாலும் பிரயோஜனமில்லை. நாகரிகமான பல மாத்திரைகள் அங்கே இல்லை.*

*மாத்திரைகளின் லிஸ்ட்டையும் இருநூறு ரூபாய் அட்வான்ஸையும் கொடுத்துவிட்டுப் போனால் மெட்ராஸிலிருந்து மருந்துகளை வரவழைத்து ஒருவார காலத்தில் டெலிவரி தருவதாய்ச் சொன்னார்கள்.*

*வாலட்டைப் பிரித்துப் பணத்தை எடுத்தபோது, பக்கவாட்டில் ஒரு பரிச்சயமான குரல்.*

*“இந்தாப்பா, சார்ட்ட அட்வான்ஸெல்லாம் வாங்க வேண்டாம்ப்பா.”*

*தொண்ணூறு டிகிரி கழுத்தைத் திருப்பி பார்த்தால், வெங்கட்.*

*ரெண்டுமாசம் முன்பு வரை என்னுடைய கடைக்கு ப்ளாஸ்டிக் பொருட்கள் விநியோகம் செய்து கொண்டிருந்த வெங்கட்.*

*‘நீங்க எங்க வெங்கட் இங்க?’ என்று சிரித்தேன்.*

*‘எங்க அக்கா இந்த ஊர்லதான் இருக்காங்க சார்’ என்றார் வெங்கட்.*

*“எங்க அத்தான் கட தான் இது. ஸிட்டிலயிருந்து முப்பது கிலோமீட்டர் தான? வாரம் ஒரு தடவ சும்மா வந்துட்டுப் போவேன்.*

*ஆமா, நீங்க என்ன சார் இங்க? வியாபாரத்த க்லோஸ் பண்ணப்பறம் அப்பா அம்மாவோட ஒரு கிராமத்ல போய் செட்டில் ஆயிரப் போறதா சொன்னீங்களே, இந்த ஊர்ல செட்டில் ஆயிட்டீங்களா சார்?”*

*“இல்ல வெங்கட், பக்கத்ல, குத்தம்பாக்கம்.”*

*ஊரின் பேரைச் சொன்னதும் வெங்கட்டின் விழிகள் பிரகாசமடைந்தன.*

*“அருமையான ஊராச்சே சார். அற்புதமான எடத்த நீங்க தேந்தெடுத்திருக்கீங்க சார். அது ஒரு ரோல் மாடல் வில்லேஜ் சார்.”*

*“இருக்கலாம் வெங்கட். ஆனா அங்க ஒரு மெடிக்கல் ஷாப் இல்லியே.”*

*“தேவையில்ல சார். அந்த ஊருக்கு மெடிக்கல் ஷாப்பே தேவையில்ல. அந்த ஊர்ல எல்லாமே அழகான மனுஷங்க.*

*ஆரோக்யமான மனுஷங்க. வியாதி அங்க யாரையும் அண்டவே அண்டாது. இளங்கோன்னு ஒரு பஞ்சாயத்துத் தலைவர சந்திச்சிருப்பிங்களே?”*

*“இல்ல வெங்கட். நாங்க வந்து ரெண்டு நாள்தான் ஆச்சு.”*

*“இருக்கட்டுமே சார். ரெண்டு நாளா எப்படி அவர் ஒங்கள மிஸ் பண்ணினார்? சரி இப்ப நீங்க கௌம்புங்க, ஒங்க வீட்ல ஒங்களுக்காக இளங்கோ காத்துட்டிருப்பார் பாருங்க!”*

*“என்னமோ நேர்ல பாக்கற மாதிரி சொல்றீங்க வெங்கட்!”*

*“ஞான திருஷ்டில பாக்கறேன் சார். நீங்க வேணா பாருங்களேன், ஒங்களுக்காகவே அவர் காத்துட்டிருப்பார். சரி நீங்க பொறப் படுங்க சார். நாளக்கழிச்சி ஒங்க மருந்து ரெடியாயிருக்கும். இல்ல ஒங்க வீட்லயே டெலிவரி பண்ணிரச் சொல்லட்டுமா?”*

*“இல்ல வெங்கட், நானே வந்து வாங்கிக்கறேன்.”*

*வெங்கட்டுக்கும், கடைக்காரருக்கும் நன்றி சொல்லி விட்டு நான் சைக்கிளை சமீபித்தபோது, கடைக்காரரிடம் வெங்கட் தணிந்த குரலில் சொன்னது என் காதில் விழுந்தது.*

*“.... நல்ல மனுஷன் அத்தான். பாவம், வாழ்ந்து கெட்ட மனுஷன். மெட்ராஸ்ல அண்ணாநகர்ல பெரிய டிபார்ட்மென்ட் ஸ்டோர் வச்சிருந்தார். கடையப் பெரிசாக்கறேன்னு கொஞ்சம் அகலக்கால் வச்சிட்டார். டைம் சரியில்ல. கடகடன்னு கடன் ஏறிப்போச்சு. கடைசில கடை, கார், வீடு எல்லாத்தையும் வித்துப்போட்டு மெட்ராஸ்ல இருக்கவே புடிக்காம வயசான அப்பா அம்மாவக்*

கூட்டிக்கிட்டு வெளியேறிட்டார். பிஸினஸ் நஷ்டமாப் போனவொடன அவரோட ஒய்ஃப் அவர விட்டுட்டுப் போய்ட்டதாக் கேள்வி…”

குத்தம்பாக்கத்தைப் பார்க்க சைக்கிளை மிதித்துக் கொண்டு வந்தபோது, வெங்கட்டின் சொற்கள் அசரீரி மாதிரி ஒலித்துக் கொண்டேயிருந்தன.

தொடர்ந்து மனக்கண்ணில் நிழலாடியது, மூணு மாசம் முன்பு வரை நான் வாழ்ந்த ராஜ வாழ்க்கை. பிறகு, வியாபார விஸ்தரிப்புக்காக வாங்கிய மார்வாடிக் கடனுக்கான வட்டி, டெய்லி வட்டி, மீட்டர் வட்டி எல்லாம் குரல்வளையை நெறிக்க, மளமளவென்று சரிந்து போன பிஸினஸ் சாம்ராஜ்யம். நொடித்துப் போன புருஷனோடு எனக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை என்று குழந்தையைக் கூட்டிக் கொண்டு அம்மாவீட்டுக்கு, சிங்கப்பூருக்கு விமானமேறிவிட்ட படி தாண்டிய பத்தினி. கடையையும், காரையும், வீட்டையும் அவசர அவசரமாய் அடிமாட்டு விலைக்கு விற்று விட்டு, கடன்களை அடைத்து விட்டு, எஞ்சியிருந்த சில ஆயிரங்களோடும் அம்மா அப்பா வோடும் குத்தம்பாக்கத்தில் குடியேற்றம். செய்யக்கூடியது இனி ஒன்றுமில்லை. இதுதான் இனி வாழ்க்கை என்று ஆகிவிட்டது. பெற்றோருக்கு ஆதரவாயிருந்து கடைசி வரைக்கும் அவர்களைக் காப்பாற்ற வேண்டும். மெட்ராஸ் வாழ்க்கை இனி கட்டுப்படியாகாது. தவிரவும், சென்னை யிலிருந்து விலகினால் பழைய நண்பர்கள், கஸ்டமர்கள், சப்ளையர்கள் துக்கம் விசாரிப்பதைத் தவிர்க்கலாம்.

எங்கே போய்க் குடியேறுவது என்று யோசித்தபோது, வெங்கட் சொன்ன மாதிரி குத்தம்பாக்கம் என்கிற மாடல் வில்லேஜ் ஒன்று சென்னையிலிருந்து இருபத்தெட்டே கிலோமீட்டர் தொலைவில் இருப்பதை ஒரு பத்திரிகைக் கட்டுரையில் படித்தது நினைவுக்கு வர, இதோ குத்தம்பாக்கத்தில் முன்னூறு ரூபாய்க்கு ஒரு வாடகை வீடு, ரெண்டு கட்டில்கள், ஒரு ரேடியோ, சில தட்டுமுட்டுச் சாமான்கள், அப்பா, அம்மா, நான், இந்த சைக்கிள்.

ஒன்பது வருஷ வியாபார வாழ்க்கையில் முடங்கிக்கிடந்த என்னுடைய கற்பனை வளத்தையும் படைப்புத்திறனையும் நீவிவிட்டு நிமிர்த்தலாம். கதைகள் கவிதைகள் எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்பலாம். அவை பிரசுரமாகிறபோது கொஞ்சம் சந்தோஷம் கிடைக்கும். கொஞ்சம் பணமும்.

இந்த சிந்தனைகளோடு சைக்கிளை மிதித்து ஊர் வந்து சேர்ந்து, வீட்டை சமீபித்தபோது ஓர் அதிர்ச்சி.

வீட்டுக்கு முன்னால் ஒரு சிறு கும்பல்.

நோயாளிகளான அப்பாவையும் அம்மாவையும் தனியாய் விட்டுவிட்டுப் போயிருந்தேன்.

கிட்டத்தட்ட மூணு மணி நேரம் ஆச்சு. நான் இல்லாத நேரத்தில் என்ன அசம்பாவிதம் நடந்ததென்று தெரியவில்லையே!

சைக்கிளை, ஸ்டாண்ட் போடக்கூட பொறுமையில்லாமல் கீழே கிடத்திவிட்டு, கும்பல் விலகி வழிவிட, வீட்டுக்குள் புகுந்தேன்.

*நான் பயந்த மாதிரி அசம்பாவிதம் ஒன்றுமில்லை.*

*அப்பாவும் அம்மாவும் அவரவருடைய கட்டில்களில் உட்கார்ந்திருந்தார்கள். அப்பாவுக்குப் பக்கத்தில் கண்ணியமான தோற்றத்தில் ஒரு நடுத்தர வயதுக்காரர்.*

*அம்மாவுக்குப் பக்கத்தில் ஒரு பெண்மணி.*

*கீழே, தரையில் சில ஆண்களும், பெண்களும்.*

*'இதுதாங்க எம் புள்ள' என்று அப்பா என்னை அறிமுகப்படுத்தி வைக்கவும், பல ஜோடிக்கரங்கள் என்னை நோக்கிக் குவிந்தன. நான் பதில் வணக்கம் செய்தவுடன் அந்த மனிதர் பேச ஆரம்பித்தார்.*

*"என்னங்க தம்பி, அப்பா அம்மாவத் தனியா வுட்டுட்டு நீங்க இப்படிப் போகலாங்களா? நல்ல சமயத்துல நா வந்து சேந்தேன். இல்லாட்டி என்ன ஆயிருக்கும்!"*

*"பக்கத்து ஊருக்கு மருந்து வாங்கப் போயிருந்தேன் சார். என்ன சார் ஆச்சு?"*

*"என்ன ஆச்சுன்னு அப்பறம் சொல்றேன். மொதல்ல நம்மள அறிமுகப்படுத்திக்குவோம். எம்பேர் ரங்கசாமி இளங்கோ. இந்த ஊர்ல பஞ்சாயத்துத் தலைவனா இருக்கேன். இது என் சம்சாரம். இது மாடசாமி, மாணிக்கம், பீட்டர், சின்னையா, அப்துல்லா, ஆறுமுகம், அலமேல், பார்வதி, செல்லம்மா. வெளிய கொஞ்சம் பேர் நிக்காங்க. நா மெட்ராஸ்க்கு ஒரு வேலையாப் போனேனா, வேல முடியல, அங்கயே தங்க வேண்டியதாப் போச்சு. இல்லாட்டி நீங்க வந்த அன்னிக்கே ஒங்கள வந்து பாத்திருப்பேன். காலைல ஒம்போது மணி போல தான் பட்டணத்துலயிருந்து வந்தேன். வந்ததும் கேள்விப் பட்டேன், புதுசா ஒரு குடும்பம் நம்ம ஊருக்குக் குடி வந்திருக்குன்னு. ஒடனே என் சம்சாரத்தக் கூட்டிக்கிட்டு வந்தேன். இங்க வந்தா, வீடு தொறந்து கெடக்கு. கொரல் குடுத்தா, உள்ள வாங்க சீக்கிரம் வாங்கன்னு ஒரு பொம்பளக் கொரல் கேக்குது. என்னமோ ஏதோன்னு உள்ள ஓடிப்போய்ப் பாத்தா, பாத்ரூம் வாசல்ல பெரியவங்க விழுந்து கெடக்காங்க. ஒங்கம்மா இவங்களத் தூக்க முடியாமத் திண்டாடிக் கிட்டிருக்காங்க. நா வந்து தூக்கிக் கட்டில்ல போட்டேன். நல்ல வேளையா அடியொண்ணும் பலமில்ல. கொஞ்ச நேரம் படுத்துக் கெடந்தாங்க. அப்புறம் எந்திரிச்சி ஒக்காந்துட்டாங்க."*

*"ரொம்ப ரொம்ப நன்றி சார். இந்த உதவிய நா மறக்கவே மாட்டேன் சார்."*

*"அட நீங்க ஒரு பக்கம் தம்பி. கீழ விழுந்து கெடக்கிற பெரியவரத் தூக்கி விடறது ஒரு உதவி! அதுக்கு ஒரு நன்றி! அது ஒரு பக்கம் கெடக்கட்டும். நீங்க இனிமே மருந்து வாங்கப் போறேன்னு ஊர் விட்டு ஊர் போயிராதீங்க."*

*"நா போகாட்டி யார் சார் போவா?"*

*"அதத்தான் சொல்ல வாறேன். இந்த மாடசாமி இன்னியிலிருந்து இந்த வூட்டு வாசல்லயேதான் கெடப்பான். ஏதொண்ணும் வாங்கணும்னா இவன்ட்ட சொல்லுங்க."*

*“ஐயையோ, எதுக்குங்க ஒங்களுக்கு செரமம்!”*

*“செரமமெல்லாம் ஒண்ணுமில்ல தம்பி. எங்க ஊருக்கு நீங்க விருந்தாளியா வந்திருக்கீங்க. நீங்க கஷ்டடப்படுறத நாங்க அனுமதிக்க முடியாது.”*

*“விருந்தாளியெல்லாமில்லீங்க சார். நாங்க இங்க குடியிருக்க வந்திருக்கோம்.”*

*“தாராளமாக் குடியிருங்க. ஆனா ஒங்களுக்கு வேற முக்கியமான வேலயிருக்கு. பெத்தவங்களப் பாதுகாக்கிற வேல. வயசான காலத்துல அப்பா அம்மாவப் பாத்துக்கிறது எவ்வளவு புனிதமான சேவை தம்பி!”*

*“ஐயையோ, அப்படியொண்ணும் எனக்கு வயசாயிரல சார்.”*

*இயல்பாய் நான் எடுத்து விட்ட ஹாஸ்யத்துக்குப் பஞ்சாயத்துத் தலைவர் சிரித்தார்.*

*“பரவாயில்ல. பரவாயில்ல தம்பி, ஒங்க சோகத்துலயிருந்து மீண்டு வந்துட்டடீங்க.”*

*“இல்ல சார் அது அவ்வளவு சாதாரணமான சோகம் இல்ல. என்னமோ அப்பப்ப சின்னதா சிரிச்சி என்னையே நா ஏமாத்திக்கிறேன்.”*

*“அப்படிச் சொல்லாதீங்க தம்பி. இப்பத்தான் நீங்க தகிரியமா இருக்கணும். நீங்க வர்றதுக்கு முந்தி அப்பாட்டயும் அம்மாட்டயும் பேசிட்டிருந்தோம். எல்லா வெவரமுஞ் சொன்னாங்க. வாழ்க்கைங்கறது ஒரு சக்கரம் மாதிரி தம்பி. வாழ்க்கைச் சக்கரம் சுத்திக்கிட்டே இருக்கும். மேல போகும், கீழ வரும். இப்ப நீங்க கீழ இருக்கீங்க. அடுத்தது மேல போய்த்தானே ஆகணும் தம்பி!”*

*அவர் பேசப்பேச எனக்குள்ளே தன்னம்பிக்கையும் உற்சாகமும் துளிர்ப்பதை உணர்ந்தேன். அதை அவரிடமே சொன்னேன், அவருடைய கைகளைப் பற்றிக் கொண்டு.*

*அப்போது ‘சாப்பாடு ரெடீ’யென்றொரு பெண்குரல் உரக்க ஒலித்தது.*

*ஐயையோ மறந்தே போனேன்; மத்யானச் சாப்பாட்டுக்குக் குக்கரில் அரிசி போட வேண்டும். ஆமாம் இது என்ன சாப்பாடு ரெடீ?*

*“சாப்பாடு கொண்டாந்துட்டியா சிவகாமி? ஒங்கையாலயே பரிமாறு. எனக்கும் ஒரு எல போடு.”*

*நான் திகைத்தேன்.*

*“சார், என்ன சார் இது?”*

*ரெங்கசாமி இளங்கோவிடமிருந்து சர்வசாதாரணமாய் பதில் வந்தது.*

“தெரியல? சாப்பாடு தம்பி. அரிசிச்சோறு, சாம்பார், கூட்டு, பொறியல், அப்பளம், மோரும் ஊறுகாயும் உண்டாம்மா சிவகாமி?”

“ஓ, உண்டு அங்க்கிள். ஃபுல் மீல்ஸ் ஒன்லி!”

“இது பட்டணத்துல போய்ப் படிச்சிட்டு வந்த பொண்ணு. அதனால இவங்க இங்லீஷ்தான் பேசுவாங்க. தப்பா எடுத்துக்காதீங்க தம்பி. சரி, பசி உயிர் போகுது. கையக் காலக் கழுவிட்டு வாங்க, சிவகாமி சமயல ஒரு புடி புடிப்போம்.”

“நாங்கூட இங்லீஷ் பேசுவேன் சார். திஸ் இஸ் ட்டூ மச் சார்.”

“ட்டூ மச்சுமில்ல த்ரீ மச்சுமில்ல. ஒங்களுக்கென்ன சமையல்ல பெரிய நளன்னு நெனப்பா தம்பி? அப்படி என்ன சமையல் பண்ணுவீங்க நீங்க?”

“வந்து... குக்கர்ல சாதம் வைப்பேன். ரசம் வைப்பேன். அப்பளம் பொரிப்பேன். முட்டை பொரிப்பேன்.”

“ரொம்பப் பிரமாதம். ஒங்கம்மாட்ட பேச்சக் குடுத்தேன்னா, அவங்களுக்குப் பேசவே முடியல. கேட்டா, நாக்கு செத்துப் போச்சுங்கறாங்க. ஒங்க சமையல்தான் காரணம். இனி ஒங்களுக்கு சமையக்கட்டுல வேல இல்ல தம்பி. தெனம் ஒவ்வொரு வூட்லயிருந்து சாப்பாடு வந்துரும். மிச்சம் வக்யாமச் சாப்புட வேண்டியதுதான் ஒங்க வேல.”

ஒரே மலைப்பாய் இருந்தது. மெடிக்கல் ஷாப்பில் வெங்கட் இந்த ஊர் ஜனங்கள் பற்றியும் பஞ்சாயத்துத் தலைவர் பற்றியும் சொன்னது எனக்கு உறைக்க ஆரம்பித்தது.

சாப்பாட்டுப் பந்தி முடிந்த பின்னால் வீடு காலியானது. அப்பாவிடமும் அம்மாவிடமும் சொல்லிக் கொண்டு கிளம்பின தலைவர், என்னைத் தனியாய்க் கூப்பிட்டு ரெண்டு விஷயங்களைச் சொல்லிப் போனார்.

ஒன்று புனிதம், மற்றது புதிர்.

இன்றிலிருந்து தினசரி சாயங்காலம் சாயங்காலம் இளைஞர் அணி ஒன்று வீட்டுக்கு வருமாம். வந்து, அம்மாவையும் அப்பாவையும் வெளியே உலாவ அழைத்துப் போகுமாம். ‘வயக்காடு, மாந்தோப்பு, மல்லிகைத் தோட்டம் இங்கேயெல்லாம் போய் காத்து வாங்கிட்டு வந்தாலே ஒங்கப்பாக்கும் அம்மாவுக்கும் பாதி வியாதி சொஸ்தமாயிரும் பாருங்க.’

“அப்பறம் தம்பி, நாளக்கிக் காலைல ஒரு ஊர்க்கூட்டம் போட்டிருக்கோம். ஒங்களப் பத்தி ஒரு முக்கியமான முடிவு எடுக்கப்போறோம். நாளக்கி சாயங்காலம் ஒங்கள வந்து பாக்கறேன் தம்பி. நல்ல முடிவோட வர்றேன்.”

பஞ்சாயத்துத் தலைவர் சொன்னது மாதிரியே சாயங்காலம் ஒரு யவ்வனப் பட்டாளம் வந்து அப்பாவையும் அம்மாவையும் கடத்திக் கொண்டு போனது.

அதற்கு முன்னால் தேனீர்.

*உபயம் : சிவகாமி, இரவு உணவும் சிவகாமியே.*

*இந்த உபசரிப்பு கொஞ்சங் கொஞ்சமாய்ப் பழக்கமாகி விட்டாலும், ராத்திரி தூக்கம் பிடிக்கவில்லை. என்ன ஊர்க் கூட்டம்? என்ன என்னைப் பற்றிய முக்கியமான முடிவு?*

*அடுத்த நாள் புதிரை அவிழ்க்க வந்தார் தலைவர்.*

*'இன்னிக்கி டிஃபன், சாப்பாடு எல்லாம் எப்படி தம்பி?' என்று ஆரம்பித்தார்.*

*"இன்னிக்கி யார் சாப்பாடு கொண்டு வந்தது?"*

*"ஒரு அம்மா கொண்டு வந்தாங்க. காவேரின்னு பேர் சொன்னாங்க."*

*"ஆனாலும் நேத்து சிவகாமி பரிமாறின மாதிரி இருந்திருக்காது. கன்னிப்பொண்ணு கை மணம் தனிதானே!"*

*தலைவர் கண்ணடித்தது எனக்குக் கொஞ்சம் நெருடலாய் இருந்தது. அவரே தொடர்ந்தார்.*

*"ஒங்க சம்சாரம் கோவிச்சுக்கிட்டுப் போயிருச்சாமே தம்பி? அம்மா நேத்து சொல்லி வருத்தப்பட்டாங்க. இந்த விலாசம் அவளுக்குத் தெரியாது, தெரிஞ்சா விவாகரத்து நோட்டீஸ் அனுப்பிச்சிருப்பான்னாங்க. கழுத போவுது விடுங்க. நீங்க சரின்னு சொல்லுங்க. லட்டு மாதிரி ஒரு பொண்ண ஒங்களுக்குக் கட்டி வக்கிறேன். யாரச் சொல்றேன் புரியுதா? நம்ம சிவகாமி தான். நீங்க ஜாதியெல்லாம் பாப்பீங்களோ என்னமோ, எங்க ஊர்ல ஜாதியெல்லாம் கெடையாது. இங்க ரெண்டே ரெண்டு ஜாதிதான். ஆண்ஜாதி, பொண்ஜாதி. நீங்க உம்ம்னா, ஒங்க அம்மாட்டயும் அப்பாட்டயும் நானே பேசி சம்மதம் வாங்கறேன். அடுத்த முகூர்த்தத்துல கல்யாணம் தான்."*

*அவர் பேசப்பேச எனக்கு நெருடல் அதிகமானது. ஒரே ஆன்ட்டிக்ளைமாக்ஸ். இதற்காகத்தானா ஊர்க்கூட்டம்? என்னுடைய அதிருப்திக்கு சொல்வடிவம் கொடுத்தேன்.*

*"சார், என் ஒய்ஃப் கோவிச்சிக்கிட்டுப் போய்ட்டது வாஸ்தவந்தான். ஆனா அவ மனசு மாறி திரும்பி வருவான்னு, என்னோட கொழந்தய எங்கிட்டக் கூட்டிக்கிட்டு வருவான்னு நம்பிக்க இருக்கு. வரணும்னு ஆச இருக்கு. அது தான் எனக்கு சந்தோஷம். இந்த விஷயத்தப் பேசவா நீங்க ஊர்க் கூட்டம் போட்டீங்க?"*

*தலைவர் என்னை தீர்க்கமாய்ப் பார்த்தார். பிறகு சிரித்தார்.*

*"ஊர்க்கூட்டம் போட்டது இதுக்கில்ல தம்பி, பயந்துராதீங்க. ஒங்க சம்சாரம் திரும்பி வந்தாங்கன்னா எங்களுக்கு மட்டும் சந்தோஷம் இல்லியா தம்பி? அப்படியே ஆகட்டும் தம்பி. அது ஒரு பக்கம் இருக்கட்டும், இன்னிக்கி ஊர்க்கூட்டம் போட்டது எதுக்குன்னா...."*

சட்டுபுட்டென்று சஸ்பென்ஸை உடைக்காமல் இளங்கோ என் பொறுமையை சோதித்தார். பிறகு, ஊர்கூடிப் பேசிய அந்த திட்டத்தை என் முன் வைத்தார்.

"நம்ம ஊர்ல, ஊர்ப் பொது நிதின்னு ஒண்ணு இருக்கு தம்பி. எல்லா வூட்டுக்காரவங்களும் ஒரு மாசம் விட்டு ஒரு மாசம் பொது நிதிக்கி ஒரு தொகை கட்டணும். பணத் தேவை உள்ளவங்க விண்ணப்பம் குடுத்தா, பொது நிதியிலயிருந்து கடன் குடுப்போம். வட்டியில்லாக் கடன்.

நாலு வருஷம் ஆச்சு. ஆரம்பத்துல விண்ணப்பங்கள் வந்துச்சு. அப்புறம் விண்ணப்பங்கள் வர்றது கொறஞ்சு போச்சு. ஆனா நிதி மட்டும் சேந்துக்கிட்டே போவுது. என்ன ஊர் பாருங்க தம்பி இது! கடன் வாங்க ஆள் இல்ல! இப்ப ஒரு மூணு லச்சம் இருக்கு. அதுல ரெண்டு லச்சத்த ஒங்களுக்குக் குடுக்கறதா ஊர்க்கூட்டத்ல முடிவு பண்ணோம். எந்திரிச்சிட்டீங்களே தம்பி, ஒக்காருங்க. கடன்தான் தம்பி. வட்டியில்லாக் கடன். நம்ம ஊர்லயே ஒரு பலசரக்குக் கட போடறதுக்கு ரெண்டு லச்சம் போதுமில்லியா தம்பி?

கட்டடம் ரெடியாயிருக்கு. ஒங்களுக்கு அனுபவம் இருக்கு. மெட்ராஸ்ல டிபார்ட்மென்ட் ஸ்டோர்னு சொல்றாங்களே, அந்த மாதிரி டீஸன்ட்டா ஒரு கட போடுங்க தம்பி. அட, நா என்னத்தச் சொல்லிப்புட்டேன்னு இப்ப அழுவுறீங்க!"

என்னால் கண்ணீரைக் கட்டுப்படுத்த இயலவில்லை.

ரெண்டாம் முறையாய் அவருடைய கைகளிரண்டையும் இறுகப்பற்றிக் கொண்டேன்.

வார்த்தைகள் வரவில்லை. கண்ணீர் மட்டுமே வழிந்தது.

என்னை இழுத்துத் தோளில் சாத்திக்கொண்டு, தன்னுடைய மேல் துண்டை என்னுடைய கண்களிலும் கன்னங்களிலும் ஒற்றியெடுத்தார்.

"ஐயையே, பட்டணத்துக்காரங்க இப்படித்தான் அழுவாங்களாக்கும்! எங்க ஊர்ல கைக்கொழந்த கூட அழாது தெரியுமோ?"

அவரிடமிருந்து என்னை விடுவித்துக் கொண்டு நான் கை கூப்பினேன்.

"ஒங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியல சார். ரொம்ப ரொம்ப தாங்ஸ் சார்."

இதற்கு மேலே வார்த்தைகள் ஏதும் கிடைக்கவில்லை.

'இதுல நா செஞ்சது எதுவுமே இல்ல தம்பி' என்றார் இளங்கோ.

"எல்லாம் ஊர் ஜனங்க ஏகமனதா செஞ்ச முடிவு. நா சும்மா ஒப்புக்குச் சப்பாணி. கட போட்டு ஒங்களுக்கு லாபம் வர ஆரம்பிச்சப்பறம் கொஞ்சம் கொஞ்சமாக் கடன அடைக்கலாம். அப்புறம், இந்த வூட்டுச் சொந்தக்காரர் சிவராமனும் கூட்டத்துக்கு வந்திருந்தார். கடயில நீங்க லாபம் பாக்கற வரக்யும்

*இந்த வூட்டுக்கு வாடக வேண்டான்னுட்டார். அப்பறம், ஊர்க் கூட்டத்துல இன்னொரு முடிவும் எடுத்தோம். ஒங்களுக்கு சாப்பாடு குடுக்கறதுக்கு நா நீன்னு போட்டி. அதனால சீட்டுக் குலுக்கிப் போட்டு வரிசையா வீடுகள ஏற்பாடு பண்ணிட்டோம்."*

*திரும்பவும் எனக்குக் கண்ணீர் முட்டிக்கொண்டு நின்றது. நாத் தழுதழுத்தது.*

*"அது எப்படி சார், சொல்லிவச்ச மாதிரி இந்த ஊர்ல எல்லாருமே மஹாத்மாக்களா இருக்கீங்க!"*

*இளங்கோ என்னை இடைமறித்தார்.*

*"ஐயையோ. பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க தம்பி. மஹாத்மான்னா ஒலகத்துலயே அவர் ஒருத்தர்தான். இந்த ஊர்ல மனுஷங்க இருக்காங்க. மனுஷங்க மனுஷங்களா இருந்தாலே போதும் இல்லியா தம்பி!"*

*நேற்று சந்தித்த வெங்கட் திரும்பவும் நினைவுக்கு வந்தார்.*

*வெங்கட் சொன்னது எவ்வளவு நிஜம்!*

*எவ்வளவு அழகான மனிதர்கள் இவர்கள்!*

*எவ்வளவு அற்புதமான மனிதர்கள் இவர்கள்!*

*மெய்ம்மறந்த நிலையில் இருந்த என் தோளை உலுக்கிப் பஞ்சாயத்துத் தலைவர் ரெங்கசாமி இளங்கோ சுயநினைவை மீட்டுத் தந்தார். பிறகு சொன்னார், 'நம்ம டிப்பார்ட்மென்ட் ஸ்டோர்ல ஒரு சைடுல மருந்துக் கட ஒண்ணு சின்னதா போடலாமான்னு ஜனங்க கேட்டாங்க. ஒங்க அபிப்ராயம் என்ன தம்பி?'*

*என் அபிப்ராயத்தை நான் சொன்னேன்.*

*"வேண்டாம் சார். இந்த ஊர் மனுஷங்களுக்கு ஒடம்புக்கு ஒண்ணுமே வராது சார். ஒண்ணுமே வராது. தேவையில்ல. மருந்துக்குக்கூட இந்த ஊருக்கு ஒரு மெடிக்கல் ஷாப் தேவையில்ல."*

*கவிதை உறவு, மார்ச் 2008 இதழ்*

# ஹிந்துஸ்தான்

*வெள்ளிக்கிழமை பக்ரீத்.*

*வாப்பாவும் ஹுசேனும் பெருநாள் தொழு கைக்குப் போய்விட்டு வீட்டுக்குள் பிரவேசிக்கையில் மஞ்சள் நீரைக் கொண்டு தலையைச் சுற்றிப் போட்ட பர்வீன், தொடர்ந்து ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள்.*

*"வாப்பா, இன்னிக்கி டின்னருக்கு என்னோட ஃப்ரண்ட் சாதனா வர்றா."*

*குண்டு வாப்பாவுக்கில்லை. ஹுசேனுக்குத்தான். அதிர்ந்து போன அவன் உடனே ஆட்சேபக் குரலெழுப்பினான்.*

*"நோ நோ. நா ஒரேயொருநாள் லீவ்ல திருச்சியி லிருந்து மெட்ராஸ்க்கு வந்திருக்கேன், நம்ம ஃபாமிலி யோட இருக்கலாம்னு, இன்னிக்கி அனாவசியமா எதுக்கு இன்னொரு தர்ட் பார்ட்டி?"*

*"ஐம் ஸாரி பிக் பிரதர். நா சாதனாவ ஏற்கனவே இன்வைட் பண்ணியாச்சு. அவ வர்றா. ஷி இஸ் கமிங்."*

*"நோ மேடம். ஷி இஸ் நாட் கமிங். இரும்பு அடிக்கிற எடத்துல ஈக்கு என்ன வேலை?"*

*"அம்மா அவளுக்குன்னு ஸ்பெஷலா வெஜிடபிள் பிரியாணி செய்யப் போறாங்க. என்னம்மா?"*

*"வெஜிடபிள் பிரியாணியா? பக்ரீத் அன்னிக்கி ஒரு முஸ்லிம் வீட்ல வெஜிடபிள் பிரியாணியா? ஹை, வாட் ய ஜோக்! இங்க பார் பர்வீன், நாளக்கி சனிக்கிழம, எனக்கு ஸெகண்ட் ஷிஃப்ட். ஸோ, காலைல சுபுஹ் தொழுதுட்டு பஸ் புடிச்சி நா திருச்சிக்கிப் போய்ச் சேரணும். இந்த ட்வென்ட்டி ஃபோர் அவர்ஸும் நா நம்ப ஃபாமிலியோட இருக்கணும்னு நெனக்கிறேன். இதுல ஒரு மூணாவது அணி தலையிட நா அலவ் பண்ண முடியாது. உன் ஃப்ரண்ட, சாதனாவா ரோதனவா, அவள நாளக்கி வரச் சொல்லு."*

*"யூ ஆர் ஸோ ஸெல்ஃபிஷ்."*

*"நீ என்னவேணா சொல்லு, நா அக்ரீ பண்ண மாட்டேன். பக்ரீத் அன்னிக்கி நம்ம வீட்ல ஒரு காஃபிருக்கு விருந்தா? வாட் நான்ஸென்ஸ்!"*

*'காஃபிர்' என்கிற வார்த்தைப் பிரயோகம் பர்வீனை உசுப்பி விட்டு விட்டது. படபடவென்று பொரிய ஆரம்பித்து விட்டாள்.*

“காஃபிர்? யூ மீன் நான்பிலீவர்? ஹவ் கேன் யூ ஸே தட்? அவங்க அப்பா அம்மா காட்டிக் குடுத்த கடவுள அவ ஸின்ஸியராத் தொழுறா. சாதனா நாஸ்திகி இல்லை. காஃபிர் இல்லை. நீ ஒரு ஃபனட்டிக் மாதிரிப் பேசற. நாம எல்லாரும் இந்தியால சர்வ சுதந்திரத்தோட வாழறோம்னா, அது இங்க உள்ள மெஜாரிட்டி ஹிண்டூஸ்ஸோட பெருந்தமையாலதான். இத ஏத்துக்க. ஒன்னோட வக்கிரம புத்திய மாத்திக்க.”

“நீ என்ன கத்தினாலும் நா சொன்னது சொன்னதுதான். இந்தப் புனிதமான பெருநாள நா ஒரு நான்முஸ்லிமோட பங்கு போட்டுக்கறதா இல்ல.”

“ஒனக்கு அறிவு மழுங்கிப் போச்சு. நீ ஒரு படிச்ச முட்டாள். நீ ஒரு எக்ஸ்ட்ரிமிஸ்ட். நீ ஒரு டெர்ரரிஸ்ட். நீ பாக்கிஸ்தானுக்குப் போக வேண்டிய ஆள்.”

தங்கையின் ஆவேசத் தாக்குதலை ரகசியமாய் ரசித்தபடி ஹுசேன் பின்வாங்கினான். பேப்பர் படிக்கிற மாதிரி இந்த வாக்குவாதங்களை அவதானித்துக் கொண்டிருந்த வாப்பா, வாயைத் திறந்தார்.

“காம் டௌன் பர்வீன். இன்னிக்கி வீடு பூரா ஒரே கவிச்சி வாடையா இருக்கும்மா. ஒன்னோட ஃப்ரண்ட் வெஜிடேரியன், ரொம்ப சங்கடப்படுவா. நீ கூப்ட்டதுக்கு மறுப்பு சொல்ல முடியாம சம்மதம் சொல்லியிருப்பா. ஒங்கண்ணன் திருச்சிக்குப் போய்ச் சேரட்டும். சாதனாவ நாளக்கி வரச் சொல்லு. நாம எல்லாரும் அவளோடு சேந்து வடை பாயசத்தோட லஞ்ச் சாப்புடுவோம். ஒனக்கு டெலிக்கேட்டா இருந்தா, அவ நம்பரக் குடு. நானே அவகிட்ட பேசறேன்.”

வாப்பா சொன்னதைக் கேட்டு ஹுசைன் ஆசுவாசப் பெருமூச்சு விட, அடுத்து வாப்பா அவனை முன்னிலைப்படுத்திப் பேசினார்.

“ஹுசேன். ஒன்னோட ஐடியாவையெல்லாம் நீ கொஞ்சம் மாத்திக்கணும். மத்த மதத்தவங்கள வெறுக்கச் சொல்லி இஸ்லாம் போதிக்கல. நாம ஒரு காஸ்மாபாலிட்டன் சொஸைட்டில வாழ்ந்துட்டிருக்கோம். நமக்குப் பரந்த மனப்பான்மை வேணும்.” வாப்பா பேசப்பேச, ஹுசேனுக்கு அப்பாடா என்றிருந்தது.

சாயங்காலம் திரும்பவும் உடம்பில் ஸென்ட் அடித்துக்கொண்டு ஹுசேன் வெளியே கிளம்பியபோது வாப்பா வழி மறித்தார். “என்னமோ ட்வென்ட்டி ஃபோர் அவர்ஸ் ஃபாமிலியோட இருக்கப் போறேன்னு சொன்ன மாதிரியிருந்தது?”

“அதுக்கு? என்னோட ஃப்ரண்ஸ்ஸயெல்லாம் போய்ப் பாக்க வேண்டாமா” என்று நழுவினான் ஹுசேன்.

மெரினாவில் காத்திருந்தான்.

அவள் வந்தாள்.

சிகப்புச் சுரிதாரில் அட்டகாசமாயிருந்தாள்.

இவனைப் பார்த்ததும் மலர்ந்து சிரித்தாள்.

*"வந்து ரொம்ப நேரமாச்சா ஹுசேன்?"*

*"போ. நா ரொம்பக் கோவமாயிருக்கேன்."*

*"அத சிரிச்சிண்டே சொன்னா?"*

*"என்ன செய்யச் சொல்ற, ஒன்னப் பாத்தவொடன உருகிப் போயிர்றேனே. அதிருக்கட்டும், ஏய் மண்டு, நா எஸ்ஸெம்மெஸ் குடத்தேன்ல, நாம இன்னிக்கி பீச்ல மீட் பண்றோம், அப்பறம் சேந்து ஒரு ஹோட்டேல்ல டின்னர் சாப்புடறோம்னு? என்ட்ட நீ சரின்னுட்டு, வீட்டுக்கு வர்றேன்னு பர்வின்ட்ட சொல்லியிருக்க?"*

*"என்ன செய்ய ஹுசேன், பர்வீன் ரொம்பக் கம்ப்பல் பண்ணினா, நேக்கு என்ன செய்யறதுன்னு தெரியலை. நல்ல வேள ஒங்க வாப்பா, மை வருங்கால மாமனார், ஃபோன் பண்ணினாரா நா தப்பிச்சேனா! ஆமா, பர்வீன எப்படி சமாளிச்ச?"*

*"அத ஏன் கேக்கற சாதனா, ஒரு ஆட்டம் ஆடிட்டா, என்ன பாக்கிஸ்தானுக்குப் போடான்னு சபிச்சிட்டா. ஆனா, இதுல ஒரு நல்ல காரியமும் நடந்திருக்கு. ஒரு டிராமா போட்டு வாப்பாவோட விசாலமான மனசத் தெரிஞ்சிக்கிட்டேன். நீ வேணா பார் சாதனா, வாப்பா நமக்கு ஓக்கே சொல்லிருவார்."*

*"ஹுசேன்?"*

*"ம்ம்?"*

*"நீ பாக்கிஸ்தானுக்குப் போறச்ச என்னயும் கூட்டிண்டுதான போவ?"*

*'ச்சீ மண்டு'* என்று சாதனாவின் மண்டையில் செல்லமாய் ஒரு குட்டு வைத்தான்.

ரெண்டு பேரும் கை கோர்த்துக் கொண்டு சுதந்திரமாய்ச் சிரித்தார்கள்.

*(கல்கி, 09.03.2008)*

# மஹாத்மா காந்தி மார்க்கெட்

நார்த்தங்காய் ஊறுகாய் என்பது ஓர் அற்புதமான வஸ்து. அபூர்வமான வஸ்துவும் கூட. நார்த்தங்காய் போன்ற ஒரு காயின் படத்தோடு, ஸிட்ரான் பிக்கிள் என்று ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்ட லேபில் ஒட்டப்பட்டு சென்னை சூப்பர் மார்க்கெட்களில் கிடைக்கிற ஊறுகாய் பாட்டில்களெல்லாம் சும்மா பம்மாத்து.

ஒரிஜினல் ஹல்வா வேண்டுமென்றால் திருநெல் வேலிக்குத்தான் போக வேண்டும் என்று இருக்கிற மாதிரி, ஒரிஜினல் நார்த்தங்காய் ஊறுகாய்க்கு எங்கப் பாளையங் கோட்டைக்குத்தான் போக வேண்டும்.

நார்த்தங்காய் ஊறுகாய்க்காக நம்ம நாக்கு நமநமக்கிற பல சந்தர்ப்பங்களில், என்ன ஆனாலும் ஆகட்டும், நெல்லை எக்ஸ்ப்ரஸ்ஸில் தட்காலில் ஒரு டிக்கட் போட்டு ஒரு சனிக்கிழமை ராத்திரி ரயிலேறி விடுவோமா என்று ஒரு வேகம் பிறக்கும்.

திங்கட்கிழமை காலையில், ஊறுகாய் பாட்டில் அல்லது பாட்டில்களோடு சென்னை வந்து சேர்ந்து விடலாம்.

ஆனால் ஒரு ஆயிரம் ரூபாய் அவுட்.

நாக்கு ருசிக்காக ஆயிரம் ரூபாயையும் முப்பத்தாறு மணி நேரத்தையும் மெனக்கிடப் போகிறாயா மடையா என்று மண்டையில் தட்டி என் அந்தராத்மா என்னை அடக்கி விடும்.

குடும்பத் திருவிழாவுக்கு மே மாசம் ராஜபாளையம் போயிருந்த போது, ஒரு நாள் ஒய்வு கிடைத்தது. ராஜபாளையத்தில் பஸ் ஏறினால், மூணு மணி நேரத்தில் திருநெல்வேலி. போய் வந்து விட்டாலென்ன என்றொரு சபலந்தட்டியது. சபலத்துக்கு செயல் வடிவம் கொடுத்து அதிகாலை ஆறு மணிக்கு பஸ் ஏறியே விட்டேன்.

வழியில், சங்கரன் கோவில் பஸ் ஸ்டாண்ட் ரோடில், சாலையின் ரெண்டு பக்கங்களிலும் வியாபித்திருக்கிற மிட்டாய்க் கடைகளில், வட்டவட்டமாய் கோபுரப்படுத்தி வைத்திருந்த வெள்ளை ஜிலேபிகள் போகிற வருகிற வாகனங்களின் தூசி பட்டு லேசாய்ப் பழுப்பேறிப் போயிருந்தன.

அந்த ஜிலேபிகளில் கால் கிலோ அரைக் கிலோ ஓலைப் பெட்டிகளில் பார்ஸல் பண்ணிக் கொண்டு போய் வீட்டில் பிள்ளைகளுக்குத் தின்னக் கொடுக்க வேண்டும் என்கிற ஆசை டிரைவருக்கோ கண்டக்டருக்கோ வந்து விட்டால், சங்கரன் கோவில் பஸ் ஸ்டாண்டில் காக்கப் போட்டு விடுவார்கள்.

நான் பஸ்ஸேறிய அன்றைக்கு ரெண்டு நல்ல விஷயங்கள் நடந்தன.

ஒன்று, சங்கரன் கோவில் பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸைக் காக்கப் போடவில்லை.

*ரெண்டு, கீழே இறங்கி நின்றால் கால்களுக்கூடாக ஓடுகிற சங்கரன் கோவில்ப் பன்றிகள் ஒன்றைக் கூடக் காணவில்லை.*

*எட்டே முக்காலுக்கெல்லாம் திருநெல்வேலிப் புதிய பேருந்து நிலையத்தில் இறங்கியாச்சு. அங்கேயிருந்து, மார்க்கெட் போகிற டவுன் பஸ்ஸில் ஏறி அசோக் டாக்கீஸ் ஸ்டாப்பில் இறங்கிக் கொண்ட போது, பக்கத்தில் தானே பாட்டியுடைய பழைய வீடு, ஒரு நடை போய்ப் பார்த்து விட்டு வரலாமே என்று ஆசை வந்தது.*

*அசோக் டாக்கீஸ் இப்போது இல்லை. பஸ் ஸ்டாப் மட்டும் தான் இருக்கிறது. அசோக் டாக்கீஸுக்குப் பின்புறம் தான் பாட்டியின் பாரம்பரிய வீடும் விசாலமான தோட்டமும் அமைந்திருந்தன. தோட்டத்தில் நார்த்தங்காய் மரங்கள் ரெண்டு நின்றன.*

*நார்த்தங்காய் ஊறுகாய்க் கலையில் கைதேர்ந்த பாட்டி.*

*பாட்டி வீட்டுக்குப் போகிற வழியில், வாய்க்கால் பாலத்தையொட்டியிருக்கிற பிள்ளையார் கோவிலில், வருஷாவருஷம் விநாயக சதூர்த்திக்குப் பாட்டுக் கச்சேரி நடக்கும். சிங்காரங் கெட்டு சிறைப்பட்டப் பாவிக்கு சம்சாரம் எதுக்கடீ என்று சிதம்பரம் ஜெயராமனின் குரலில் மதுரை சி.ஆர். சவுந்தரராஜன் பாடுகிற போது மெய்சிலிர்த்துப் போய் ரசிகர் கூட்டம் விஸிலடிக்கும். கச்சேரி உபயம் டாக்டர் மகாதேவன். கம்பவுண்டராயிருந்து டாக்டராய்ப் பதவி உயர்வு பெற்றுக் கொண்ட மகாதேவன். டாக்டர் இப்போது போய்ச் சேர்ந்திருப்பார். கச்சேரி இப்போதெல்லாம் நடக்கிறதோஇல்லையோ, யாரிட மாவது கேட்கலாமென்றால், பிள்ளையார் கோவில்ப் பக்கம் பிள்ளையார் ஒரு நபரைத் தவிர வேறே மனிதர்களே இல்லை.*

*சரி போகட்டும் என்று பாலத்தைக் கடந்து பாட்டி வீட்டுப் பக்கம் வந்தால், வீடு இருந்த இடத்தில் வேறொரு புதிய கட்டிடம் இருக்கிறது.*

*என்னமோ ஒரு ஃபாக்டரியின் பெயரைத் தாங்கிய பெயர்ப்பலகை கேட்டில் தொங்குகிறது. கூரை மேலே ஒரு ஸின்ட்டெக்ஸ் தண்ணீர்த் தொட்டி.*

*அண்ணாந்து பார்த்த போது, அந்நாளில் அசோக் டாக்கீஸ் பாட்டுக்களைக் கேட்டபடி மொட்டை மாடியில் படுத்துக் கிடந்த கோடைகால ராத்திரிப் பொழுதுகளின் நினைவு நெஞ்சுக்குள் புகுந்து கொண்டு கனத்தது.*

*வீடே இல்லையென்கிறபோது தோட்டம் எப்படி இருக்கும்! தோட்டமே இல்லையென்கிறபோது நார்த்தங்காய் மரங்கள் எப்படி இருக்கும்!*

*வந்த வழியே திரும்பி நடந்தேன்.*

*வடக்குப் பேட்டைப் பள்ளிவாசலைக் கடந்து கோட்டூர் ரோடை அடைந்தால், அங்கே ஒரு வீட்டில் நார்த்தங்காய் ஊறுகாய் தயாரித்து விற்பனை செய்வதாய்ச் செவி வழிச் செய்தியொன்று உண்டு.*

*போகிற வழியில் நடராஜன் பார்பர் ஷாப்.*

*பாளையங்கோட்டைக் கான்வென்ட்டில் படித்துக் கொண்டு, பாட்டி வீட்டில் செல்லமாய் வளர்ந்து வந்த சின்ன வயசில், மாசம் ஒரு முறை வீட்டுக்கே நாவிதர் வருவார். தாத்தாவுக்கு முடி வெட்டி, ஷேவ் செய்து, நகம் கத்தரித்து, கக்கத்தில் மயிர் மழித்து, எல்லாம் செய்வதற்கு நாலணா. சின்னப் பையன் எனக்குப் பாதிச்*

*சார்ஜ், ரெண்டணா. பின்னாளில், பெரிய க்லாஸுக்குப் போன பின்னால், நடராஜனின் பார்பர் ஷாப்பில் ஐம்பது பைசா.*

*மெட்ராஸில், ஆண்களுக்கான பியூட்டிப்பார்லர்களில் இப்போது ஐம்பது ரூபாய் அல்லவா வாங்குகிறார்கள்! நடராஜன் வாங்கியது மாதிரி நூறு மடங்கு!*

*நடராஜன் வாழ்க.*

*தொழில் ரீதியான உறவையும் மீறி நடராஜன் மேலே ஒரு நட்பு ஏற்படக் காரணமாயிருந்த விஷயம், என்னைப் போலவே அவரும் ஒரு விஸ்வாசமான சிவாஜி ரசிகர் என்பது. பார்பர் ஷாப் கோட்டுபாடுகளுக்கு முரணாக, சினிமா நடிகைகளின் கவர்ச்சிப் படங்களையெல்லாம் நடராஜன் தவிர்த்திருந்தார்.*

*மஹாத்மா காந்திப் படம் ஒன்று. அதையடுத்து, பலே பாண்டியா படத்தில் மருதுவாய் வருகிற ரெண்டாவது சிவாஜி அட்டகாசமாய்ப் போஸ் கொடுக்கிற படம் ஒன்று.*

*நான் வாழ்க போட்ட நடராஜன் இப்போது வாழ்ந்து கொண்டிருப்பாரா அல்லது வாழ்ந்து முடித்திருப்பாரா என்கிற உறுத்தலோடு அந்தக் கடையில் எட்டிப்பார்த்தேன்.*

*வயசாளிகள் ரெண்டு பேர் உள்ளே பெஞ்சில் இருந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.*

*ஒருவர் தொழில் செய்கிற நாவிதராகவும், மற்றவர் அவருக்குக் கம்ப்பெனி கொடுக்க வந்த சிநேகிதராகவும் இருக்கலாம்.*

*“ஐயா, நடராஜன் கட தானேங்க இது?”*

*“ஆமா, நீங்க?”*

*“ஒரு காலத்ல நடராஜனோட கஸ்டமர்ங்க நா. நடராஜன்...இருக்... காருங்களா......?”*

*“அவர் போய் எட்டு வருசம் ஆச்சே சார். இப்ப நாந்தான் கடைய நடத்திட்டிருக்கேன்.”*

*“ஆனா, அன்னிக்கி நடராஜன் மாட்டி வச்சிருந்த அதே மஹாத்மா காந்திப் படம், அதே சிவாஜி கணேசன் படம் எல்லாம் அப்டியே இருக்கு! பாக்க சந்தோஷமா இருக்கு.”*

*“ஆமா சார், படங்களக் கழட்டாம நடராசன் ஞாபகார்த்தமா அப்டியே வச்சிர்க்கோம். சார் இப்ப எங்க இருக்கீய?”*

*“நா இப்ப மெட்ராஸ்ல இருக்கேங்க. ரொம்ப நாளக்கப்புறம் பாளையங்கோட்டக்கி வந்தேன். கடையப் பாத்ததும் நடராஜன் ஞாபகம் வந்துச்சு. அப்ப நா வறேங்க ஐயா.”*

*“ரொம்ப சந்தோசம் சார். பேய்ட்டு வாங்க. இந்த ஊருக்கு மறுவாட்டி வந்தீயன்னா நம்ம கடையவும் வந்து எட்டிப் பாத்துட்டுப் போங்க.”*

*“நிச்சயமா.”*

நடராஜன் கடையிலிருந்து வலது பக்கம் பார்வையைத் திருப்பிய போது வடக்கு பஜார் ரோடும், அதன் முனையிலிருந்த சங்கரம் பிள்ளைக் கடையும் கண்ணில் பட்டன. நடராஜனைப் போலவே அழகான மனிதர் சங்கரம் பிள்ளை. கல்லூரி நாட்களில், சாயங்காலங்களில் நண்பர்கள் ஜோதி விநாயகத்தோடும், சேகர், ஹில்பர்ட்டோடும் நின்று அரட்டையடிக்கிற இடம் இந்த சங்கரம் பிள்ளைக்கடை முக்கு தான்.

கடையில் விற்பனைக்கிருக்கிற எல்லாப் பத்திரிகை களையும் எனக்கு ஓசியிலேயே வாசிக்கக் கொடுக்கிற சங்கரம் பிள்ளை இன்னும் வாழ்ந்திருக்க சாத்தியமே இல்லை என்கிற நிச்சயத்தோடேயே அவருடைய கடையை சமீபித்தேன்.

சங்கரம் பிள்ளையுடவே முகச்சாயலிலிருந்த இளைஞரிடம் விசாரித்தேன்.

“சார், நீங்க சங்கரம்புள்ள ஸன்னுங்களா?”

“ஆமா சார்.”

“அப்பா....?”

“அப்பா போய் ரெண்டு வருஷம் ஆச்சு சார்.”

ரெண்டு வருஷம் தானா? அடடே, கொஞ்சத்தில் தான் மிஸ் பண்ணியிருக்கிறேன். ரெண்டு வருஷம் முந்தி பாளையங்கோட்டைப் பக்கம் வந்திருந்தால் சங்கரம் பிள்ளையைக் கடைசி கடைசியாய் ஒரு தரம் பார்த்து விட்டுப் போயிருக்கலாம்.

அந்த மன வருத்தத்துடனேயே வடக்கு பஜார் வழியாய் நடந்த போது, வலது புறம் மஹாத்மா காந்தி மார்க்கெட்டின் கேட் வந்தது.

கல்லூரிக் காலங்களில், லீவ் நாட்களில், கொழும்புக் கூடையோடு வந்து, காய்கறிகளும், மட்டன், மீனும் வாங்கிக் கொண்டு போகிற மஹாத்மா காந்தி மார்க்கெட்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை, மார்க்கெட்டுக்கு வந்த போது, நெஞ்சில் ரத்தங்கசியச் செய்த கொடூரமான காட்சியொன்று இப்போது மனசில் விரிகிறது.

கசாப்புக் கடைகளுக்குப் போகிற பாதையில் ஒரு சிறு கும்பல்.

கும்பலின் இடையே கிடைத்த இடைவெளிக்குள்ளே தலையை நுழைத்துப் பார்வையை ஓடவிட்டபோது தான் அந்தக் கொடுமையைக் காண நேர்ந்தது.

ஒரு கொடுங்கோல்க் கசாப்புக்காரன் முயல் ஒன்றைத் தோலுரித்துக் கொண்டிருந்தான், உயிரோடு.

பரிதாபத்துக்குரிய அந்த ஜீவனைக் காதுகளைப் பற்றி உயர்த்திப் பிடித்தபடி, கத்தியைக் கொண்டு அதன் கழுத்தைச் சுற்றிக் கீறி, அது பதறப் பதறத் துகிலுரித்துக் கொண்டிருந்தான்.

முயலினால் பதறத்தான் முடியும், கதற முடியாது.

முயலுக்குக் குரல் கிடையாது.

*தன்னுடைய வேதனையை வெளிப்படுத்தக் கூட த்ராணியற்ற அந்த வாயில்லாப் பிராணிக்கு இழைக்கப்பட்ட சித்ரவதை என்னிலிருந்து ஓர் அவலக் கவிதையாய் வெளிப்பட்டுப் பின்பு கணையாழியில் பிரசுரம் பெற்றது.*

*முயலுக்கு முகம்*
*மனுஷக் குழந்தை போல*
*மஹாத்மா காந்தி மார்க்கெட்டில்*
*அந்த குரலில்லா ஜீவனைக்*
*கன்னத்துத் தோல் படபடக்க*
*கண் இமைகள் முணுமுணுக்க*
*கழுத்தைக் கீறியொருவன்*
*உயிரோடு துகிலுரித்த கொடுமை*
*(கூட்டத்தில் ஒரு மிருகாபிமானி:*
*கொன்னுட்டாவது உறிய்யா பாவம்)*
*வள்ளுவனின் புலால் மறுப்பும்*
*மஹாத்மாவின் ஜீவ அஹிம்சையும்*
*சம்மட்டியாய்*
*மாறி மாறி என் மூளையில்*

*முயல்க் கொலை நடந்த அன்று தான் மார்க்கெட்டில் வைத்துச் சான்ராஜாவைப் பார்த்தேன், பல வருஷங்களுக்குப் பின்னால்.*

*பழுத்துக் கொழுத்த ரெண்டு வாழைக்குலைகளை ரெண்டு தோள்களிலும் தொங்கவிட்டபடி, பழங்கள் கால்களில் இடற, வேலைப் பளுவும் வாழைப் பளுவும் தோள்களை அழுத்த, மிகுந்த சங்கடத்தோடு அவன் நகர்ந்து கொண்டிருப்பது புரிந்தது.*

*அவன் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறதை மனவேதனையோடு பார்த்தபடி நின்றிருந்த என்னை ஏறெடுத்துப் பார்த்தவன், பல வருஷங்களுக்குப் பிறகு பார்க்கிற முகமென்றாலும், என்னை அடையாளங் கண்டுகொண்டு, சிக்கனமாய் ஒரு புன்னகையை சிந்தி விட்டு அவன் பாட்டுக்கு நடந்து கொண்டிருந்தான், சிரமத்தோடு.*

*நான் கல்லூரியில் படிக்கிறவன் என்பது அவனுக்குத் தெரிந்திருக்கும். மாறாக, தான் ஒரு கூலித் தொழிலாளியா யிருக்கிறோமே என்கிற தாழ்வுணர்ச்சியும் விரக்தியும் வாழைக்குலைகளின் கனத்தோடு சேர்ந்து மேலும் அவனை அழுத்தியிருக்க வேண்டும்.*

*

*சான்ராஜா என்னுடைய பால்ய காலத்து சிநேகிதன். எனக்கும் அவனுக்கும் கிட்டத்தட்ட எட்டு வருஷ வயசு வித்தியாசம் இருந்தாலும், அந்த இடைவெளியை இட்டு நிரப்புகிற ஒரு கவர்ச்சி அவனிடம் இருந்தது.*

*அவனுடைய பதினாறு வயசு விடலைப் பருவத்துக்கே பாத்தியப்பட்ட கில்லாடித்தனம் இந்த எட்டு வயசுச் சிறுவனைக் காந்தமாய்க் கவர்ந்தது.*

*உருப்படாமப் போனவன், ஊர்சுத்திப் பையன் என்கிற துர்ச்சான்றிதழ்கள் சான்ராஜாவிடம் இருந்தன. அப்படிப் பட்ட ஒருபோக்கிரியோடு, கான்வென்ட்டில் படிக்கிற இந்தக் கள்ளங் கபடமறியாத பாலகன் சேரலாமோ? சேரவே கூடாது என்று பாட்டியின் தடையுத்தரவு அமுலில் இருந்தது. தடையை மீறி, சான்ராஜாவோடு ரகசியச் சந்திப்புகள் தொடர்ந்து கொண்டிருந்தன.*

*

*சாயங்காலம் ஸ்கூல் விட்டு வீட்டுக்கு வந்ததும், ஷாம்க்கா நாஷ்டா என்று அறியப்பட்ட மாலைத் தீனி தயாராயிருக்கும்.*

*பணியாரம், கொழுக்கட்டை, சத்து உருண்டை, பாலில் ஊறின அவல் என்று நாக்குக்கு ருசியான பலகாரம் பாட்டியால் விநியோகிக்கப்படும்.*

*மயில் வாகனனின் மந்திரக் குரலில் ரேடியோ சிலோன் கேட்டுக் கொண்டே அந்தப் பதார்த்தங்களைக் கொஞ்சங் கொஞ்சமாய் ரசித்து, ருசித்துச் சாப்பிடுவோம் பிள்ளைக ளெல்லோரும்.*

*அந்தத் தருணத்தில், வெளி கேட்டுக்கு வெளியே சான்ராஜா காத்திருப்பது மானசீகமாய் எனக்கு உணர்த்தப்பட, என் பங்குப் பண்டங்களில் பாதி, கமுக்கமாய் அவன் வயிற்றுக்குள் போய் விடும்.*

*

*அந்த வயதுக்குரிய சாகசங்கள் சான்ராஜாவிடம் தூக்கலாயிருந்தன.*

*பாட்டி வீட்டுக்கு ஒரு பக்கம் வாய்க்கால், மறு பக்கம் பரந்து விரிந்த குளம். தாமரைப் பூக்கள் மிதக்கிற ரம்யமான குளம்.*

*குளத்துக்குள்ளே இறங்கிச் சான்ராஜா தாமரைப் பூக்களைத் தண்டோடு கிள்ளிக் கொண்டு வந்து என்னைப் பரவசப்படுத்துவான்.*

*வாய்க்காலில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறபோது. படித்துறையின் கூரையிலிருந்து தண்ணீருக்குள் விறால்*

*(= டைவ்) அடித்து என்னைப் பொறாமைப் படுத்துவான்.*

அதையெல்லாம் தூக்கிச் சாப்பிடுகிற மாதிரி ஒரு ஆனந்த அதிர்ச்சியைக் கொடுத்தான் எனக்கு.

“எங்கிட்ட ஒரு ஏரோப்ளேன் இருக்கு’ என்றான் ஒரு நாள்.

“ஏரோப்ளேனா, நெஜம்மாவா? எனக்குக் காட்ட மாட்டியா?’ என்று ஏங்கினேன்.

ஆகாயத்தில் உயரப் பறக்கிற விமானங்களை அண்ணாந்து பார்த்து அதிசயித்ததோடு சரி. சிட்டுக் குருவி சைஸுக்குத்தான் இருக்கும் விமானம்.

ரொம்ப ரொம்ப உயரத்தில் பறக்கிற விமானம் ஒரு புள்ளி மாதிரி இருக்கும். புள்ளிக்குப் பின்னாலொரு புகைக் கோடு ரொம்ப தூரத்துக்கு நீண்டு கிடக்கும்.

ஏரோப்ளேனுக்கும் எனக்குமுள்ள உறவு அநியாயத்துக்கு இப்படி அந்நியப்பட்டுக் கிடக்க, இந்தப் பயலோ சொந்தத்தில் ஒரு ஏரோப்ளேனே வைத்திருப் பதாய்ச் சொன்னால் ஏக்கங்கொள்ளாமல் என்ன செய்ய முடியும்!

அந்த ஏக்கத்தினூடே, மனசின் மூலையில் சின்னதாய் ஒரு சந்தேகம் இருந்தது.

*

ஏரோப்ளேன் சங்கதியைச் சொன்னவன் கொசுறாய் இன்னொன்றையும் சொன்னான். தன்னிடம் வாட்ச் ஒன்று இருப்பதாய்ச் சொன்னவன், அடுத்த நாளே அட்டகாசமாய் ஒரு வாட்ச்சைக் கையில் கட்டிக் கொண்டும் வந்து விட்டதைப் பார்த்து அசந்தே போனேன்.

அந்த ஆகாய விமான அதிபரைப் பற்றி எனக்கு இருந்த சொற்ப சந்தேகமும் களையப்பட்டு விட்டது.

விமானமும் வாட்ச்சும் இருப்பதாய்ச் சொன்னவன், வாட்ச்சைக் கட்டிக் கொண்டு வந்து காட்டி ஒரு ஐட்டத்தை நிரூபித்து விட்டான். அப்படியென்றால் மற்ற ஐட்டமான ஏரோப்ளேனும் இருந்து தானே ஆக வேண்டும் என்கிற லாஜிக் என்னை அடித்துப் போட்டது!

அடுத்த நாள் அதிரடியாய் ரெண்டு கைகளிலும் வாட்ச்கள் கட்டிக் கொண்டு வந்து அவன் காட்டின போது எனக்கு இன்னொரு நியாயமான சந்தேகம் உதித்தது.

சந்தேகத்தை அவனிடமே கேட்டேன்.

“வாட்ச் ரெண்டு வச்சிர்க்கியே, அப்ப ப்ளேனும் ரெண்டு வச்சிர்க்கியா?”

“ஆ...ஆமா, ஆமா’ என்று உடனடியாய் உண்மையை ஒப்புக் கொண்டவன், அவனுடைய ரெண்டு விமானங் களுக்குமுள்ள வித்தியாசத்தை விளக்கினான்.

ஒரு விமானம் நார்மலானதாம், மற்றது கூர்மையான மூக்கு உடையதாம்.

நார்மலான விமானம் வானத்தில் வட்டமடித்து, மெது மெதுவாய்த் தரையிறங்குமாம். கூர் மூக்கு விமானம் சதக்கென்று மூக்கினால் தரையில் குத்திக் கொண்டு நிற்குமாம். பின்னது தான் எனக்குப் பிடித்திருந்தது.

“அது எனக்குல’ என்று விண்ணப்பம் வைத்தேன்.

கொஞ்சமும் யோசிக்கவே யோசிக்காமல், “சரி வச்சிக்க’ என்று வாரி வழங்கி விட்டுப் போய் விட்டான்.

அன்றைக்குப் போன சான்ராஜா, பல வருஷங்கள் கழித்து, நான் காலேஜுக்குப் போன பின்னால், மஹாத்மா காந்தி மார்க்கெட்டில் தான் கண்ணில் பட்டான், வாழைக் குலைகளோடு மல்லுக்கட்டியபடி.

இன்னும் பலப்பல வருஷங்களுக்குப் பின்னால் அதே மஹாத்மா காந்தி மார்க்கெட்டுக்குள்ளே இதோ நான் பிரவேசிக்கிறேன்.

*

மார்க்கெட்டின் உள்ளமைப்பு அடியோடு மாறிப் போயிருக்கிறது.

அந்த அப்பாவி முயலின் கழுத்தைக் கீறின கசாப்புக் கடை முகப்பைக் காணவில்லை. வலது பக்கம் வரிசையாய் வாழைப்பழ ஹோல் சேல் கடைகள்.

அந்த வாழைப் பழ வளாகத்தில் சான்ராஜா தென்பட மாட்டானா என்கிற எதிர்பார்ப்போடு ரெண்டு பக்கமும் பார்வையைச் செலுத்தியபடி நடக்கிறேன்.

ம்ஹூம். நண்பனைக் காணவில்லை.

அவனுடைய பெயரைச் சொல்லி ஒரு கடைக் காரரிடம் விசாரித்ததில், “நம்ம பாய் மொதலாளியக் கேக்கியளா?’ என்று எதிர்த்த கடையைக் கை காட்டுகிறார்.

சான்ராஜாவுடைய இன்றைய பெயர் பாய் முதலாளியா! ஆஹா!

கூலித் தொழிலாளியாளிருந்து, உழைப்பால் உயர்ந்து முதலாளியாகிவிட்ட அவனை நினைத்துப் பூரிக்கிற நெஞ்சோடு எதிர்த்த கடையில் கல்லாவிலிருந்த டீன் ஏஜரை எதிர்கொண்டு, “சான்ராஜா....’ என்று நான் இழுக்கவும், “வாப்பா இல்லியே’ என்கிறான் அவன்.

சான்ராஜாவுடைய கடைக்குட்டிப் பையனாயிருக்க வேண்டும்.

“வாப்பா எங்க போயிருக்காங்க தம்பி?”

“காய் பாக்கப் போயிருக்காவ. நீங்க எங்கயிருந்து வாறிய?”

“மெட்ராஸ்லயிருந்து வாறேன் தம்பி. ஒங்க வாப்பாவோட அந்தக் காலத்து தோஸ்த் நான். வாப்பா வாறதுக்கு நேரமாகுமோ?”

“வெள்ளன பேய்ட்டாவ. இன்னும் ஒரு மணி நேரத்ல வந்துருவாவ. இரிங்க, வந்துருவாவ.”

“வரட்டும் தம்பி. ஒரு அவர் ஆகும்ல்ல, அது வரக்யும் நா நம்ம ஊரச் சுத்திப் பாத்துட்டு வாறேன்.”

“வாப்பா வந்தா ஒங்கப் பேர் என்னண்டு சொல்ல?”

“ஹீரான்னு சொல்லு.”

சொல்லிவிட்டு நான் ஊர் சுற்றக் கிளம்பினேன்.

வடக்கு பஜாரிலிருந்து தெற்கு பஜாருக்கு நடந்து, முருகன் ஸ்டோர், பொன்னையா பிள்ளை ஸ்டோர் வழியாக லூர்து நாதன் சிலைக்கு வந்தேன்.

நான் படித்த சேவியர்க் கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் மேல் போலீஸ்காரர்கள் அராஜகம் புரிந்த போது வெகுண்டெழுந்து போராடி உயிரைவிட்ட மாணவர்த் தலைவன் லூர்து நாதன். காமராஜர் திறந்து வைத்த சிலை.

லூர்து நாதனிடம் விடைபெற்றுக் கொண்டு கட்டபொம்மன் சிலைக்கு வந்து, அங்கிருந்து சரோஜினி பார்க், சேவியர்க் கல்லூரி, நம்ம ஆரம்ப காலக் கான்வென்ட் வழியாக மலரும் நினைவுகளின் சுகமான சுமையோடு திரும்பவும் மஹாத்மா காந்தி மார்க் கெட்டுக்குள் புகுந்து, பழ மண்டிக்குள் பிரவேசித்தால், அங்கே சான்ராஜா!

“எலேய், ஹீரா, நீயா!’ என்று என்னை இழுத்துக் கட்டிக் கொண்டான்.

வாழைக் குலைகளைச் சுமந்து சுமந்து முறுக் கேறிப்போன உடம்பு, இப்போது முதலாளியான பின்னால் டச் விட்டுப் போனதால் கொஞ்சம் தளர்ந்திருந்தது.

“பாத்து எத்தன வருஷம் ஆச்சு டேய், நீ காலேஜ்ல படிச்சிட்டிருந்தப்ப ஒரு நா இதே மார்க்கெட்ல பாத்தோம் ஞாபகமிருக்கா?”

“ஆமா, நீ பாத்தும் பாக்காதது மாதிரிப் போனியே!”

“நல்லா ஞாபகம் வச்சிர்க்கியே டேய், அப்ப ரொம்பக் கஷ்டத்ல இருந்தேன். இப்பக் கொஞ்சம் சுமாரான வசதியோட இருக்கேன், சொந்தத்ல கட வச்சிர்க்கேன். நீ அன்னிக்கிப் பாத்த மாறியே காலேஜ்ப் பையனாட்டம் இருக்கியே டேய்! நாந்தான் கெழவனாய்ட்டேன். சரி வா, வூட்டுக்கு போவோம். சாப்ட்டுக்கிட்டே பேசலாம்.”

“சாப்பாடெல்லாம் வேண்டாம்ப்பா. நா ஊருக்குக் கெளம்பணும்.”

“இந் நேரத்ல எந்த ரயில் இருக்கு?”

“ரயில் இல்ல. பஸ்.”

“மெட்ராஸ்க்கு பஸ்லயா போறா?”

“மெட்ராஸ் இல்ல, ராஜபாளையம். அங்கயிருந்து பொதிகை எக்ஸ்ப்ரஸ்ஸப் புடிக்கணும்.”

“அதுக்கென்ன, பட்னியாவா போவா? வூட்டுக்கு வந்து சாப்ட்டுட்டுக் கெளம்பலாம்.”

“இல்லப்பா, பஸ்ல போறப்ப நா ஒண்ணும் சாப்புடறதில்ல. அப்பறம் வயிறு தகராறு பண்ணிரும். ஒன்னப் பாத்ததே போதும். நெஞ்சும் வயிறும் நெறஞ்சு போச்சு. டைம் ஆயிட்டிருக்கு பார்.”

“இதென்ன டேய், நீ வலது கைல வாட்ச் கட்டியிருக்கா! ஒன்னோட ஸ்டைல் தனிதாம் போல.”

“நீ மட்டும் ரெண்டு கைலயும் வாட்ச் கட்டிக்கிட்டு வரலியா!”

பழசை நான் லேசாய்க் கிண்டி விடவும், சான்ராஜா பெரிதாய்ச் சிரித்தான். குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான். என்னைக் கட்டிக் கொண்டு சிரித்தான்.

வாட்ச் கதையோடு, அவனுக்கு அவனுடைய ஏரோப்ளேன் கதையுங்கூட ஞாபகத்துக்கு வந்திருக்கும்!

சிரித்து ஓய்ந்த பின்னால், “ஆமாண்டேய், மெட்ராஸ்ல என்ன யாவாரம் பண்ணிட்டடிக்கா?’ என்றான்.

“அண்ணா நகர்ல கன்னா பின்னான்னு ஒரு கட வச்சிருக்கண்டு யாரோ எப்பவோ சொன்ன மாறி ஞாபகம்....”

“வச்சிருந்தேன். நஷ்டமாப் போச்சு, இப்ப மூடியாச்சு.”

“அதுக்கென்ன, திரும்பவும் ஒரு யாவாரம் செட்டப் பண்ணு. மறுபடி டாப்ல வந்துருவா. நல்லவங்கள ஆண்டவன் கைவுட மாட்டான். சரி, இப்ப எப்டி நேரம் போவுது?”

“பத்திரிகைகளுக்குக் கத எழுதிட்டிருக்கேன். காலம் ஓடுது.”

“அப்ப, என்னப் பாத்ததையும் கதயா எழுதிருவா?”

“நிச்சயமா. ஆரம்பத்லயிருந்து எழுதுவேன்.”

“ஆரம்பத்லயிருந்துன்னா?”

“ஏரோப்ளேன் கதயிலயிருந்து.”

“எலேய், சேட்டக்காரப் பய டேய் நீ. எழுது எழுது. கத, புஸ்தகத்ல வந்தா எனக்கொரு புஸ்தகம் அனுப்பி வையி டேய்.”

“கட்டாயமா அனுப்பறேன் சான்ராஜா. அப்ப நா கௌம்பட்டுமா?”

“ஏமாத்திப்புட்டு ஓடப்பாக்கா. சரி, கௌம்பு. இந்தா நம்பக் கார்ட வச்சிக்க. அடுத்த வாட்டி வர்றப்ப போன் போட்டுட்டு வா. வந்து, நம்ம வூட்ல தங்கிட்டு சாப்ட்டுட்டுப் போவணும் என்ன?”

முன்னொரு காலத்தில், எங்களுடைய பங்களா வீட்டின் கேட்டின் மறைவில் நின்று, நான் தின்றது போக எஞ்சியதை வாங்கித் தின்றவன், இன்றைக்கு எனக்குச் சொல்கிற விருந்தோம்பல் வார்த்தைகளில் என் கண்கள் பனிக்கப் பார்க்கின்றன.

“பஸ் ஸ்டாண்டுக்கு எப்டிப் போறா?’ என்றவனுக்கு, “டவுன் பஸ்’ என்று சுருக்கமாய் நான் பதில் சொன்னதை அவன் ஆட்சேபிக்கிறான்.

“டவுன் பஸ்ல எப்டி டேய் போவா, இந்தா எம் மவனப் போய் பைக்ல வுட்டுட்டு வரச் சொல்லுதேன்.”

*

*சான்ராஜாவுடைய மகன் பஸ் ஸ்டாண்டில் டிராப் பண்ணி விட்ட பின்னால், கிளம்பத் தயாராயிருந்த ராஜபாளையம் பஸ்ஸில் ஏறிக் கொண்டு பையனுக்குக் கையசைக்கிறேன். சுகமான நினைவுகளோடு கண்களை மூடியபடி ஸீட்டில் சாய்கிறேன்.*

*திடீரென்று ஏதோ நினைப்பு வந்து, கண் விழித்துப் பார்த்தால், தச்சநல்லூர் ரோடில் பஸ் போய்க் கொண்டிருக்கிறது.*

*வெறுங்கையோடல்லவா நான் போய்க் கொண்டிருக் கிறேன் என்றொரு இடறல். அடடே. நான் பாளையங் கோட்டைக்கு வந்ததே நார்த்தங்காய் ஊறுகாய் வாங்குவதற்காக அல்லவா!*

*அட விடப்பா, எப்படிப்பட்ட புராதன சிநேகிதம் ஒன்றைப் புதுப்பித்து விட்ட சாதனையோடு பயணப்பட்டுக் கொண்டிருக்கிறாய்!*

*உறவுகளை விடவா டேய் ஊறுகாய் முக்கியம்!*

*(வடக்கு வாசல், ஃபிப்ரவரி 2009)*

# தலாக் தலாக் தலாக்

*“தப்புப் பண்ணிட்டேன் தங்கச்சி’ என்று கண்கலங்கினான் அம்ஜத், ஹஸீனாவைப் பார்த்ததும்.*

*“எவனோ ஒரு பாவி எழுதின மொட்டக் கடுதாசிய உண்மைன்னு நம்பி அவசரப்பட்டுட்டேன். அநியாயமா என்னோட ஆயிஷாவ இழந்துட்டேன்”.*

*ரெண்டு கைகளாலும் தலையைப் பற்றியபடி அம்ஜத் ஸோஃபாவில் தொம்மென்று உட்கார்ந்தான்.*

*அவனுக்கு எதிர்த்த ஸோஃபாவில் ஹஸீனாவும் அலியும் அமர்ந்தார்கள்.*

*கொஞ்ச நேரம் நிலவிய சங்கடமான மௌனத்தைக் கலைத்தாள் ஹஸீனா.*

*“அல்லாவால அனுமதிக்கப்பட்ட காரியங்கள்ளயே அல்லா வெறுக்கிற காரியம் விவாகரத்துதான்னு ஹதீஸ் இருக்குண்ணே. அந்த வெறுக்கத்தக்கக் காரியத்த நீங்க எப்டிச் செஞ்சீங்க. அதுவும் ஆயிஷா மாதிரி ஒரு உத்தமமான பொண்ண, நடத்தை சரியில்லன்னு அபாண்டமா குத்தஞ் சொல்லித் தலாக் சொல்லிட்டீங்க. நீங்க செஞ்ச பாவ காரியத்துக்கு ஆயிசுக்கும் ஒங்க மூஞ்சில முழிக்கக் கூடாதுன்னு இருந்தேன். இவங்க தான் சொன்னாங்க, நீங்க ஆயிஷவோட திரும்ப சேந்து வாழப் பிரியப்படறீங்க, அதப்பத்திப் பேசத்தான் எங்க ரெண்டு பேரையும் வரச் சொல்றீங்கன்னு. சரி, ஒரு ப்ராயச் சித்தத்துக்கு, ஒரு நல்ல காரியத்துக்கு நம்மாலான ஒத்தாசையச் செய்வோமேன்னுதான் நாங்க ரெண்டு பேரும் பொறப்பட்டு வந்தோம்.”*

*“ஆனா ஹஸீனா, அந்த ப்ராயச்சித்தத்துக்கு, அந்த நல்ல காரியத்துக்கு, எத்தனத் தடங்கல் இருக்கு தெரியுமா? எத்தன கண்டங்களக் கடக்க வேண்டியிருக்கு தெரியுமா?”*

*“இதுல தடங்கல் என்ன இருக்கு, கண்டங்களக் கடக்க என்ன இருக்கு அண்ணே? நீங்க அவளத் தலாக் சொன்னது தப்புன்னு உணர்ந்துட்டீங்க. திரும்பவும் ஆயிஷா கூட சேந்து வாழணும்னு மனப்பூர்வமா விரும்பறீங்க. அவளும் ஒங்களக் கணவனாத் திரும்ப அடையணும்னு தினமும் அஞ்சு நேரம் அல்லாவ வேண்டிட்டிருக்கா. அப்புறம் என்ன, ரெண்டு பேரும் திரும்பவும் நிக்காஹ் பண்ணிக்க வேண்டியது தான அண்ணே?”*

*“அது அவ்வளவு ஈஸியில்ல ஹஸீனா. தலாக் சொல்லி விலக்கப்பட்ட பொண்ணும் அவ புருஷனும் திரும்பவும் சேந்து வாழணும்னு விரும்பினா, அந்தப் பொண்ணு இன்னொரு ஆம்பளக்கி நிக்காஹ் பண்ணி வக்யப்பட்டு, அப்புறம் அந்த ஆம்பளயால தலாக் சொல்லப்பட்ட பின்னால தான் ஒரிஜினல் புருஷனத் திரும்பவும் கல்யாணம் பண்ணிக்க முடியும்.”*

“அப்டி ஒரு சம்பரதாயம் இருக்கா இதுல!’ என்று ஹஸீனா யோசனையில் ஆழ்ந்தாள். தான் எதிர்பார்த்த அதிர்வு ஹஸீனாவிடம் நிகழாதது அம்ஜதுக்கு உணர்த்தியது, தான் சொன்னதை அவள் முழுமையாய்ப் புரிந்து கொள்ளவில்லையென்பதை. அவன் அவளுக்கு உணர்த்தத் தலைப்பட்டான்.

“தங்கச்சி, நா சொன்னத நீ முழுசாப் புரிஞ்சிக்கலன்னு நெனக்கிறேன். அந்த டெம்ப்பரரி நிக்காஹ், ஜஸ்ட் சம்பரதாயம் இல்லம்மா. அந்தக் கல்யாணம் பூரணத்துவ மடையணும். அதாவது, அந்தப் பொண்ணு அந்த மாப்பிள்ள கூடப் படுத்துக்கணும். அதாவது, W**hy should a woman undergo torture for a man s blunder?**”

“வாட்?’ டென்று துடித்து எழுந்து நின்றாள் ஹஸீனா.

“என்ன அண்ணே சொல்றீங்க நீங்க!”

“ஆமா தங்கச்சி. அப்டித்தான் நம்ம மார்க்கம் சொல்லுதாம். நா நம்மப் பேஷ் இமாம்ட்டக் கூடக் கேட்டேன். அவரும் அப்டித்தான் சொல்றார். அதான் எனக்கு ரொம்ப வேதனையா இருக்கும்மா. ஐ ட்ஹஸ்ங் க்ர்ய்ங் ஹ ஞ்ழ்ங்ஹற் க்ஷப்ன்ய்க்ங்ழ், ள்ண்ள்ற்ங்ழ்.”

“இது கொடுமை அண்ணே. தான் மனசார விரும்பற புருஷன் ஒருத்தன் இருக்க, ஒரு பொண்ணு எவனோ ஒரு அந்நிய ஆம்பளயோட படுத்துக்கணும், செக்ஸ் வச்சுக்கணும்னு நிர்பந்திக்கிறது காட்டுமிராண்டித்தனம். ஆத்திர அவசரத்ல தப்பு செய்றது ஆம்பள, நரகத்த அனுபவிக்கிறது பொம்பளையா? ரட்ஹ் ள்ட்ர்ன்ப்க் ஹ ஜ்ர்ம்ஹய் ன்ய்க்ங்ழ்ஞ்ர் ற்ர்ழ்ற்ன்ழ்ங் ச்ர்ழ் ஹ ம்ஹய்’ள் க்ஷப்ன்ய்க்ங்ழ்?”.

“கொடுமையோ, காட்டுமிராண்டித்தனமோ, இதெல்லாம் தெரிஞ்சிருந்துங்கூட மடையன் நா அவசரப்பட்டுட்டேனே தங்கச்சி. இப்ப வேற வழியே இல்லியேம்மா, நா என்ன செய்றது!”

கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு நிற்க, கன்னங்கள் அதிர, நின்று கொண்டிருக்க முடியாமல் ஹஸீனா ஸோஃபாவில் விழுந்தாள்.

பக்கத்திலிருந்த அலி, அவள் கையைப்பற்றி அழுத்தி, சாந்தப் படுத்துகிற முயற்சியிலிருந்தான்.

எதிரில் அம்ஜத், தலை கவிழ்ந்து இருந்தான்.

உணர்ச்சிகள் கொஞ்சம் தணிந்த பிறகு ஹஸீனா பேசினாள்.

“அண்ணே, ஆயிஷா ஒங்களோட ஒய்ஃப் மட்டுமில்ல. எனக்கு உயிர்த்தோழியும் கூட. இப்டியொரு அசிங்கத்த அவ அனுபவிக்கிறத என்னால யோசிச்சிப் பாக்கவே முடியல அண்ணே. ஒங்க அவசர புத்தியினால இப்டியொரு கேவலத்துக்கு அவளத் தள்ளிட்டீங்களே அண்ணே!”

“என்னோட ஆயிஷாவ எவனோ ஒருத்தனுக்கு வலியப் பெண்டாளக் குடுக்கப் போறோமேங்கறது எனக்கு மட்டும் வேதனையாயும், கொடுமையாயும் இல்லியா ஹஸீனா? ஆனா வேற வழியே இல்லியேம்மா! எனக்கு ஆயிஷா திரும்ப வேணும், அவளுக்கும் நா வேணும். அதுக்கு இந்த ரூட்ல தானேம்மா போயாகணும். நீ தான் ஹஸீனா ஆயிஷாவப் பாத்துப் பக்குவமா எடுத்துச் சொல்லணும். இந்த

*ஏற்பாட்டுக்கு அருவறுப்புப் பட்டுக்கிட்டு அவ எந்த விபரீதமான முடிவுக்கும் போயிரக்கூடாது. ஆயிஷா இல்லாம எனக்கு வாழ்க்கையே இல்ல தங்கச்சி."*

*"இப்பக் காதல் வசனம் பேசறீங்க. தலாக் சொல்லும் போது இது ஏன் தோணாமப் போச்சுண்ணே."*

*"அதான் புத்தி கெட்டுப்போய்ட்டேனேம்மா. அதுக்குத் தானேம்மா இப்ப சித்ரவத அனுபவிக்கிறேன்."*

*"நீங்க அனுபவிக்கிறது ஒண்ணும் சித்தவத இல்ல. ஆயிஷா அனுபவிக்கப் போறது தான் சித்ரவத. முன்னே பின்னே தெரியாத ஒரு ஆம்பள கூட படுத்து... ஐயே, நெனச்சுப் பாக்கவே முடியல."*

*"சாரா அபுபக்கர்னு ஒரு கன்னட ரைட்டர் எழுதின நாவல் ஒண்ணு நேத்து வாசிச்சேன் தங்கச்சி."*

*"அது ரொம்ப முக்யமா இப்ப?"*

*"சொல்றேன் கேளு. தலாக் பத்தின கதை தான்.*

*நம்மப் பிரச்சனை மாதிரியே ஒரு ஸிச்சுவேஷன்.*

*அந்தப் பொண்ணு, தன் புருஷனோட திரும்ப சேந்து வாழணும்ங்கறதுக்காக, அந்த ஒரு நாள் நிக்காவுக்கு சம்மதிக்கிறா. நிக்காஹ் அன்னிக்கி ராத்திரி, தன்னோட "மாப்பிள்ள' யார்னு பாக்கணும்னு, விருந்து நடக்கறப்ப எட்டிப் பாக்கறா. அந்த மாப்ள ஒரு அசிங்கமான உருவம். டீஸன்ட்டா சாப்பிடக்கூடத் தெரியாத காட்டான். இவளுக்குக் குமட்டிக்கிட்டு வருது. இந்த அருவறுப்பான ஜென்மத்தோடயா இன்னிக்கி நைட் நா படுத்துக்கணும்னு நெனச்சு அழுவுறா. அப்புறம், ராத்திரியோட ராத்திரியாக் காணாமப் போயிர்றா. அடுத்த நாள் ஆத்தங்கரைல அவளோட பொணம் கெடக்கு. இந்த மாதிரி ஒரு முடிவு என்னோட ஆயிஷாவுக்கு வந்துரக்கூடாது தங்கச்சி. அதனால.... "*

*"அதனால?"*

*"அதனால நீ இன்னொரு உதவியும் எனக்கு செய்யணும் தங்கச்சி. நீ மட்டுமில்ல, நீங்க ரெண்டு பேரும். அதுக்குத்தான் ஒங்க ரெண்டு பேரையும் சேந்து இன்னிக்கி வரச் சொன்னேன்."*

*அம்ஜதின் பார்வை அலியின் மேல் பதிந்து நிற்கவும், அலி கலவரமானான்.*

*"அம்ஜத், என்ன அப்டிப் பாக்காத. நீ பாக்கறதப் பாத்தா, நாந்தான் ஆயிஷாவுக்கு அந்த ஒரு நாள் மாப்பிள்ளயா இருக்கணும்னு சொல்ற மாதிரி இருக்கு. அல்லா, நம்மால முடியாதப்பா. ஆள வுடு, நா கௌம்பறேன்."*

*விருட்டென்று எழுந்து நின்ற அலியின் தோள்களைப் பற்றி அழுத்தி அமர்த்தினான் அம்ஜத்.*

*"அலி, அலி, ஒன்ன விட்டா இந்த விஷயத்ல எனக்கு ஹெல்ப் பண்றதுக்கு யாருமே இல்ல நண்பா. யாரோ முன்னே பின்னே தெரியாத அயோக்யன் ஒருத்தன் என்னோட ஆயிஷாவ அனுபவிச்சிட்டுப் போறத நா எப்டி சகிச்சிக்க முடியும் அலி."*

“அதுக்கு? அவள அனுபவிக்க என்ன நீ நிர்பந்திக்கிறியா? ஆயிஷாவ நா ஸிஸ்டர் மாதிரிப் பாக்றேன்னு ஒனக்குத் தெரியாதா அம்ஜத்?”

“அட, ஆபத்துக்குப் பாவமில்லடா அலி. ஹஸீனா, நீ சொல்லும்மா. என்னம்மா நீயும் என்ன அப்டிப் பாக்கற. ஒன்னோட உயிர்த்தோழிக்காக ஒம்புருஷன நீ ஒரெயொரு நைட்டுக்கு விட்டுக் குடுக்கத்தான் வேணும்மா. அதோட, இந்தப் பயலையும் ஒன்னோட தோழியையும் நீ தான் சம்மதிக்க வக்யணும்.”

அம்ஜத், அலியின் தோள்களைப் பற்றியிருந்த கைகளை எடுத்து, ஹஸினாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான்.

“ப்ளீஸ் தங்கச்சி. எனக்கும் ஆயிஷாவுக்கும் புது வாழ்வு குடுக்கிறது ஒங்கைலதாம்மா இருக்கு. ஒன்னோட தோழி எவனோ ஒருத்தன் கூட படுக்கையப் பகிர்ந்துக்கிறது ஒனக்கே அருவறுப்பாத் தானே இருக்கு. அலியப் பார். அழகு இருக்கு, அறிவு இருக்கு, அந்தஸ்து இருக்கு. நல்லவன், நாணயமானவன், நாகரீகமானவன். அலின்னு சொன்னா ஆயிஷாவும் கொஞ்சம் கீழ எறங்கி வருவா. ரொம்ப யோசிக்க மாட்டா. அவளுக்கு நா வேணுமில்லியா! அவள சம்மதிக்க வச்சிரலாம். அது ஒன்னால தான் முடியும் ஹஸீனா. ப்ளீஸ்ம்மா. ஒக்கே சொல்லும்மா. நாலு மனைவிகளக் கட்டிக்கிர்றதுக்கு இஸ்லாத்ல அனுமதியிருக்கு. ஆயிஷாவ நிக்காஹ் செஞ்சிக்கிட்டு ஒடனே அலி அவளுக்குத் தலாக் சொல்லிருவான். கொஞ்சம் பெரிய மனசு பண்ணும்மா.”

ஹஸீனா சலனமில்லாமலிருந்தாள். பிறகு, அருகிலிருந்த அலியைத் திரும்பிப் பார்த்தாள். அலி அவளைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினான்.

பொறுமையிழந்து அம்ஜத் திரும்பவும் கெஞ்சினான்.

“சரின்னு சொல்லு ஹஸீனா. நீ சொன்னா அலி கேப்பான். ஆயிஷாவும் கேப்பா.”

“அதப்பத்தி இன்ஷா அல்லாஹ் நா யோசிக்கிறேன், கொஞ்சம் டைம் குடுங்கண்ணே’ என்றாள் ஹஸீனா.

“இத்தனை ப்ரச்சனைக்கும் காரணமான, பாவச் சின்னமான அந்த மொட்டக் கடுதாசியக் கொஞ்சம் குடுங்களேன் அண்ணே, நானும் அதக் கொஞ்சம் பாக்கறேன்.”

சட்டைப் பாக்கெட்டில் நாலாய் மடித்து வைத்திருந்த கடிதத்தை எடுத்து நிமிர்த்தி அம்ஜத், ஹஸீனாவிடம் நீட்டினான்.

வெறுப்புடன் ஹஸீனா கடிதத்தை வாசித்துப் பார்த்தாள்.

அருகில் அலி, அக்கறையில்லாமல் இருந்தான்.

ஒரு முறைக்கு ரெண்டு முறை கடிதத்தை வாசித்துவிட்டு அம்ஜதிடம் திருப்பிக் கொடுத்த பிறகு, ஹஸீனாவும் அலியும் கிளம்பினார்கள்.

*

காரில், டிரைவர் ஸீட்டில் ஹஸீனா.

*பக்கத்திலிருந்த அலியிடம் பேச்சுக் கொடுத்தாள், அவன் பக்கம் திரும்பாமலேயே.*

*"நீ சொன்னா அலி கேப்பான்னாங்களே அண்ணன், நா சொன்னாத்தான் நீங்கக் கேப்பீங்களாக்கும்?"*

*"என்ன, கிண்டல் பண்றியா? இந்த விஷயத்ல நீ சொன்னாலும் நா கேக்க மாட்டேன். யார் சொன்னாலும் கேக்க மாட்டேன்."*

*"நிச்சயமா?"*

*"நிச்சயமா."*

*"ஆயிஷா மேல ஒங்களுக்கு ஒரு கண்ணு இருந்தது, இருக்குங்கிறது உண்மை தானே?"*

*"ஒளராத. ரோடப்பாத்து வண்டிய ஓட்டு."*

*"ஆயிஷாவ அடையணும், ஒரு தடவையாவது அவள அனுபவிக்கணும்னு ஒங்களுக்கு ஆசை இருந்ததில்லன்னு அல்லா மேல சத்யம் பண்ணிச் சொல்லுங்க?"*

*"அல்லா மேல எல்லாம் சத்யம் பண்ணக் கூடாது. ஒனக்கு மூள மழுங்கிருச்சி, வாய மூடிக்கிட்டு வா."*

*"ஒங்களுக்கு அழகு, அறிவு, அந்தஸ்து எல்லாம் எக்கச்சக்கமா இருக்கறதா அடுக்கிக்கிட்டே போனாங்களே அண்ணன்!"*

*"அதுக்கென்ன இப்ப?"*

*"அதுக்கு ஒண்ணுமில்ல. அடுத்த படியா சொன் னாங்களே, நல்லவன், நாணயமானவன், நாகரீகமானவன்னு, அங்க தான் ஒதக்கிது."*

*"ஏன், நா நல்லவனில்லியா, நாணயமானவனில்லியா, நாகரீகமானவனில்லியா?"*

*"நல்லவர், நாணயமானவர், நாகரீகமானவர் மொட்டக் கடுதாசி எழுதலாமோ?"*

*"ஏய், என்ன பினாத்ற, அறஞ்சன்னா பல்லு கில்லு எல்லாம் பேந்துரும் தெரியுமா."*

*"கையக் கொஞ்சம் மடக்கி வைய்ங்க சார். உணர்ச்சி வசப் படாதீங்க. ஆயிஷாவோட ஒரே ஒரு நைட்டாவது இருந்துரணும்னு ஒங்களுக்கு இருந்த வெறியில நீங்க அம்ஜத் அண்ணனோட அவசரப் புத்திய பயன்படுத் திக்கிட்டீங்க. ஆயிஷாவோட நடத்தையப் பத்தி ஒரு கதை கட்டி மொட்டக் கடுதாசி ஒண்ணட் டைப் பண்ணி அண்ணனுக்கு அனுப்பிச்சீங்க. ஆத்திரத்ல அண்ணன் ஸிம்ப்பிளா மூணு தலாக் சொல்லி ஆயிஷாவக் கழட்டி விட்ருவார், அப்புறம் தன்னோட தப்பை ரியலைஸ் பண்ணி ஆயிஷாவோட திரும்பவும் வாழணும்னு வேகமாயிருப்பார், திரும்பவும் அவள நிக்காஹ் பண்ணனும்னா ஆயிஷா இன்னொருத்தன நிக்காஹ் செஞ்சு ஒரு தடவையாவது செக்ஸ் வச்சிக்கணும்ங்கற கண்டிஷன், எல்லாமே ஒங்களுக்குத் தெரியும். அந்த ஒரு நாள் மாப்பிள்ளையா*

இருக்க அவரோட பெஸ்ட் ஃப்ரண்டான ஒங்கள, அழகு அறிவு அந்தஸ்து எல்லாம் உள்ள ஒங்களத் தான் அண்ணன் விரும்புவார்ங்கறது ஒங்கக் கணக்கு. இந்த நிமிஷம் வரக்யும் ஒங்கக் கணக்குக் கரெக்ட். அம் ஐ ஸ்ரீர்ழ்ழ்ங்ஸ்ரீற்?"

"யேய் சனியனே, வண்டியத் திருப்பு. இப்பவே அம்ஜதப் பாத்து என்னால ஏலாது, வேற ஆளப்பார்றான்னு சொல்லிட்டு வந்துர்றேன்."

"அவசரப் படாதீங்க டாளிங். அந்த மொட்டடக் கடுதாசிய நா படிச்சிப் பாத்தேனே."

"ஸோ?"

"அது கம்ப்யூட்டர்ல டைப் பண்ணின கடிதம்."

"ம்."

"அதுல ஒரு டைப்பிங் மிஸ்ட்டேக் இருக்கு. அத அப்டியே விட்டிருக்கலாம். விட்டுராம, பேனாவால திருத்தியிருக்கீங்க, ஒங்கக் கையெழுத்துல."

இறுதி வார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுத்ததோடு ஹஸீனா காரை ஓரங்கட்டி பிரேக்கை அழுத்தினாள். பிறகு பக்கவாட்டில் முகத்தைத் திருப்பிக் கணவனின் முகத்தைப் பார்வையால் ஊடுருவினாள்.

காரின் ஏஸிப் பனியிலும் அலியின் முகம் பூராவும் வியர்வை வியாபித்திருந்தது.

நிதானமாய் ஹஸீனா அவனைக் கேட்டாள்:

"என்ன, வண்டியத் திருப்பட்டுமா?"

(கவிதை உறவு, ஃபிப்ரவரி 2009)

# ஏற்றமிகு ஏத்தம்பழம்

*அதிகாலை எட்டரை மணிக்குக் கதவு தட்டப்பட்டது.*

*ஹாலில் படுத்துக் கிடந்தவன், சலிப்போடு எழுந்து கதவைத் திறந்தால், எதிரே பக்கத்து ஃப்லாட் பாப்பா.*

*“தா, ஒனக்கு ஃபோன் வந்திருக்கு. சீக்கிரமா வந்து பேசித் தொல. வீட்டப் பூட்டிட்டு நா ஆஃபீஸ்க்குக் கெளம்பணும்’ என்று திருவாய் மலர்ந்தருளினாள்.*

*இவன், “கொஞ்சம் இரு, மூஞ்சியக் கழுவிட்டு வந்துர்றேன்.’ என்றதற்கு, “கழுவுனாலும் ஒம் மூஞ்சி அப்டியேத்தான் இருக்கும். விருட்னு வா நா கெளம்பணும்’ என்று துரிதப்படுத்தினாள்.*

*அவள் பின்னாலேயே போய் இவன் ரிஸீவரை யெடுத்தால், மறுமுனையில், கிளர்ச்சியூட்டுகிற ஒரு பெண் குரல், “ஞான் திருவனந்தபுரத்லருந்து பேசறேன்’ என்றது.*

*ஆஹா, நம்ம அத்தை பொண்ணு!*

*“ம்’ என்று மட்டுமே மறுமொழி தந்து விட்டு அந்தக் குரல் தந்த கிறக்கத்திலும், குரலுக்குரியவளின் முகம் மனசுக்குள் மலர்ந்து தந்த மயக்கத்திலும் இவன் வார்த்தைகளற்றுப் போக, விரைவாய் அவள் விஷயத்தைச் சொல்லி விட்டு ஃபோனை வைத்து விட்டாள்.*

*பக்கத்திலே நின்றபடி இவனுடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த இவள், “பொம்பளக் கொரல் மாதிரி இருந்துச்சு?’ என்று ஆழம் பார்த்தாள்.*

*“ம்? ஆமா, பொம்பளக் கொரல் தான்’ என்றான் அலட்சியமாய்.*

*“பேச்சு மூச்சில்லாம நீ பரவச நிலைல இருந்த?”*

*“பரவச நிலையா? சொர்க்கத்துக்கேயில்ல ஒரு ட்ரிப் போய்ட்டு வந்துட்டேன். ஐயாவோட மொறைப் பொண்ணுல்ல பேசறா!”*

*“மொறைப் பொண்ணா! எங்கயிருந்தோ?”*

*“எங்கயிருந்துன்னா ஒனக்கென்ன? நீ வீட்டப் பூட்டிட்டு ஆஃபீஸ்க்குக் கெளம்பு.”*

*“ஆஃபீஸ்க்கு லேட்டாப் போனாப் பரவாயில்ல. சொல்லேன் ப்ளீஸ், உண்மையிலேயே மொறைப் பொண்ணா?”*

“ஆமா ஆமா ஆமா. என்னோட அத்தை பொண்ணு. திருவனந்தபுரத்ல ஒரு மல்ட்டி நாஷனல் கம்ப்பெனில எக்ஸிக்யூட்டிவ்வா இருக்கா. இங்க மெட்ராஸ்ல ஒரு செமினார்க்காக நாளக்கி வர்றா. ஐயாதான் அவளுக்கு எஸ்க்கார்ட். நாளக்கி ஃபுல் டே ஐயா அவளோட தான்.”

“நைட்ல?”

“ம்? நைட்ல ஒன்னோட.”

“ச்சீ. அடல்ஸ் ஒன்லியெல்லாம் பேசாத. நாளக்யே அவ திரும்பிப் போயிர்றாளா?”

“அவ போனா ஒனக்கென்ன, போகாட்டி ஒனக்கென்ன? எனக்கு இப்ப வேல நெறைய இருக்கு. நா பல்லு வெளக்கணும், பாத்ரூம் போணும், ஷேவ் பண்ணனும், குளிக்கணும், நாளக்கி அதுக்கெல்லாம் நேரம் இருக்காது. ஒங்கூட வெட்டிப் பேச்சு பேசிட்டிருக்க இப்ப எனக்குட் டைம் இல்ல. நா வறேன். நீ ஆஃபீஸ்க்குக் கெளம்பு.”

ஜாலி மூடில் இவன் வெளியேறினான்.

“இனிமே ஃபோன் கீன் வந்தா ஒனக்கு சொல்றேனா பாரு’ என்றொரு பரிதாபக் குரல் முதுகுக்குப் பின்னே கேட்டது.

ராத்திரி அப்பாவிடம், “அப்பா அர்ஜன்ட்டா எனக்கொரு செல்ஃபோன் வாங்கணும்’ என்றான்.

“வாங்கு’ என்றார்.

ஹ்ம். அனுமதியா தேவை இவனுக்கு?

ஆயிரங்களல்லவா தேவை!

“நம்ம வீட்ல ஒரு லாண்ட் லைன் ஃபோன் வக்யணும்ப்பா’ என்றான்.

“எல்லாம் வக்யலாம்’ என்று ஒப்புதல் அளித்தார்.

“வேலவெட்டியில்லாம நீ ஊரச்சுத்திட்டிருக்காம சட்டு புட்டுன்னு ஒரு வேலயப் பாத்து செட்டில் ஆகு. ஒம் மொத சம்பளத்ல ஜாம் ஜாம்னு ஃபோன் வச்சுருவோம்.”

நண்பர்களின் நள்ளிரவு அரட்டை அரங்கத்தில், அடுத்த நாள் வரப்போகிற அத்தை மகள் பற்றி மூச்சே விடவில்லை.

விஷயம் தெரிந்தால் பசங்க பொறாமையில் பொருமுவார்கள்.

ஹிடன் அஜெண்டா ஒன்று போட்டாலும் போட்டுருவாங்க.

ஆனால் ஞாபகமாய் ஒரு நண்பனிடம் ரூட் போட்டு ஓஸி பைக் வாங்கிக் கொண்டான்.

*இன்னொருவனிடம் கெஞ்சிக் கூத்தாடி, இருபத்தி நாலே இருபத்து நாலு மணி நேரத்துக்கு என்று சொல்லி அவனுடைய செல்ஃபோனைக் கைப்பற்றிக் கொண்டான்.*

*

*அனந்தபுரி எக்ஸ்ப்ரஸ் வழக்கம் போல ஒரு மணி நேரம் லேட்.*

*பரவாயில்லை. காதலிக்காகக் காத்திருப்பதில் ஒரு த்ரில் இருக்கத்தானே செய்கிறது! காத்திருந்தான்.*

*ரயில், ப்ளாட்ஃபாமுக்குள் பிரவேசித்தபோது, வழி விடு வழி விடு வழி விடு, என் தேவி வருகிறாள் என்று ஹம்ம்மியபடியே, கூட்டத்தை விலக்கிக் கொண்டு செகண்ட் ஏஸியை சமீபித்தான்.*

*அவளாக இறங்குகிறவரை இவனுக்குப் பொறுமை யில்லை.*

*ஏஸிப் பெட்டிக்குள்ளே அத்துமீறி நுழைந்து அத்தை மகளைப் பார்த்து “ஹாய்’ என்றான். பதிலுக்கு அவளும் ஒரு ஹாய் போடுவாள் என்று நினைத்திருந்தவனுக்கு ஏமாற்றம் தந்து விட்டுப் பாவி, அதிரடியாய் இவனுடைய கையைப் பற்றிக் குலுக்கி இவனைப் பரவசப்படுத்திப் பரலோகத்துக்குப் பார்சல் பண்ணி விட்டாள்.*

*ஸிம்ப்பிளாய் ஒரேயொரு சின்ன ஸþட்கேஸ்.*

*பைக்கின் முன் பகுதியில் பெட்ரோல் டாங்க்கின் மேலே வைத்துப் பட்டும் படாமலும் அணைத்துக் கொண்டான், ஸþட்கேபிஸ.*

*“பைக் புதுசாத் தெரியுது?’ என்று ஆச்சர்யப்பட்டாள்.*

*“ஜோரா இருக்குல்ல?’ என்று தலை முடியைச் சிலுப்பி விட்டுக் கொண்டான்.*

*“பத்தே நாள் தான் ஆச்சு டெலிவரி எடுத்து.”*

*“ம்.”*

*“வீட்டுக்குத்தானே?”*

*“யார் வீட்டுக்கு?”*

*“ம்? நம்ம வீட்டுக்குத்தான்.”*

*“ஸô்ரி டா, (டாவா? அடடா, ரொம்ப ரொம்ப நெருங்கி வந்துட்டாளே!) இப்பவே லேட் ஆயிருச்சு. செமினார்க்கு ரொம்ப லேட் ஆயிரும். டைம் இருந்தா ஈவ்னிங் பாப்போம். பார்க் ஷெராட்டன் ஹோட்டே லுக்குப் போகணும். அங்கயே போய் ரெஃப்ரஷ் பண்ணிக்குவேன். வழில மெட்ராஸ் யுனிவர்ஸிட்டி மெரீனா காம்ப்பஸ்ல ஒரு அஞ்சு நிமிஷம். பீச் ரோட்ல போ. கொஞ்சம் ஃபாஸ்ட்டாப் போ.”*

*ஃபாஸ்ட்டாப் போவதற்கு இவனுக்கு சொல்லியாத் தரணும்!*

*“கெட்ட்ட்டியாப் புடிச்சிக்க’ என்றான். ஆஹா, பிடித்துக் கொண்டாள்.*

இண்டு இடுக்குளில் புகுந்து புறப்பட்டு வளைந்து நெளிந்து சாகசம் பண்ணினான்.

மவுன்ட் ரோடு வழியாய்ப் போனபோது, ஸ்பென்ஸர் ப்ளாஸôவைக் காட்டி, “இந்த பில்டிங்லதான் நம்ம ஆஃபீஸ் இருக்கு’ என்றான்.

“ம்’ என்றாள்.

“ஃபோர்த் ஃப்ளோர். ஃபுல் ஏஸி.”

“ம்.”

“ஒனக்காக இன்னிக்கி ஃபுல் டே லீவ் போட்டுட்டேன்.”

“ம்.”

*

பீச் ரோடில் பாய்ந்து போன போனது, இன்னும் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள். மோட்டார் சைக்கிளில் மேகங்களுக்கு மேலாய் மிதந்து போவது போலிருந்தது.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் மெரினா வளாகத்தில் குதித்து இறங்கி, “அஞ்சு நிமிஷம்’ என்று உள்ளே ஓடினாள்.

மெரினா வளாகத்தில் உட்கார்ந்து கதை பேசிக் கொண்டிருந்த இளம் போலீஸ்காரிகளின் மேல் பார்வை நிலைத்தது.

ஐயோ, நம்ம ஆளுக்குத் துரோகம் செய்யக் கூடாது என்று பார்வையைப் பிடுங்கியெடுத்துக் கொண்டு, வளாகக் கட்டிடத்துக்குள்ளே நோட்டம் விட்டான்.

கிறிஸ்தவத் தமிழ்த் துறை, உர்து, அரபி, பார்ஸித் துறை, தெலுங்குத் துறை, மலையாளத் துறை, கன்னடத் துறை என்று அந்தந்தத் துறைத் தலைவர்கள், முனைவர்களின் பட்டியலின் மேல் பார்வையை ஓட்டிய போது, கன்னடத் துறை கண்ணைக் கவர்ந்தது.

கன்னடத் துறைக்குக் கீழே இருந்த பெயர், டாக்டர் தமிழ் செல்வி.

கன்னடத் துறையில் தமிழ் செல்வியா! சபாஷ்!

தமிழ் செல்விக்கு சபாஷ் போட்டுக் கொண்டிருந்த போது, முதுகில் விழுந்தது செல்லமாய் ஒரு தட்டு.

திரும்பிப் பார்த்தால், இவனுடைய மலையாள செல்வி.

“நேரா பார்க் ஷெராட்டனுக்குப் பற’ என்றாள்.

பறந்தான்.

*

*அஞ்சு நட்சத்திர ஹோட்டேலில், அவளை உள்ளே அனுப்பி விட்டு லாபியில் உட்கார்ந்திருந்தான், அரை நித்திரையில், ஆனந்தமான ஏஸியில்.*

*ரெண்டு மணி சுமாருக்கு லாபிக்கு வந்தவள், "சாப்ட்டியா?' என்றாள்.*

*"எங்களுக்கு செமினார் ஹால்லயே லஞ்ச் ஸர்வ் பண்ணாங்க. நீ சாப்ட்டியோ என்னமோன்னு பாக்கத்தான் வந்தேன்."*

*"இதுக்காகவா இவ்ளோ தூரம் வந்த? என்னோட செல்ஃபோன்லயே கேட்டிருக்கலாமே? அடடே என்னோட நம்பர் ஒனக்குக் குடுக்கவேயில்ல பாத்தியா! சொல்றேன், ஃஸவ் பண்ணிக்கிறியா?"*

*"பராவயில்ல. இப்ப தேவையில்லியே. இங்கயே ரெஸ்ட்ராண்ட் இருக்கு புஃபே லஞ்ச் ப்ரம்மாதமா யிருக்கும்."*

*"இருக்காதா பின்னே!"*

*"சாப்ட்டுட்டு ரெஸ்ட் எடு. நா உள்ள போய்ட்டு வந்துர்றேன்."*

*ஹோட்டேலிலிருந்து வெளியேறி. எதிர் வாடையில் கோலகலமாய் நடந்து கொண்டிருந்த கையேந்தி பவனில் ஆம்லெட்டோடு ஃபுல் மீல்ஸ் ஒரு பிடி பிடித்து விட்டுத் திரும்பி வந்து லாபியில் திரும்பவும் குடியேறினான்.*

*செமினார் முடிந்து அஞ்சே முக்காலுக்கு வெளியே வந்தாள்.*

*"வீட்டுக்குப் போலாமா' என்றதற்கு, "ஐயையோ, ட்ரெய்னுக்கு லேட்டாயிரும்' என்று கையை உதறினாள்.*

*"அடுத்த தடவ வர்ற போது வீட்டுக்கு வர்றேன். மாமாட்டயும் அத்தட்டயும் ஸ்ரி சொல்லிருடா. இப்ப நேரா சென்ட்ரலுக்கு விடு."*

*பெர்மனன்ட்டா நம்ம வீட்டுக்கே வந்துவிடப் போகிறவள் தானேடீ நீ, அத்தை மகளே!*

*

*சென்ட்ரலுக்குப் போகிற வழியில் பேச்சுக் கொடுத்துக் கொண்டே போனான்.*

*"செமினார் சீக்கிரம் முடிஞ்சிருந்ததுன்னா சத்யம் காம்ப்ளக்ஸ்ல ஒரு இங்லீஷ் படத்துக்கு ஒன்னக் கூட்டிட்டுப் போகலாம்னு பாத்தேன்."*

*"ம்."*

*"அடுத்த தடவ நீ மெட்ராஸ்க்கு வர்றப்ப ஒரு ஷூட்டிங் பாக்கக் கூட்டிட்டுப் போறேன். நம்ம ஃப்ரண்ட் ஒருத்தன் சினிமா டைரக்டராயிருக்கான்."*

*"ம்."*

*"ரேடியோ மிர்ச்சில நம்பப் பசங்க ரெண்டு பேர் இருக்கானுங்க. நீயும் வந்துர்றா மச்சிங்கறாங்க. ஆனா எங்க ஆஃபீஸ்ல என்ன விடவே மாட்டேங்கறாங்க."*

*“ம்.”*

*

*சென்ட்ரலில், ட்ரிவேண்ட்ரம் மெய்லில் செகண்ட் ஏஸி கோச்சில் சார்ட்டைக் கூர்ந்து பார்த்து விட்டுப் பெருமூச்சு விட்டாள்.*

*“அப்பாடா, கன்ஃபம் ஆயிருச்சு. வெய்ட்டிங் லிஸ்ட் அஞ்சுல இருந்தது. கன்ஃபம் ஆகுமோ ஆகாதோன்னு பயந்துட்டே இருந்தேன்.”*

*“எதுக்கு அப்டி ரிஸ்க் எடுத்த? காலைலயே என்ட்ட சொல்லியிருந்தா ஈஸியா எமர்ஜன்ஸிக் கோட்டா ரிலீஸ் பண்ணியிருக்கலாம்ல?”*

*“ம்.”*

*ஏஸிப் பெட்டியில் ஏறிக் கொண்டாள்.*

*கூடவே இவனும் ஏறினான்.*

*ரயில் கிளம்புவதற்கு சிலவே சில விநாடிகள் இருக்கிற நேரம், விடை பெற்றுக் கொண்டு இவன் கீழே இறங்க விருந்தபோது, அவள் கைப்பையைத் திறந்தாள்.*

*ரெண்டு நூறு ரூபாய்த் தாள்களையெடுத்து இவனுடைய சட்டைப் பாக்கெட்டில் திணித்தாள்.*

*“பெட்ரோல் செலவுக்கு வச்சிக்க’ என்றாள்.*

*கல்கி, 15.02.2009.*

*(கன்ஃபர்ம் ஆயிடுச்சு)*